விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2041 மார்கழி 18 ஞாயிற்றுக்கிழமை (02.01.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 014

ராம்கோ RAMCO
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## அல்வாயில் பெண் கடத்தல் மகள் முறைப்பாடு

(கரவெட்டி)

அல்வாய் கிழக்குப் பகுதியில் நேற்றுமுன்தினம் 6 மணியளவில் இனந்தெரியாத ஆயுததாரிகளால் கடத்திச் செல்லப்பட்ட திருமதியோகநாதன் புஷ்பாதேவி (வயது 48) என்பவர் தொடர்பாக அவரது மகளான யோகநாதன் வினோதா யாழ். மனித உரிமை ஆணைக் குழுவில் நேற்று முறைப்பாடு செய்துள்ளார்.

சம்பவதினம் மாலை 5.30 மணியள (20ஆம் பக்கம் பார்க்க)

## ஆணைக்குழுவின் அறிக்கை மேயில்

(கொழும்பு)

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழு தமது விசாரணைகளின் அறிக்கையை எதிர்வரும் மே மாதம் 15 ஆம்திகதிக்குமுன்னதாகசமர்ப்பிக்கவுள்ளதாக அறிவித்துள்ளது.

எதிர்வரும் பெப்ரவரி மாதம் முடிபதற்குள் தமது சாட்சிப்பதிவுகளை நிறைவு செய்ய எதிர்பார்ப்பதாகவும் (19ஆம் பக்கம் பார்க்க)

## உள்ளே...

'எங்களவனை அடிக்கும் போது பாயாத சட்டம் சிங்களவனை அடிப்பேன் என்ற போது பாய்கிறதே' சிறை மீண்ட சீமானின் அதிரடித் தொடர்... ⑥

# புலிகளின் ஆயுதக் கப்பலை அழிக்க அமெரிக்காவே உதவி வழங்கியது

## ஆங்கில நாளிதழ் அதிரடித் தகவல்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுடனான போரின்போது விடுதலைப் புலிகளின் ஆயுதக் கப்பல்களை அழித்தொழிப்பதற்கு அமெரிக்காவே உதவியதாக ஆங்கில நாளேடு ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

(02ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டில் மீன்பிடி நடைமுறையில் இறுக்கம்

### நேற்று முதல் அமுல்

(யாழ்ப்பாணம்)

நாடளாவிய ரீதியில் சட்டரீதியாக நடைமுறையிலுள்ள மீன்பிடி முறைகளுக்கு அமைய யாழ்.மீனவர்களும் மீன்பிடித்தொழிலில் ஈடுபட வேண்டும் என்றும் அவற்றை மீறிச் செயற்படுபவர்கள் மீன்பிடித்தொழில் தண்டனைச் (19ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் கொட்டுகிறது மழை

### 4 லட்சம் மக்கள் பாதிப்பு

(மட்டக்களப்பு)

கடும்மழையினால் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் ஒரு இலட்சத்து 2 ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 3 இலட்சத்து 86 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக மாவட்டச் செயலகம் நேற்று (19ஆம் பக்கம் பார்க்க)

### இந்து சமுத்திரத்தில் பயங்கரவாதத்தை தடுக்க

## இலங்கை-இந்தியக் கடற்படைகள் கூட்டு நடவடிக்கைக்குத் தயார்

(கொழும்பு)

சர்வதேச பயங்கரவாத குழுக்கள் மற்றும் கடல் கொள்ளையர்களிடமிருந்து இந்து சமுத்திரத்தின் அதி முக்கியமான வர்த்தகக் கப்பல் மார்க்கங்களை பாதுகாப்பதற்காக இந்தியா-இலங்கை கடற்படையினர் கூட்டு நடவடிக்கையை மேற்கொள்ள தீர்மானித்துள்ளனர்.

இந்தியா மற்றும் இலங்கை அரசாங்கங்கள் இந்த முடிபை மேற்கொண்டுள்ளதாகவும் இதற்கு முன்னர் இவ்வாறான கூட்டு வேலைத் திட்டங்கள் ஆரம்பிக்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இலங்கையின் தென்பகுதி கடற்பரப்பில் சுமார் ஆயிரத்து 500 கப்பல்கள் (20ஆம் பக்கம் பார்க்க)

## யாழில் முளைவிடும் அசம்பாவிதங்கள் ஜனாதிபதியிடம் எடுத்துரைக்கப்படும்

### அமைச்சர் டக்ளஸ் அறிவிப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் கடந்த சில தினங்களாக இடம்பெற்றுவரும் கடத்தல், துப்பாக்கிச் சூடு, மற்றும் கொலை, கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் கவனத்திற்கு உடனடியாக (02ஆம் பக்கம் பார்க்க)

NIBM
BUILDING COMPETENCIES
Jaffna
யாழ்ப்பாணம்
A statutory Body under the Ministry of Youth Affairs & Skills Development



NIBM இன் கணனிக் கற்கைநெறிகள்

கணனி தொழில்நுட்பத்தில் சான்றிதள் கற்கைநெறி
(Certification in Computer Science)

அலுவலகர்களுக்கான கணனி கற்கைநெறி
(certification on computers for officers)

அனுமதி பரீட்சை ஆரம்பமாகியுள்ளது

ஆகக் குறைந்த கல்வி தகைமை
க.பொ.த சாதாரண தரம் (G.C.E (O/L))

தேசிய வியாபார முகாமை நிறுவனம்
40, கல்லூரி வீதி, (யாழ் இந்துக்கல்லூரி மைதானம் (முன்பாக) யாழ்ப்பாணம்
தொலைபேசி இல: (021) 222 0360, 61, 62

முதலில் அனுமதிக்கப்படும் சிலருக்கு 25% கட்டணக் கழிவு.

வீட்டிலும் வேலைத்தலத்திலும் இதமான காற்றை இனிதே அனுபவிக்க ...

சிங்கர் எயார்கண்டிஷனர்கள்

• உத்தரவாதம் • விற்பனைக்குப் பிந்திய சேவை • இலகு தவணைக் கொடுப்பனவு



SINGER
யாழ் மண்ணின் பாரம்பரைத் தோழன்

யாழ்ப்பாணம்-ஸ்டான்லி வீதி, ஆஸ்பத்திரி வீதி, சுன்னாகம், நெல்லியடி, சாவகச்சேரி, மானிப்பாய்

# சந்நிதியான் ஆச்சிரமத்தில் மகேஸ்வரனின் நினைவு

முன்னாள் அமைச்சர் அமரர் தி.மகேஸ்வரனின் மூன்றாம் ஆண்டு நினைவு நிகழ்வு நேற்று சந்நிதியான் ஆச்சிரமத்தில் அனுஷ்டிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் சந்நிதியான் ஆச்சிரம சுவாமிகள் மற்றும் வைத்திய கலாநிதி கதிரவேற்பிள்ளை, க.கைலைநாதன் ஆகியோர் உரையாற்றினர். இதன் போது முதியவர்களுக்கு உடுபுடைவைகள் வழங்கப்பட்டதுடன் மகேஸ்வர பூஜையும் இடம்பெற்றது. (ந)

# பூம்புகாரில் மீள்குடியமர்த்த அமைச்சர் டக்ளஸ் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

அரியாலை கிழக்கு, பூம்புகார் பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்த மக்களை மீள்குடியேற்றுவதற்கு பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நடவடிக்கை எடுத்துள்ளார்.

இது தொடர்பில் அப்பகுதியிலுள்ள வெடிபொருட்களை அகற்றி மக்களை மீள்குடியேற்றும் நோக்கில் நேற்றையதினம் இராணுவ உயர் அதிகாரி கேணல் தஸநாயக்க, ஈ.பி.டி.பியின் நல்லூர்பிரதேச அமைப்பாளர் இரவீந்திரதாஸன், அரியாலை கிழக்கு ஜே/90 பிரிவு கிராம அலுவலர் விஜிதரன், அரியாலை கிழக்கு ஆர்.டி.எஸ். தலைவர் ஸ்ரீகணேஸா ஆகியோர் அப்பகுதிக்குச் சென்று பார்வையிட்டுள்ளனர். (சு-7)

# யோசப் பரராஜசிங்கத்தின் நினைவுதினம் அனுஷ்டிப்பு




(யாழ்ப்பாணம்)

யோசெப் பரராஜசிங்கம் அவர்களது 5வது ஆண்டு நினைவு நிகழ்வு நேற்று பி.ப.3.00மணிக்கு இல 43,3ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அலுவலகத்தில் இடம்பெற்றது.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் யோசெப் பரராஜசிங்கம் நினைவாக பத்து பல்கலைக்கழக மாணவர்களுக்கும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவநேசன் ஞாபகார்த்தமாக பத்து பல்கலைக்கழக மாணவர்களுக்குமாக மொத்தம் 20பேருக்கு தலா ஐயாயிரம் ரூபா வீதம் தமிழ் தேசிய மக்கள் முன்னணியினால் வழங்கப்பட்டது.

இந்நிகழ்விற்கு மாணவர்கள், பொதுமக்கள் மற்றும் ஆதரவாளர்கள் பெருமளவானோர் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர். நிகழ்வில் அ.இ.த.காங்கிரஸ் பிரசார செயலாளர் இளங்கோ, த.தே.ம. முன்னணி முக்கியஸ்தர் வைத்தியர் திருலோகமூர்த்தி ஆகியோர் உரையாற்றினர். (ந)




## காணி விற்பனை

யாழ்.மாநகர எல்லை பிரதேசத்துக்குள் K.K.S வீதிக்கருகில் வீடு கட்டுவதற்கு தேவையான பொருட்களுடன் (பொருட் கள் இல்லாமலும் வழங்கப்படும்) கிணறு, தண்ணீர் தாங்கி, மலசலகூடம், போக்கு வரத்துப் பாதைகளுடன் 02பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு. விலை பொருட்கள் இடம் பார்வையிட்டு தீர்மானிக்கலாம். தரகர்கள் தேவையில்லை நேரடியாக தொடர்பு கொள்ளவும்.

தொ.இல:- 0770555760 (3340)

## காணி தேவை

கௌரவமான இந்துக் குடும்பத்திற்கு வீடு கட்டுவதற்கு உகந்த காணி (இரண்டு பரப்பு) இருபாலை, கல்வியங் காடு, திருநெல்வேலி, கொக்குவில், கோண்டாவில் ஆகிய பகுதிகளில் தேவைப்படுகின்றது.

தரகர் தேவையில்லை (3325)

தொடர்புக்கு: 0777834603

## திருமண சேவை

48 வருட சேவையில் பெற்றோர்களின் திருமணங்களை நிறைவேற்றினோம். இப்போது அவர்களது பிள்ளைகளின் திருமணங்களையும் நிறைவேற்றி வருகின்றோம். திருமணசேவை வரலாற்றில் இரண்டாம் தலைமுறை கண்ட "சர்வதேச திருமண சேவை" யுடன் தொடர்பு கொண்டு உங்கள் திருமணங்களையும் நீங்கள் விரும்பியபடி நிறைவேற்றிட நேரில் வாருங்கள்.

"மதுரகானம்" 238, அரசடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்

T.P:-0212227147, 0713352215, 0718285673

இயக்குனர்:- புலவர் செ.து.தெட்சணாமூர்த்தி (3320)

# பாராட்டு விழா

கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலையின் தரம் ஐந்து புலமைப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான பாராட்டுவிழா இன்று காலை 9.30மணிக்கு பாடசாலையின் சுப்பிரமணியம் மாலதி ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், கௌரவ விருந்தினராக பாடசாலையின் பழைய மாணவியும் சட்டத்தரணியுமானசெல்வி ஞானலோஜினி சிவஞானம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ந-7)

## தாதியியலில் பட்டம் விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் தாதியியல் விஞ்ஞான இளமாணிப்பட்ட கற்கை நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரிகள் தெரிவுப் பரீட்சை மூலம் இக் கற்கை நெறிக்கு தெரிவு செய்யப்படுவார்கள்.

விண்ணப்பப்படிவங்களை இன்று தொடக்கம் 19.01.2011 வரை திறந்த பல்கலைக்கழக யாழ்ப்பாண பிராந்திய நிலையத்தில் பெற்று விண்ணப்பிக்கலாமென இணைப்பாளர் அறிவித்துள்ளார். (ந)

## புலிகளின்...

அரச ஆதரவுடன் இயங்கும் பிரஸ்தாப ஆங்கில நாளேடு வெளியிட்ட செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

விடுதலைப்புலிகளுடனான போரில் அமெரிக்காவின் இராணுவப் புலனாய்வுத் தகவல்கள் இலங்கைக்கு மிகுந்த உறுதுணையாக இருந்தது. விடுதலைப் புலிகளோடு நடை பெற்ற போரில் இலங்கை அரசுக்கு அமெரிக்க இராணுவப் புலனாய்வுத்தகவல்கள் பலவழிகளில் உதவின.

விடுதலைப் புலிகளுக்கு ஆயுதங்களை ஏற்றிவந்த பல கப்பல்கள் அமெரிக்காவின் புலனாய்வுத் பிரிவினால் இனம்காணப்பட்டு இலங் கைக்கு தகவல் வழங்கப்பட்டது. பசுபிக் பிராந்தியத்தில் இருக்கும் அமெரிக்க கடற்படையினர் பலதகவல்களை வழங்கினர்.

இதேவேளை போர் உச்சக்கட்டத்தை அடைந்தவேளை முள்ளி வாய்க்காலில் உள்ள மக்களை அமெரிக்காவின் பசுபிக் பிராந்திய படையணி காப்பாற்றும்எனவும்ஒருநாடுநிச்சயம்தலையிட்டு யுத்த நிறுத்தம் ஒன்றைக் கொண்டுவரும் எனவும் இறுதிநேரத்தில் விடுதலைப் புலிகளின்சிரேஷ்ட தலைவர்கள் நம்பியிருந்தனர்.

இந்நிலையில் குறிப்பிட்ட எந்த ஒரு நாடும் இந்தியாவை மீறிச் செயல்பட விரும்பவில்லை என்று இறுதியில் கூறப்பட்டதும் தெரிந்ததே. (ந-5)

## யாழில்...

கொண்டுவர இருப்பதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார். யாழ்ப்பாணத்தில் தற்போது முளைவிடத்தொடங்கியுள்ள விரும்பத்தகாத சம்பவங்கள்மீண்டும்மக்களைப் பயப்பீதிக்கு ஆளாக்கியுள்ளது.

எனவே இத்தகையசம்பவங்கள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டுமென குறிப்பிட்ட அமைச்சர்டக்ளஸ்தேவானந்தா இது தொடர்பில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை இன்று சந்தித்து நிலைமையை எடுத்துக் கூறவுள்ளதாக தெரிவித்தார். யாழ்.குடா நாட்டில்தற்போது ஆரம்பித்துள்ள அசாதாரண சூழ் நிலைகளை உடனடியாக கட்டுப்படுத்தத் தவறினால் நிலைமை மோசமாகும் எனவும் அவர் எச்சரிக்கை செய்துள்ளார். (ந)

# வெள்ளை வானில் கடத்தப்பட்டவர்கள் வவுனியாவில் வைத்து விடுவிப்பு

கிளிநொச்சி டிப்போச் சந்தியில் உரையாடிக் கொண்டிருந்த 5 இளைஞர்கள் வெள்ளை வானில் சென்றோரால் கடத்தப்பட்டு பின்னர் வவுனியாவில் விடுவிக்கப்பட்டனர்.

கல்விப் பொதுத் தராதரப் பரீட்சை எழுதிவிட்டு உயர்தர வகுப்பில் கல்வி கற்கத் தயாராக இருந்த இந்த இளைஞர்கள் டிப்போச் சந்தியில் கூடி நின்று உரையாடிக் கொண்டு இருந்ததாகவும் திடீரெனச் சென்ற வெள்ளை வான் அவர்களை கடத்திச் சென்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் கடத்தப்பட்ட இளைஞர்கள் யார்? அவர்கள் ஏன் கடத்தப்பட்டார்கள்? வவுனியாவிற்கு ஏன் கொண்டு செல்லப்பட்டார்கள்? பின்னர் எந்த அடிப்படையில் விடுவிக்கப்பட்டார்கள் என்பது குறித்த தகவல்கள் எதுவும் கிடைக்கப்பெறவில்லை. (ந-5)

# ஆழியவளைக் கடலில் கரை ஒதுங்கிய மூங்கில் வீடு

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கு ஆழியவளைக் கடலில் பாரிய மூங்கில் வீடு ஒன்று கரையொதுங்கியுள்ளது. சுமார் 40அடி நீளமான மூங்கில் வீடு வேறு ஒரு நாட்டில் இருந்து கடலில் அடித்து வரப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது.

குறிப்பாக தென்கிழக்காசிய நாடுகளில் இவ்வாறான மூங்கில் வீடுகளை ஆற்றில் பயன்படுத்துவது உண்டு. மீன் பிடிப்பவர்கள் தமது வீடாகவும், ஆற்றில் பயணிக்கவும் இது போன்ற மூங்கில் வீடுகளைப் பயன்படுத்துவார்கள்.

சமீபத்தில் ஏற்பட்ட மழை வெள்ளம் மற்றும் ஆற்றுப் பெருக்கு காரணமாக இவ்வீடு கடலுக்கு அடித்துச் செல்லப்பட்டிருக்கலாம் எனவும் பல நாட்கள் கடலில் மிதந்து இறுதியில் கரை ஒதுங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ந-5)

O/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான..

- Diploma in Microsoft Office 2010
- Diploma in PC Application
- Dip. in Pre-Press Desktop Publishing
- Dip. in Video Production & Multimedia
- Dip.in Web Designing & Development
- Diploma in Computerized Accounting

முதலில் பதிவு செய்யும் 200 மாணவர்களுக்கு Internet E-mail or Hard ware Technology Course முற்றிலும் இலவசம் !

Internet E-mail | Hardware Technology

முழுமையானதும் தரமானதுமான கணினிக்கல்வி

ஆசிரியரிலேயே முதன்மை நிலை வகிக்கும் veta Experts in English Training An ISO 9001:2000 Company

புதிய பிரிவுகள் ஆரம்பம்.




DMI COMPUTER EDUCATION

NO. 113, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். Tel.: 021-222 4403

M.M.V. வீதி, (மத்திய மகாவித்தியாலயம் முன்பாக) நெல்லியடி. Tel. : 021-226 2470

# மரண அறிவித்தல்

## தேவராசா கேதீஸ்வரன்



குடத்தனை கிழக்கு, குடத்தனையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தேவராசா கேதீஸ்வரன் நேற்று முன்தினம்(31.12.2010) வெள்ளிக்கிழமை அகால மரணமடைந்தார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் குடத்தனை கிழக்கு சுடலைப்பிட்டி இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்
TP:0776079038

குடத்தனை கிழக்கு,
குடத்தனை. (3337)

இலங்கை அரசினாலும் சர்வதேசத்தினாலும் அங்கீகரிக்கப்பட்ட கணனிக் கல்லூரி

PcHW Personal Computer Hard Ware | ICDL International Computer Driving Licence | CiGD Certificate in Graphic Design | CIT Certificate in Information Technology

For a GREAT Start after your O Levels

O/L பரீட்சை தோற்றிய மாணவர்களுக்காக புதிய வகுப்புக்கள் ஆரம்பம் - 03.01.2011

ESOFT The Leader in Professional ICT Education

Esoft Computer Studies

# No.114, Navalar Road, Jaffna. 021 222 4142, H.Line 077 3099308.
# No.151, Jaffna Road, Nelliyaddy, Karaveddy. 021 226 4940.
# Periya Arasady, Chavakachcheri. 021 227 0333.
# No.1, Kanagapuram Road, Kilinochchi. 021 228 5444.
# Main Street, Valvetty, Valvettythuri. 077 2487144. (Near Jega Motors)

(சி-2028)

# மயானத்தில் மாடுகள் வெட்டப்படுவதால் மக்கள் பெரும் அசௌகரியம்

(பருத்தித்துறை)

கரவெட்டி-துன்னாலை வேருண்டை மயானத்தில் மாடுகள் வெட்டப்படுவதால் அங்கு உடல்களைத்தகனம்செய்யச்செல்வோர்பெரும் அசௌகரியங்களுக்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அம் மயானத்தில் மாடுகள் வெட்டப்பட்டு அதன் கழிவுகள் போடப்படுபவதால் துர்நாற்றம் வீசுவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

அதேவேளை இம் மயானத்திற்கு செல்லும் பாதையும் நீண்ட காலமாக புனரமைக்கப்படாமல் இருப்பதாகவும் மக்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

துர்நாற்றம் வீசும் இந்த மயானத்திற்கு அருகே பாடசாலை ஒன்றும் இயங்குவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எனவே, உரியவர்கள் தகுந்த நடவடிக்கை எடுக்க முன்வரவேண்டுமென அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (ஸ்ரீ-4-10)

# சட்டவிரோத மதுபான விற்பனையால் மதுப்பிரியர்களின் அட்டகாசம் அதிகரிப்பு

(கொழும்புத்துறை)

அரியாலை, முள்ளி மற்றும் யூதேயா கோவில் பகுதிகளில் சட்ட விரோதமாக மதுபானம் விற்கப்படுவதால் அப்பகுதிகளில் மதுப் பிரியர்களின் அட்டகாசம் அதிகரித்துள்ளது.

இதனால் அப்பகுதி மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர்.

குறிப்பாக இவ்வீதியால் செல்லும் பெண்களுடன் தகாத வார்த்தைகளால் பேசுவதோடு சிறுவர் சிறுமிகளுக்கும் பெரும் இடையூறுகளை ஏற்படுத்தும் வகையில் செயற்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனைக் கட்டுப்படுத்த உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்குமாறு பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (3-4-51)

# வானில் மோதுண்டு முதியவர் உயிரிழப்பு

(பருத்தித்துறை)

துவிச்சக்கர வண்டியில் சென்ற வயோதிபர் ஒருவர் வானொன்றுடன் மோதுண்டு பலியானார்.

இச்சம்பவம் நேற்று காலை 5.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

குறித்த சம்பவத்தில் கரவெட்டி கன்பொல்லையைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான அம்பலவன் காசியன்(வயது-74) என்பவரே விபத்தில் சிக்கி பலியானவர் ஆவார்.

இவரது சடலம் பருத்தித்துறை ஆதார வைத்திசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

(ஸ்ரீ-4-10-19)

# வீடுகளுக்கு கல்லெறியும் விசமிகள் கூட்டம்

(கொழும்புத்துறை)

கோண்டாவில் நாராயணன் சனசமூக பகுதியில் உள்ள வீடுகளுக்கு இனந்தெரியாத விசமிகள் சிலர் கல்லெறிந்து வருவதாகவும் இதனால் யன்னலின் கண்ணாடிகள், கூரைகள் என்பன நாளாந்தம் சேதமடைந்து வருவதாகவும் அப்பகுதி மக்கள் புகார் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(ஸ்ரீ-4-51)

# அடையாள அட்டை கண்டெடுப்பு

(உடுப்பிட்டி)

கல்லூரி வீதி காங்கேசன்துறை என்னும் முகவரியைச் சேர்ந்த சுசிலா- குணரத்தினம் (677553782V)என்னும் இலக்கமுடைய தேசிய அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டு தொண்டைமானாறு செல்வச்சந்நிதி திருப்பணிக் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

எனவே உரியவர் ஆலய நிர்வாகத் தினருடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-4-52)

# மாணவர்களுக்கான கௌரவிப்பு விழா

(அல்வாய்)

க.பொ.த.(உ/த) பரீட்சையில் அதிசிறப்பு சித்திபெற்ற மாணவர்களுக்கான கௌரவிப்பு விழா நாளை திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு புலோலி வீரபத்திர கோயிலடி வடுவாத்தை முன்றலில் புலோலி தெற்கு கிராம சேவையாளர் நா.குமரகுருநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வடக்கு பிரதேச செயலாளர் இ.வரதீஸ்வரன், சிறப்பு விருந்தினர்களாக யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவபீட பேராசிரியர் மா.நடராஜசுந்தரம், ஓய்வுபெற்ற உதவி அரசாங்க அதிபர் வே.வீரபத்திர பிள்ளை ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இந்நிகழ்வில் கௌரவ விருந்தினர்களாக வடமராட்சி ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் அமைப்பாளர் ஐ.சிறிரங்கேஸ்வரன், பருத்தித்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி லலித் பிசல்லாவ ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஸ்ரீ-3-9-19)

# இராசி பலன்

02.01.2011
(மார்கழி 18, ஞாயிற்றுக்கிழமை)
சூரிய உதயம் முற்பகல் 6.23 மணிக்கு
திரயோதசி பிற்பகல் 3.25 மணி வரை
கேட்டை பின்னிரவு 3.05 மணிவரை
இராகுகாலம் 5.00-6.30 மணி வரை
சுபநேரம் 9.30-11.00 மணி வரை

**மேடம்** கவலைகள் தீர கந்தனை வழிபட வேண்டிய நாள், ஒரு வேலையை முடிக்க இரண்டு முறை அலைய வேண்டி வரலாம், உடல் நலனில் கவனம் தேவை, வேலைச்சுமை கூடும்.

**இடபம்** புதிய திட்டங்களைத் தீட்டுவீர்கள், குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், வெளியூர் தொடர்புகள் நன்மையளிக்கும், போசன சுகமுண்டு.

**மிதுனம்** தொழில் விருத்தி தொடர்பாக நல்ல முடிவெடுப்பீர்கள், ஆரோக்கியம் சீராகும், கடன் பிரச்சினைகள் குறைவடையலாம், வீட்டுப் பிரச்சினைகளை சுமுகமாகத் தீர்த்துக் கொள்வீர்கள்.

**கடகம்** தன்னம்பிக்கை துளிர் விடும் நாள், சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள், பிள்ளைகள் வழியில் பெருமையான சம்பவங்கள் நடைபெறலாம்.

**சிங்கம்** பெண்கள் வழியில் பெருமைப்படும் வகையில் உதவிகள் கிடைக்கலாம், வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், பெற்றோரின் பாச மழையில் நனைவீர்கள்.

**கன்னி** தொழில் போட்டிகளை முறியடித்து வெற்றி காண்பீர்கள், உயர்வான சிந்தனைகள் மேலோங்கும், சகோதரர்கள் உதவிக்ரம் நீட்டுவர், சுவாரஸ்யமான நாள்.

**துலாம்** பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், புத்தி சாதுரியத்தால் புகழ் அதிகரிக்கப்படலாம்.

**விருச்சிகம்** உறவினர் பகை அகலும், வீண் கற்பனைகள் குடிகொள்ளும், விருந்தினர் வருகையுண்டு, வளர்ச்சிப் பாதையை நோக்கி நகர்வீர்கள்.

**தனுசு** மனப் பதற்றத்தை குறைத்துக் கொள்வது நல்லது, தொழில் வளர்ச்சிக்கு அனுபவம் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், பிரயாணம் சிறு அலைச்சலைக் கொடுக்கலாம்.

**மகரம்** உறவினர்களின் வருகையால் உள்ளம் மகிழும் நாள், பொது வாழ்வில் புகழ் கூடும், விருந்துபசாரத்தில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, பணப்புழக்கம் அதிகரிக்கும்.

**கும்பம்** உற்சாகமான நாள், தடைப்பட்ட கருமங்கள் இன்று கைகூடலாம், அந்நியர்கள் மூலம் உதவிகள் கிடைக்கலாம், ஆரோக்கியமான நாள்.

**மீனம்** பகையாக இருந்தவர்கள் மனம் மாறுவர், புதிய திட்டங்கள் வெற்றியளிக்கும், தேக நலன் சீராகும், புதிய திருப்பங்களால் ஏற்றம் காண்பீர்கள்.

வளவன்

# வாரம் ஒரு தகவல்

## தொழில் இரகசியம்

"சுவாமி, உங்கள் பக்த கோடிகளில் ஒருத்தன் வந்திருக்கிறேன். கண்ணைத் திறந்து பார்க்கக் கூடாதா?"

"ம்... வா... வந்து உட்கார்"

"சுவாமி, தினமும் பலர் உங்களைத் தேடி வருகிறார்கள். அவர்களுடைய கஷ்டத்தையும் கவலையையும் சொல்கிறார்கள். நீங்களும் அவர்களுடைய கவலையெல்லாம் ஆறுமாதத்தில் தீரும், ஒரு வருடத்தில் தீரும் என்று சொல்லி அனுப்பிக் கொண்டிருக்கிறீர்களே, நிஜமாகவே அதெல்லாம் தீருமா?"

"அதெல்லாம் தொழில் இரகசியம். உன்னைப் போன்ற பக்தர்களுக்கு அது தேவையில்லை"

"சுவாமி நானும் உங்களை மாதிரி ஆகப்போகிறேன். அடுத்த ஊரில் போய் ஆச்சிரமம் ஆரம்பிக்கப் போகிறேன். அதனால்தான் கேட் டேன்"

"அப்படியானால் உண்மையைச் சொல்கிறேன் கேட்டுக்கொள். இந்த உலகத்தில் கஷ்டமில்லாத மனிதனே கிடையாது. நம்மிடம் வருபவன் ஏதோ ஒரு கவலை அல்லது கஷ்டத்தோடுதான் வருகிறான். அவன் சொல்வதைப் பொறுமையாகக் கேட்டுக்கொள் கிறேன். அதன்பின் வருகிற தைமாதத்துக்கு பின் உன்னுடை கஷ்டம் நீங்கும் என்கிறேன். சிலபேரிடம் 3 மாதத்தில் உன் கவலை தீரும் என்கிறேன். நம்பிக்கையோடு திரும்பிப் போகிறார்கள்."

"சரி"

"மனிதர்கள் பொறுமையாக இருப்பார்கள். நான் சொல்லும் காலக்கெடுவுக்குள் சில கஷ்டம் தானாகவே தீர்ந்து விடும். சில கஷ்டம் அவர்கள் செய்யும் முயற்சிகளால் சரியாகிவிடும். சில பேருக்கு அந்தக் கஷ்டமே பழக்கமாகிவிடும். கஷ்டம் தீர்ந்து விட்டது என்று நினைக்க ஆரம்பித்து விடுவார்கள்.

"அப்படியானால் நீங்கள் சொல்வது அருள்வாக்கு இல்லையா?"

"இல்லை. இது மனோதத்துவம்"

"அதுசரி சுவாமி, நீங்கள் சாமியாரானது எப்படி?"

"10 வருடத்துக்கு முன் பத்மா என்று ஒரு பெண்ணைக் காதலித்தேன். என்னைக் கல்யாணம் பண்ணிக்கொள் என்றேன். மாட்டேன் என்று சொல்லிவிட்டாள். அதனால் விரக்தியடைந்து சாமியாராகிவிட்டேன். அது இருக்கட்டும். நீ இப்பொழுது சாமியாராக வேண்டும் என்று ஆசைப்படுவதற்கு யார் காரணம்?"

"அதே பத்மாதான்."

"என்னது?"

"ஆமாம். அவளைக் கல்யாணம் பண்ணிக் கொண்டவன் நான்."

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 140 | 150 | 200 | 150 |
| உருளைக்கிழங்கு | 70 | 50 | 70 | 60 |
| பச்சைமிளகாய் | 240 | 200 | 300 | 230 |
| தக்காளி | 80 | 60 | 120 | 110 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 50 | 50 |
| கோவா | 50 | 70 | 100 | 70 |
| கரட் | 80 | 60 | 120 | 90 |
| பூசணி | 50 | 40 | 40 | 35 |
| புடோல் | 90 | 80 | 100 | 90 |
| வாழைக்காய் | 50 | 50 | 50 | 50 |
| சின்ன வெங்காயம் | 240 | 180 | 220 | 210 |
| பெரிய வெங்காயம் | 180 | 150-180 | 160 | 150 |
| பாகற்காய் | 180 | 90 | 180 | 200 |
| வெண்டிக்காய் | 80 | 140 | 80 | 60 |
| கரணைக்கிழங்கு | 50 | -- | 60 | 50 |
| பயிற்றங்காய் | 180 | 90 | 200 | 170 |
| லீக்ஸ் | 120 | 60 | 150 | 100 |
| பீற்றூட் | 100 | -- | -- | -- |
| கறிமிளகாய் | 230 | -- | 300 | 230 |
| முருங்கைக்காய் | 300 | -- | -- | -- |
| போஞ்சி | 150 | 80 | 160 | 130 |
| கத்தரி தம்புள்ள | 100 | 80 | 160 | 100 |
| கீரை - 1 பிடி | 50 | 15 | 40 | 35 |
| தேசிக்காய் | 100 | 100 | 100 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 50 | 40-50 | 40 |

# எங்களவனை அடிக்கும் போது பாயாத சட்டம் சிங்களவனை அடிப்பேன் என்ற போது பாய்கிறதே

இலங்கையின் முள்வேலி முகாமில் இருந்த சகோதரி ஒருத்தி பேசினாள்...“அண்ணா,முழங்கால் அளவு தண்ணீர். படுக்கக்கூட இடமில்லை. மடியில் இருக்கும்



குழந்தைக்குக் கொடுக்க பால் இல்லை. சாப்பாட்டுக்கு திண்டாடுற மாதிரியே,அன்றாட கடன்களை கழிக்கவும் அல்லாட வேண்டிய நிலை. மாற்று உடைகள் இல்லாமல் தவிக்கிறோம் அண்ணா இங்கே சாகக்கூட எங்களுக்கு வழி இல்லை. ஒருவர் குரல்வளையை இன்னொருவர் நெருச்சு செத்தாத்தான் உண்டு!”

என் தொலைபேசியை ஒட்டுக்கேட்கும் உளவுத்துறை பெருமகன்களே...இந்தக் கண்ணீரையும் கதறலையும் உரியவர்களிடம் கொண்டு போய்ச்சேருங்கள். அப்படியாவது அவர்களுடைய கல்மனது கரைகிறதா எனப் பார்க்கலாம். ஈழத்தில் இளவு விழுந்தாலும், இராமேஸ்வரம் இரத்தக்களறி ஆனாலும்,தனுஷ்கோடியில் தமிழன் பிணம் மிதந்தாலும்... மூச்சு விடாமல் இருப்பது எங்களின் தமிழர் குணம். ஆனால்,“ஐயோ” எனக் கதறினாள், “அனுப்புங்கள் பொலிஸை...”என்கிற உத்தரவு மட்டும் பொத்துக்கொண்டு வந்துவிடும்.

“இலங்கை கடற்படைக்கு இந்திய கடற்படை பயிற்சி அளிக்கும். இருநாட்டுப்படைகளும் கூட்டுப்பயிற்சியில் ஈடுபடும்!” என இந்தியப் பாதுகாப்புச் செயலாளர் பிரதீப்குமார் அறிவிக்க....அதை எதிர்த்து இந்த அன்னை மண்ணில் இருந்து ஒரு குரல் கூட கிளம்பவில்லை. “எதற்கு அங்கே இந்திய இராணுவம்? மிச்சம் இருக்கும் தமிழர்களையும் சுட்டு வீழ்த்தவா? எங்களின் மீனவர்களை சிங்களவன் சுட்டான்.... சீனன் சுட்டான்.....இறுதியாய் இந்தியனும் சுடப்போகிறானா? இல்லை, “நீங்கள் சரியாகச் சுடுவதில்லை.... நாங்கள் சொல்லிக்கொடுப்பது போல் சுட்டால், தமிழர்களின் தலை பறங்கிப்பழமாய் சிதறிவிடும்!” எனக் கற்றுக்கொடுக்க போகிறீர்களா?” என காங்கிரஸ் அரசின் சட்டையை உலுக்கி? கேள்விகேட்க இங்கே ஆள் இல்லை.

“கச்சதீவைச்சுற்றி சீன இராணுவம் இருப்பது ஏன்?” என தமிழர்களுக்காக கேட்க இங்கே எந்த நாதியும் இல்லை. இதைச் சொன்னால், “சீமான் அச்சுறுத்தலை ஏற்படுத்துகின்றான்” என அலறுகிறார்கள். வெள்ளையர் காலத்தில் இருந்த வாய்ப்பூட்டுச் சட்டம் இந்தக் கொள்ளையர் ஆட்சியிலும் தொடர்கிறதே! நெய்வேலியில் கூட்டம் நடத்த அனுமதி கேட்டால், “சீமான் பேசினால் மின் உற்பத்தி

**6 சிறை மீண்ட சீமான் எழுதும் ‘திருப்பி அடிப்பேன்’ அதிரடி அனல் கனல் தொடர்...**

பாதிக்கப்படும்!” எனச் சொல்லி தடை விதிக்கிறார்கள். மின் உற்பத்திக்கும் என் பேச்சுக்கும் என்ன சம்பந்தம்? நான் பேசாவிட்டால் மட்டும் மின் உற்பத்தி சீராகி, தமிழகம் ஜொலிக்கப்போகிறதா? ஆற்காட்டார் இருக்கும் வரை “இருண்டபூமி” யாகத்தானே தமிழ் நாடு இருக்கும்? குரலை அடக்க எப்படியெல்லாம் யோசிக்கிறார்கள் அரசாங்கத்தில்? அதையும் மீறிப் பேசினால்,இறையாண்மை அஷ்திரத்தை ஏவி விடுகிறார்கள்.

எங்களைப் போல் இறையாண்மையைக் காக்கக்கூடியவர்கள் யாரேனும் இருக்கிறார்களா இந்த மண்ணில்? இழிச்சவாயர்களாக, ஈனப்பிறவிகளாக ஏதும் செய்ய வழியின்றி,இன்றுவரை அழுகையை மட்டுமே ஆயுதமாக ஏந்தும் எங்களைப் பார்த்து இறையாண்மை மீறல் என்கிறீர்களே, உங்களிடம் ஒரே ஒரு கேள்வி.... சிங்களவன் இன்றுவரை ஒரு மலையாள மீனவனையாவது தாக்கியிருக்கிறானா? இலங்கையின் கடல் எல்லையை எட்டாமல் மீன்பிடிக்க மலையாளி மட்டும், கலை கற்று வைத்து இருக்கிறானா? மலையாள மீனவனை தாக்கினால், அடுத்து என்ன நடக்கும் என்பது சிங்களவனுக்குத் தெரியும்.இந்திய அரசியலில் அதிமுக்கிய சக்திகளாக இருக்கும் மலையாளிகள் சிங்களவனின் குடுமியை உலுக்கி விடுவார்கள்.

ஆனால், எத்தனை தமிழர்கள் சிங்களவனால் சிதைக்கப்பட்டாலும், எங்கள் பிரதிநிதிகள் எதிர்த்துக் கேட்கப்போவதில்லை. தியாகப் பெருந்தகை, அருட்பெரும் ஜோதி அன்னை சோனியா காந்தியின் முகம் சுண்டிவிடக் கூடாது என்பது தான் இங்கு இருப்பவர்களின் முழு நேரக்கவலை.

இந்தத் தைரியத்தில் தான் தமிழர்களின் தலையில் கால் வைத்து விளையாடுவதில் அன்னை சோனியாவுக்கும் அறிவார்ந்த மன்மோகன் சிங்கிற்கும் மட்டற்ற மகிழ்ச்சி. சிங்கள இராணுவத்தோடு கூட்டுப்பயிற்சியில் இறங்க இந்திய இராணுவம் செல்வது ஏன்? இலங்கை அரசை ஆதாரத்தோடு வளைக்க ஐ.நா.குழு ஆயத்தமாகி வரும் வேளையில் இந்திய இராணுவம் அங்கே செல்வது கூட்டுப் பயிற்சிக்கா? இல்லை குழப்பம் உண்டாக்கும் சூட்சிக்காக? சிங்களவனின் இனப் படுகொலையை மறைக்கவே இந்தியா முயல்கிறது என்பது என் அழுத்தமான குற்றச்சாட்டு.

“கொஞ்சம் இரத்தம் தாருங்கள்.... நிறைய சுதந்திரம் தருகிறோம்” என்றான் இந்திய தேசிய இராணுவத்தை நிறுவிய புரட்சியாளன் நேதாஜி சுபாஸ் சந்திர போஸ். “நிறைய இரத்தம் தந்து விட்டோம். கொஞ்ச சுதந்திரம் தாருங்கள் உலகத்திலே!” என்பது தான் தமிழ்த்தேசிய புரட்சியாளன் அண்ணன் பிரபாகரனின் கோரிக்கை. ஒரு போதும் இந்தியாவுக்கு எதிரான நிலைப்பாட்டை எடுத்து எடுத்துவிடக் கூடாது என்பதில் இறுதிவரை புலிகள் உறுதியாக இருந்தார்கள். புலிகளிடம் சீன அரசு இணக்கம் கொள்ளத்துடித்ததை உலகத்தில் எவரேனும் மறுக்க முடியுமா?

இருப்பீர்களா ஐயா? பொழுது போகாத குறைக்கு புலிகள் கொல்லப் பார்க்கிறார்கள் எனக் கிளப்பிவிட்டுத் தாடியை நீவிக்கொள்ளவும் செய்கிறீர்கள். இதை எல்லாம் முன்கூட்டியே கண்டுபிடித்து உங்களை உஷார்ப்படுத்திய உளவுத் துறை மும்பையில் 25 தீவிரவாதிகள் நுழைந்து 150 க்கும் மேற்பட்டோரை சல்லடையாக்கியபோது எங்கே போய் உறங்கிக் கிடந்தது?

கார்கில் போரில் மடிந்த வீரர்களுக்கு வீடு கட்டிக் கொடுத்ததில் ஊழல், கொமன் வெல்த் விளையாட்டுப் போட்டியில் ஊழல் என உலக அளவில் இந்தியாவின் மானத்தைக் கப்பலில் ஏற்றிய காங்கிரஸ்காரர்களே..... இப்போது 1.76 இலட்சம் கோடிக்கு ஊழல் புரிந்து உலக மகா சாதனையையும் செய்து இருக்கிறீர்களே....ஊழல் செய்வது எப்படி? அவை உலக்குக்குத் தெரியும் போது உணர்ச்சியற்ற ஜடமாக இருப்பது எப்படி? விசாரணை என் வந்தால், ஆவணங்களைத் தொலைப்பது



மன்மோகன்சிங், சோனியா

## ஊழல் பற்றி கற்றுக்கொடுப்பதற்கு அமுக்கல் படையை இலங்கைக்கு அனுப்புங்கள்

“என் தாய்த்தமிழ் உறவுகள் வாழும் இந்தியாவுக்கு எதிராக என் சிந்தை எப்போதும் திரும்பாது!” என உரக்கச் சொன்னவர் அண்ணன் பிரபாகரன். ஆனால், தாய்த்தமிழ் உறவுகள் வசிக்கும் இந்தியா, போரின் போது சிங்களத்திற்கு செய்த உதவிகள் போதாது என இப்போதும் கூட்டுப் பயிற்சிக்குப் படை அனுப்புகிறது.

பெருமதிப்புக்குரிய பிரதமர் அவர்களே.... கொமன்வெல்த் மோசடி, அலைக்கற்றை அமளிதுமளி என உங்களைச் சுற்றி இத்தனை களேபரங்கள் நடக்கையிலும், தமிழர்களுக்கு எதிரான நடவடிக்கைகளை மட்டும் தவறாமல் செய்கிறீர்களே.... சிங்களத்துக்கும் சீக்கியத்துக்கும் அப்படி என்ன அண்ணன் - தம்பி உறவு? ஈழத் தமிழர்கள் என்ன ஆனாலும் வாய் பேசா மௌனியாக இருக்கும் நீங் கள், சீக்கிய இனத்துக்கு சிக்கல் நேர்ந்தால் ஊமையாகவே உட்கார்ந்து எப்படி? அப்படியே விசாரணை நடந்தாலும், அதனை இழுத்தடிப்பது எப்படி? ஒரு ஊழலை மறைக்க அதைவிட பெரிய ஊழலைச் செய்வது எப்படி என்கிற வித்தைகளை எல்லாம் இலங்கை அரசுக்கும் கற்றுக்கொடுத்து அவர்களையும் ஊழலில் சாதிக்கவைக்க.... காங்கிரஸ் கட்சியின் அமுக்கல் படையை இலங்கைக்கு அனுப்புவதுதானே சரியாக இருக்கும்?!

அதைச் செய்யாமல் ஏனய்யா இன்னமும் எங்களைக் குதறுவதிலேயே இருக்கிறீர்கள்?

தங்களைச் சுற்றி இவ்வளவு அழுக்கு மூட்டைகளை வைத்திருக்கும் உங்களைப் பார்த்து இப்படித்தான் கோஷம் எழுப்பத் தோன்றுகிறது.

சோனியாஜி... மன்மோகன்ஜி.... 2ஜி...3ஜி.... அடச்சீ! (தொடரும்)

## அசோசியேட்ரெட் மோட்டார் வேய்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்

# அறிவித்தல்

## அனைத்து
## வாடிக்கையாளர்களுக்கும்

**AMW அசோசியேட்ரெட் மோட்டார் வேய்ஸ்**
**நிறுவனம் மட்டுமே இலங்கையில்**
**சுசுகி மற்றும் சுசுகி மாருதி வாகனங்களுக்கான**
**அதிகாரம் பெற்ற விநியோகஸ்தர்கள்**

SUZUKI
Way of Life!

SUZUKI
MARUTI
Count on us

AMW

**மாருதி/ சுசுகி விற்பனைப் பிரிவு**
அசோசியேட்ரெட் மோட்டார் வேய்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
185, யூனியன் பிளேஸ், கொழும்பு-02
மொபைல்: 0777271848
காட்சியறை:
445,பௌத்தலோக மாவத்தை, கொழும்பு-08
தொ.பே.:0112690099

# 2041 வருடங்களின் பின் இவ்வாண்டில் 6 கிரகணங்கள்

(கொழும்பு)

இவ்வாண்டில் நான்கு சூரிய கிரகணங்களும் இரண்டு சந்திர கிரகணங்களுமாக மொத்தம் ஆறு கிரகணங்கள் நிகழவுள்ளதென இந்திய வானியல் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை முதலாவது சூரிய கிரகணம் தென்படவுள்ளது.

பின்னர் எதிர்வரும் ஜுன் 2 ஆம் திகதி, ஜுலை மாதம் முதலாம் திகதி மற்றும் நவம்பர் 25 ஆம் திகதி ஆகிய நாட்களில் சூரிய கிரகணம் தென்படும் என தெரிவிக்கப்படுகிறது.

இதில் முதலாவதை தவிர்ந்த ஏனைய மூன்று சூரிய கிரகணங்களும் இந்தியாவுக்கு தென்படாது.

இதேவேளை எதிர்வரும் ஜுன் மாதம் 15 ஆம் திகதி மற்றும் டிசம்பர் மாதம் 10 ஆம் திகதியும் சந்திர கிரகணம் தென்படும் என இந்திய இமாச்சல பிரதேச கந்தகர் வானிலை நிபுணர் ராஜீவ் சர்மா தெரிவித்துள்ளார்.

இவ்வாறு நான்கு சூரிய கிரகணங்களும் இரண்டு சந்திர கிரகணங்களும் இவ்ஆண்டில் தென்படுவது 2041 ஆண்டுகளுக்கு பின்னர் இந்த ஆண்டு நிகழவுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஸ்ரீ-2)

# நுவரெலியாவில் தீ விபத்து; 22 வீடுகள் முற்றாக சேதம்

நுவரெலியா கந்தப்பளை பண்டார நாயக்க மாவத்தை பகுதியில் அமைந்துள்ள லயன் வீடுகள் சிலவற்றில் நேற்று முன்தினம் இரவு ஏற்பட்ட தீ விபத்து சம்பவமொன்றில் 22 வீடுகள் முற்றாக எரிந்து சேதத்துக்கு உள்ளாகியுள்ளன.

இந்தத் தீ விபத்துச் சம்பவத்தில் உயிர் சேதங்கள் ஏற்படவில்லை எனவும் 23 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 108 பேர் வரையில் இந்த சம்பவத்தால் தமது உடைமைகளை இழந்து நிர்க்கதி நிலைக்குஉள்ளாகியுள்ளதாகவும் தெரியவருகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளில் கந்தப்பளை பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர். இந்த நிலையில் தீவிபத்தினால் பாதிக்கப்பட்டு நிர்க்கதி நிலைக்கு உள்ளானோர்க்குத் தேவையான தங்குமிட வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்துள்ளதாக நுவரெலியா மாவட்ட செயலாளர் டி.பி.ஜி.குமாரசிறி அறிவித்துள்ளார்.

சம்பவம் இடம் பெற்ற இடத்துக்குச்சென்ற மலையக மக்கள் முன்னணியின் அரசியற் பிரிவு தலைவரும் பாராளுமன்ற உறுப் பினருமான வி.இராதாகிருஸ்ணன் சேதவிபரங்களை ஆராய்ந்து அவை தொடர்பாக அனர்த்த முகாமைத்துவ அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளார்.

தீ விபத்து இடம் பெற்ற இடத்திற்கு நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பி.இராஜதுரை நேற்று நேரிடையாக விஜயம் செய்து சேதவிபரங்கள் குறித்து தகவல்களைத்திரட்டிச் சென்றுள்ளார். (ஸ்ரீ-2)

# நிதி நிறுவனங்கள் தொடர்பான சட்டம் இரத்துச் செய்யப்பட்டுள்ளது

(கொழும்பு)

நிதி நிறுவனங்கள் குறித்த சட்டத்துக்கு பதிலாக நிதித்துறை ஒழுங்குபடுத்தல் தொடர்பிலான புதிய சட்டம் ஒன்றை அறிமுகப்படுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதற்கமைய 1988ஆம் ஆண்டின் 78ஆம் இலக்க நிதி நிறுவனங்கள் சட்டம் இரத்தாவதாக அரசாங்கத் தகவல் நிதித்திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

புதிய சட்டத்துக்கு அமைய அனுமதிப்பத்திரமின்றி நிதி நிறுவனங்களை நடத்திச் செல்வதும் மக்களின் வைப்பீடுகளை ஏற்பதும் தடைசெய்யப்படுவதாக சுட்டிக்காட்டுப்பட்டுள்ளது.

தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஏற்ப சட்டத்தில் மாற்றத்தைக் கொண்டுவரும் நோக்கிலும் சட்டவிரோதமாக மக்களின் வைப்பீடுகளை ஏற்கும் நிறுவனங்களைத் தடுக்கும் வகையிலும் புதிய சட்டம் அறிமுகப் படுத்தப் படவுள்ளது.

நிதித்துறையில் இடம்பெறும் பல்வேறு முறைகேடுகளைக் கட்டுப்படுத்தி இத் துறை தொடர்பாக மக்கள் மத்தியில் நம்பகத் தன்மையை ஏற்படுத்துவதற்காக தற்போதைய நிதி நிறுவனங்கள் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. (ஸ்ரீ-2-9)

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோருக்கு ஐக்கிய தேசியக்கட்சி நிவாரணம்

(கொழும்பு)

வெள்ளத்தினால் மட்டக்களப்பு மாவட்டத்தில் பாதிக்கப்பட்டோருக்கு ஐக்கிய தேசியக் கட்சி நிவாரணங்களை வழங்கியுள்ளது.

ஐக்கிய தேசியக்கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட பிரதம அமைப்பாளரும் கிழக்கு மாகாண சபை உறுப்பினருமான அ.சசிதரன் தலைமையில் நடைபெற்ற இதற்கான நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் கருஜெயசூரிய கலந்துகொண்டார்.

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சுமார் 30 இலட்சம் ரூபா பெறு மதியான நிவாரணங்கள் வழங்கப் பட்டுள்ளதாகவும் கொம்மாதுறை, சித்தாண்டி,கல்குடா, பேத்தாழை, ஓட்டமாவடி ஆகிய பிரதேசங்களில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கே இந்த நிவாரணங்கள் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. (ஸ்ரீ-2)

# மறைத்து வைக்கப்பட்ட ஆயுதங்கள் மீட்பு

(கொழும்பு)

வவுனியா புளியங்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மணியகார குளம் பகுதியில் மறைத்து வைக்கப்பட்ட நிலையில் ஒரு தொகை ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளன.

பெரியமடு விசேட பொலிஸ் பிரிவினர் மேற்கொண்ட சோதனையின் போதே இந்த ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளதாகவும் இவ் ஆயுதங்களுடன் தொடர்புடைய எவரும் கைது செய்யப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்த ஆயுதங்களில் விமானங்களைத் தாக்குவதற்கு பயன்படுத்தப்படும் 88 ரவைகள்,7.62 மில்லி மீற்றர் ரக ரவைகள் 750,5.56 ரக ரவைகள் 200,5 கிலோ எடையுடைய இரண்டு குண்டுகளும், ஒரு கிலோ எடையுடைய குண்டு ஒன்றும் 25 டெட்டனேற்றர்கள் மற்றும் வயர்களும் அடங்குவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# புத்தாண்டு தினத்தன்று கொழும்பில் தீ விபத்து சம்பவம்

(கொழும்பு)

புத்தாண்டு தினமான நேற்று கொழும்பில் பல இடங்களில் தீ விபத்துக்கள் இடம்பெற்றுள்ளன.

நுகேகொடையிலுள்ள அநுலா வித்தியாலயத்தில் பாரிய தீ விபத்து ஏற்பட்டது. தீயைக் கட்டுப்படுத்தும் முயற்சிகள் உடனடியாக மேற்கொள்ளப்பட்டன.

இருப்பினும் இந்தத் தீ விபத்துக்கான காரணம், ஏற்பட்ட இழப்புகள் குறித்து இது வரை தெரியவில்லை.

இதேவேளை வெள்ளவத்தையில் தமிழர்கள் அதிகம் வாழும் பகுதிகளில் ஒன்றான ஹம்டன் லேனிலும் தீ விபத்து ஏற்பட்டுள்ளது. இந்த லேனிலுள்ள ஒரு வீட்டில் தீப்புற்றியதாகவும் தீயணைப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதேபோன்று கொஸ்வத்தை, பத்தரமுல்லையில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றிலும் நேற்று தீ விபத்து ஏற்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

இது இவ்வாறிருக்க நுவரெலியா கந்தபளை பகுதியிலுள்ள லயன் வீடுகளிலும் நேற்றிரவு தீப்பற்றிக்கொண்டது. இதன் காரணமாக 22 வீடுகள் முற்றாகச் சேதமடைந்தாக அறிவிக்கப்பகிறது. (ஸ்ரீ-2)

# வட-கிழக்கு அபிவிருத்தியில் அரசாங்கம் கூடிய கவனம்

(கொழும்பு)

வடக்கு கிழக்கு அபிவிருத்தி தொடர்பில் அரசாங்கம் கூடுதல் கவனம் செலுத்தி வருவதாக வீடமைப்பு அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி நகரில் நடைபெற்ற நிகழ்வொன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

மனிதாபிமான மீட்பு நடவடிக்கைகளின் வெற்றியைத் தொடர்ந்து வடக்கு கிழக்கு அபிவிருத்தி குறித்து அரசாங்கம் கவனம் செலுத்துவதாகவும் யுத்தத்தின் போது இருப்பிடங்களை இழந்தவர்களுக்கு சொந்த வீடுகளை வழங்கி அதன் மூலம் அவர்களது சமூக அந்தஸ்தை உயர்த்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.(ஸ்ரீ-4)





AWARENESS PROGRAMME

*நீங்கள் சர்வதேசத்தால் அங்கீகரிக்கப்படுகின்ற பொறியியலாளர் ஆக வேண்டுமா?*

*உங்கள் கனவு நனவாக சிறீலங்கா ரெலிகொம் நிறுவனம் உதவுகின்றது......*

நீங்கள் கௌரவமான சர்வதேச தரம்மிக்க பொறியியலாளராவதற்காக தொலைத்தொடர்பு மற்றும் இலத்திரனியல் துறைகளில் பட்டப்படிப்பினை நியாயமான கட்டணத்தில் மேற்கொள்வதற்கு சிறீலங்கா ரெலிகொம் நிறுவனம் உங்களிற்கு ஒரு சந்தர்ப்பத்தை இப்பொழுது வழங்குகின்றது.

*நாங்கள் உத்தரவாதமளிப்பது..........*

- சர்வதேச தரத்தில் பயிற்றுவிக்கப்பட்ட தொழில்சார் தகுதி வாய்ந்த விரிவுரையாளர்கள்.
- மாணவர்களிற்கு நட்புடன் கூடிய முன்மாதிரியான பயிற்சி சூழலில் நவீன பயிற்சி வளங்களுடன் கூடிய பயிற்சி.
- மிகச்சிறந்த உள்ளக பயிற்சி வசதிகள்.
- உலகளாவிய பல்கலைக்கழகங்களின் பட்டத்திற்கு சமனான சர்வதேச தரம் வாய்ந்த பட்டம் மிகக் குறைந்த முதலீட்டில்.

பிரவேச அனுமதிக்கு :

க.பொ.த உயர்தரத்தில் 02 பாடங்களில் சித்தி – கணிதத் துறையில் கலந்துரையாடலின் பின் மாணவர்களை தெரிவு செய்ய நேர்முகப் பரீட்சை நடத்தப்படும்.

இடம் / காலம் : விரைவில் அறிவிக்கப்படும்.

மேலதிக விபரங்களிற்கு தொடர்புகொள்ள :

0715364938 / 0112951571/ btechnd@slt.com.lk

Commencing Soon | Registration now on

BTEC HND

edexcel INTERNATIONAL

Sri Lanka Telecom

www.training.slt.lk

# அருள்வளர் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் சுவாமி தேர்த் திருவிழா சிறப்பு மலர் - 02.01.2011



## ஆலய ஆதீனகர்த்தாவின் ஆசியுரை



இந்து சமுத்திரத்தின் முத்து என்று போற்றப் படுகின்ற இலங்கைத் தீவு தன்னில் யாழ். பாடிப் பரிசு பெற்ற யாழ்ப்பாண நன்நகரில் ஏழு கிலோ மீற்றர் தொலைவில் காங்கேசன்துறை பெரு வீதியில் இணுவில் மருதனார் மடப் பதியினில் அமைந்த சதுர்மறையும் திருமறையும் பரவி மேகும் சீர்பூத்து கோயில் கொண்டு எழுந்தருளி பெரிய உருவான சிறிய திருவடிகள் பக்த ஆஞ்சநேயர் சுந்தர வடிவாக எழுந்தருளி அருள் சுரக்கும் ஆலயத்தில் நிகழும் மங்களம் மிகு விகிர்தி வருஷ மார்கழித் திங்கள் ஆங்கில ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி சனிக்கிழமை தெய்வேந்திர முகூர்த்தமாகிய நண்பகல் 12.00 மணியளவில் "சித்திரக் கலாசூரி" விஸ்வப் பிரம்மஸ்ரீ தி. பரமசாமி அவர்கள் குழுவினரால் நிர்மாணிக்கப்பட்ட சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா நடைபெற சுந்தர அனுமனுடைய திருவருள் கூடியுள்ளது. இத்தருணத்தில் ஆஞ்சநேய பக்தர்கள் அனைவரும் வருகைதந்து திருவருள் நிறைந்த வெள்ளோட்ட விழாவினை வாழ்த்தி திருவருட் பொலிவு ஏற்பட விளைவீர்களாக. எம்பெருமானின் திருவருளும் குருவருளும் சகல மக்களிற்கும் கிடைப்பதற்காக இத்திருத்தேரினை உருவாக்குவதற்கு பங்களிப்புச் செய்த திருவாளர் சுப்பிரமணியம் கதிர்காமநாதன் அவர்களுடைய குடும்பத்தாரிற்கு அனுமனுடைய திருவருளும் எம் ஆசிகளும் கிடைக்கப் பிரார்த்திக்கின்றேன்.

"சமஸ்தா லோகா சுகினோ பவந்து"

ஆதீன கர்த்தா


## சிற்பியின் சிந்தனையில்

ஈழ வடநாட்டில் கலையும் கலாசாரமும் கொண்டு தளைத்து விளங்கும் யாழ். மண்ணில் முதலாவது ஆஞ்சநேயர் ஆலயம் என்னும் சிறப்புடன் விளங்குவது அருள்மிகு ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் ஆலயம் ஆகும். மண்வளம் சிறக்க மக்களும் வளமாய் வாழும் நிலையில் நுண்கலையும் இணைந்து இசை பாடும் மருதனார் மடத்தில் வல்லமை மிகு வாயு புத்திரன் எழுந்தருளி உள்ளார். சுந்தரேஸ்வரக் குருக்களின் இளவயதுக் கனவின் நினைவாக உருவாக்கி உள்ள ஆலயம் இன்று இலங்கையின் மிகச்சிறந்த ஆஞ்சநேயர் ஆலயங்களில் ஒன்றாக விளங்குகிறது. ஆலய தர்மகர்த்தாவான சுந்தரேஸ்வரக் குருக்களின் கலை உணர்விற்கும் இறை பக்திக்கும் எடுத்துக்காட்டாக விளங்கும் சுந்தர ஆஞ்சநேயர் ஆலய வரலாறு மிகவும் நீண்டது. உலகளாவிய அறக்கொடையோரின் நல்லுதவியினால் ஆலயம் சிறப்புற்று விளங்கும் தருணத்தில் அஞ்சனை மைந்தன் வலம்வர இரதம் அமைக்க ஆலய தர்மகர்த்தா தீர்மானித்தார். அவரின் வேண்டுகோளிற்கும் எம்பெருமானின் விருப்பத்திற்கும் அமைய இச்சித்திரத்தேரினை உருவாக்க ஒப்புக்கொண்டேன். தமிழோடு கலை வளர்க்கும் எழில்மிகு இயற்கையழகில் மிளிரும் உடுவிலம் பதியில் பிறந்து வட இலங்கையில் சிற்பக்கலையில் தன்னிகரற்று விளங்கிய சிற்பக்கலைஞர் திருநெல்வேலி செல்லையா கந்தசாமி அவர்களின் வழிகாட்டலில் சிறப்புடன் பயின்று அவர் பெயர் நிலைநாட்டி நிற்க என் பணி தொடர்ந்தேன்.

பெருமை மிகு இரதத்தினை எம்பெருமானிற்கு அமைக்கக் கிடைத்த பேறு மிகப்பெரியது. இச்சித்திரத் தேரினை பொலிவூட்டும் முகமாக எம்பெருமான் ஆஞ்சநேயரது வரலாற்று நிகழ்வுகளும், இராமாயணக் காட்சியினது சிற்பங்களும் திருத்தேரினை மெருகூட்டுகின்றபடி உருவாக்கப்பட்டுள்ளமை சிறப்பான அம்சமாகும்.

எனக்கும் சுந்தரருக்கும் இடையிலான 40 வருடங்கள் தாண்டிய சிறந்த நட்பும் இறைவன் அளுருமே சித்திரத்தேர் சிறப்புடன் அமைய வழிசமைத்தது. இலங்கையில் சில பிரசித்தி பெற்ற ஆலயங்களின் சித்திரத்தேரை உருவாக்கக் கிடைத்த சந்தர்ப்பங்களில் இதுவும் ஒன்று. அந்த வகையில் என் கடன் பணி செய்ய வழிகாட்டிய அருள்மிகு சுந்தர ஆஞ்சநேயரிற்கும் ஆலய தர்மகர்த்தா சுந்தரேஸ்வரக் குருக்களிற்கும் என் நன்றிகளை அன்போடு தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஆசாரியார்,
தி.பரமசாமி,
உடுவில்.



## திருமிகும் ஆஞ்சநேயர் சிந்துரத் தேர்கொள் கின்றார்

அஞ்சிலே ஒன்றை பெற்ற அஞ்சிலே மருத்தர் சுந்தர்
நெஞ்சிலே கண்ட தேர் இங் நிலம் மெலி ஏகிடலி மின்ன
சஞ்சலம் யாவும் தீர்க்கும் தாரத ராமன் பாதம்
கொஞ்சிடும் தூரத்து தேவின் கோலத்தை மதிலே
கண்டோம்

மருதனார் மடத்தில் வாழை மரங்கள் கார்நிரை மழங்கும்
திரு மிகும் ஆஞ்சநேயர் சிந்துரத் தேர் கொள் கின்றார்
உருவிடும் தேரின் காட்சி ஓட்டிடும் விளைக செல்லும்
பெருந்திற பெருமானோரம் தூதன் பேருள் பெற்றுய்வோம்

சத்தியம் தர்மம் சாந்தி சால்போடு நீதி நேர்மை
இத்தரை மிதில் மீண்டும் எழுந்தெழ என்றுங் காக்க
உத்தம வைதரிபன் என்றுந் துவந்து ஓதி
இத்தினம் தேரில் ஏறும் இராமதா சனைத் திடுவோம்.

சிற்பி

## சித்திரத்தேர் மீதமர்ந்த சுந்தரனே

பஞ்சமுகப் பேரழகு பக்குவமாய் காட்சிதர
சித்திரத்தேர் மீதமர்ந்த சுந்தரனே - உன்பதியின்
கன்னிதேர் உற்சவத்தின் அருள்வீழ்நிறைந்த சிறப்பாலே
வையகத்தில் தார்மீகம் அருட்சிறப்பாய் மேலோங்கவை..

கலியுகத்தின் துன்பம் அடியவரால் தான் ஒழியும்
என்றறிந்த சுந்தரனை இராமபிரான் - மனம் நினைந்து
பேரன்பன் மாருதியை சிறப்பிவிக்கி
யாம் வணங்க வைத்தசெயல் ராமனவன் பெருங்கருணை
என்றறி.

ஆஞ்சநேய பக்தன்
வ.சிவனேசன்

## அருள்மழை பொழிந்திடையா

பஞ்சமுக கோலமதாய்
சித்திரத் தேரினில்
சிறப்புற வலம்வந்து
அடியவர் எம் உள்ளத்தின்
அன்பொளி தளைத்திட
இருள்தனை போக்கி
அருள் மழை
பொழிந்திடையா

உடுவிலூர்
உதயன்

மலரமைப்பு:-
துர்க்கா பொத்தகச்சோலை
சுன்னாகம்.

## நல்லை ஆதீன முதல்வரின் அருளாசியுரை

மருதனார்மடப் பதியில் அழகு சொரூபமாய் வீற்றிருந்து திருவருளைப் பொழிகின்ற ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் ஆலயத்தில் கும்பாபிஷேகம், ஆண்டு விழாக்களில் கலந்து கொண்டு சிறப்பித்த எமக்கு இவ்வாண்டு ஆலயத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா நடைபெறுவதாய் கேள்வியுற்று பெருமகிழ்வடைகின்றோம். மிகவும் குறுகிய காலத்திற்குள் வளர்ச்சியுற்ற இவ் ஆலயம் பூரணப்படுத்தும் நிலையாக இவ்வெள்ளோட்ட விழா அமையும் என்பதனை வரவேற்று இங்கு பணியாற்றுகின்ற குருக்கள் ஐயா அவர்களும் அவரைச் சார்ந்த அந்தணப் பெருமக்களும் பணியாட்களும் இணைந்து செயலாற்றுகின்ற திறனினால் இவ்வாறான விழாக்களினை காணக் கூடியதாகவுள்ளது. இவ்வாலயம் மென்மேலும் வளர்ந்து பூஜைகள் விழாக்களுடன் நின்று விடாது சமய, சமூகப் பணிகளை மக்களுடன் இணைந்து செயலாற்ற வேண்டும். இச் சித்திரத் தேரினை உருவாக்கிய சிற்பாசாரிகள், உருவாக்க உதவிய அடியவர் குடும்பத்தினர் அனைவரிற்கும் எனது வாழ்த்துக்கள் நிறைந்த நல்லாசிகளினை தெரிவிப்பதில் பெருமகிழ்வு அடைகின்றேன்.

"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்"

சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள்
நல்லூர் திருஞான சம்பந்தர் ஆதீன கர்த்தா,
2 ஆவது குருமகா சன்னிதானம்.

## வாழ்த்துரை

மிகவும் குறுகிய காலத்தினுள்(2001.01. தைத்திங்கள் கும்பாபிஷேக நாள்) இணுவில் மருதனார் மடத்தினில் வீற்றிருந்து திருவருளை பொழிகின்ற சுந்தர ஆஞ்சநேயர் ஆலய மகா கும்பாபிஷேக விழாவிற்கு சென்ற பொழுது அங்கு பணியாற்றுகின்ற குருக்கள் ஐயாவை சந்திக்கின்ற வாய்ப்பு எனக்கு ஏற்பட்டது. அவர் பல வருடமாக தெல்லிநகர் துர்க்காதேவி தேவஸ்தானத்தில் பிரதம சிவாச்சாரியாராக பணிபுரிந்த சிவஸ்ரீ சுந்தரேஸ்வரக் குருக்கள். அவர்களுடன் அளவளாவிய பொழுது ஆஞ்சநேயர் ஆலயத்தின் திருப்பணிகளையும் சமூகப் பணிகளையும் புரிவதற்கு அவர் மனதில் இருந்த ஆதங்கங்களினை புரிந்து கொள்ளுகின்ற வாய்ப்பு ஏற்பட்டது. இதன் பிரகாரம் நாம் இன்று புலம்பெயர்ந்து வாழுகின்ற சுவிற்ஸர்லாந்து நாட்டில் சென்று ஆலயத்திற்கு எங்களால் இயன்ற பங்களிப்பினை ஆற்ற வேண்டும் என்பதற்காக இங்கு ஆலயத்தின் கிளையினை நிறுவி உபயகாரர்களையும் தெரிவு செய்து ஆலய விழாக்களிற்கு உதவக் கூடிய வகையினில் செயலாற்றிக் கொண்டுள்ளோம். இதன் முதற்படியாக சென்ற வருடம் ஸ்ரீ சுந்தர பஞ்சமுக ஆஞ்சநேயர் கும்பாபிஷேகம் நடைபெற ஒழுங்கு செய்தோம். இவ்வருடம் எம்பெருமான் திருத்தேரினிலே எழுந்தருளி அடியவர்களிற்கு திருவருளினை வாரி வழங்கக் கூடியதாக சித்திரத் தேரினை உருவாக்குவதற்கு பிரபல வர்த்தகப் பெருமான் திரு.சு.கதிர்காமநாதன் அவர்களுடைய குடும்பத்தினரை அணுகி அவர்கள் இப்படியாக மேலும் பல பணிகளினைச் செய்து ஆலயம் சிறப்பாக வளர்ந்து வருவதற்கு ஆஞ்சநேயர் பெருமானின் திருவருளினை வேண்டி இவ் விழா சிறப்புற வாழ்த்துவதில் பெருமகிழ்வு அடைகின்றேன்.

அருள் பத்மநாதன்
சுவிஸ்கிளை

## வாழ்த்துரை

யாழ்ப்பாண மருதனார் மடம் பதியினில் கோயில் கொண்டு எழுந்தருளி நல்லருளினை வாரி வழங்குகின்ற அருள்வளர் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் கோவில் ஆதீன கர்த்தாவாக விளங்கும் சிவஸ்ரீ ரத்தின சுந்தரேஸ்வரக் குருக்கள் அவர்களுடைய அன்புநிறைந்த வேண்டுகோளிற்கு அமைவாக இச் சித்திரத்தேர் திருப்பணியினை செய்வதற்கு அனுமானின் திருவருள் எமக்குக் கிடைக்கப்பெற்றது. இன்று இவ்வாலயத்தினது சித்திரத்தேர் உருவாக்கும் பணியினில் உழைத்து அதனை முழுமையாக நிறைவேற்றி இருக்கின்றோம். முற்பிறப்பிலும் இப்பிறப்பிலும் நாம் செய்த புண்ணிய பலனாக எமக்கு இப்பேறு கிடைக்கப் பெற்றது. இதற்கு மூலகாரணமாக இருக்கும் ஆஞ்சநேயப் பெருமானின் திருவருள் எமது குருநாதரின் ஆசிகளும் கிடைக்கப் பெற்றது தவப்பயனே.

"யாம்பெற்ற இன்பம் பெறுக இவ் வையகமே"

"ஆன்மீக சமூகத்தொண்டரும் வர்த்தக பிரமுகரும்".
ஆஞ்சநேய பக்தன்
சுப்பிரமணியம் கதிர்காமநாதன் குடும்பத்தினர்
சுவிஸ்

WESTERN UNION Money Transfer
தேரேறும் ஆஞ்சநேயரின் வடம்பிடிக்க வாரீர்!
வந்தால் மேல் வீட்டில் இடம் பிடித்தல் எளிது!!
நூல்களுக்கான பணம் செலவல்ல சேமிப்பே
துர்க்கா பொத்தகச் சோலை
புகழ் பெற்ற புத்தக வியாபாரிகளும் – புதினப்பத்திரிகைகளின் பிரதம முகவரும், தரமான றபர் முத்திரைகள் (Rubber Stamps)) தயாரிப்பாளர்களும் தரமான Photo copy செய்பவர்களும்.
பஸ் நிலையம் முன்பாக,
சுன்னாகம்.
தொ.பே: 021 224 0267

WESTERN UNION Money Transfer
ஆஞ்சநேயரின் அருள் அனைவருக்கும் கிடைப்பதாக
நீதினி முகவர் தபாலகம்
முத்திரைகள், மணியோடர், பதிவுத்தபால், கடுகதி தபால், தமிழ்- ஆங்கில நூலகச் சேவை, ஹோணியோ, தமிழ் - ஆங்கில மொழிபெயர்ப்பு, கடிதம் தயாரிப்பு, தமிழ் - ஆங்கில தட்டச்சு தேவைகளுக்கு நாடுங்கள்.
வெளிநாடுகளில் இருந்து வரும் உங்கள் பணத்தினை பத்து நிமிடங்களில் உங்களிடம் தருவோம்.
டாக்டர் சுப்பிரமணியம் வீதி,
சுன்னாகம்.
தொ.பே & Fax:021 224 0267

# ஊழல் மோசடி தடுப்புப் பிரிவைச்சேர்ந்த 56 பொலிஸார் இடமாற்றப்பட்டுள்ளனர்

(கொழும்பு)

ஊழல்மோசடி தடுப்புப் பிரிவைச்சேர்ந்த 56 பொலிஸ் உத்தியோகத்தர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. ஊழல் மோசடித் தடுப்புப்பிரிவில் நீண்டகாலம் கடமையாற்றிய அனுபவமுடைய அதிகாரிகள் இவ்வாறு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் களுக்குப் பதிலாக ஊழல் மோசடி தடுப்பு தொடர்பான பயிற்சியற்ற பொலிஸ் உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஊழல் மோசடி தடுப்புப் பிரிவிற்கு சரியான முறையில் புதிய உத்தியோகத்தர்கள் உள்ளீர்க்கப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

ஒரு பிரதான பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, ஆறு பொலிஸ் பரிசோதகர்கள் , பதினான்கு பொலிஸ் துணைப் பரிசோதகர்கள், இருபத்திநான்கு சார்ஜன்கள் ,எட்டு கான்ஸ்டபிள்கள் உள்ளிட்டோர் இவ்வாறு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

குற்றவிசாரணைப்பிரிவு, பயங்கரவாதத் தடைப்பிரிவு உள்ளிட்ட பொலிஸ் பல்வேறு பொலிஸ் பிரிவுகளுக்கு இவர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். உத்தியோகத்தர்கள் திடீரென இடமாற்றம் செய்யப்பட்டமை ஊழல் மோசடி தொடர்பான விசாரணை மேற்கொள்வதில் பாதிப்பை ஏற்படுத்தும் என ஊழல் மோசடி தடுப்பு ஆணைக் குழு அறிவித்துள்ளது.

ஊழல் மோசடி தடுப்புப் பிரிவிற்கு ஆட்சேர்க்கும் நடவடிக்கைகள் விசேடமானவை எனவும் சாதாரண பொலிஸ் உத்தியோகத்தர்களை இந்தப் பணிக்காக பதிலீடு செய்ய முடியாது எனவும் சுட்டிக்காட்டியுள்ளது.

ஊழல் மோசடித் தடுப்பு ஆணைக்குழுவின் சுயாதீனத்தன்மைக்கும் இந்த உத்தரவு பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)



இந்திய அரசாங்கத்தின் நிதியுதவியுடன் வடக்கில் மேற்கொள்ளப்படும் வீட்டுத் திட்டம் தொடர்பான கலந்துரையாடல் அண்மையில் யாழ்.ஆளுநர் பணிமனையில் இடம்பெற்றது.இந்நிகழ்வில் யாழ்ப்பாணத்திற்கான இந்தியத் துணைத்தூதுவர் எஸ்.மகாலிங்கம் ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறியுடன் கலந்துரையாடுவதையும் அருகில் தூதரின் பிரத்தியேக செயலாளர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம். (படம்:-என்.குமார்)

# முதுகலைமாணி பண்பாட்டு கற்கை நெறிக்கான வாய்மொழித் தேர்வு

(கொழும்பு)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முதுகலைமாணி பண்பாட்டுக் கற்கைநெறி 2009 /2010 ஆம் ஆண்டின் இரண்டாம் அரையாண்டுப் பரீட்சைக்கான வாய்மொழித் தேர்வு எதிர்வரும் 8,9ஆம் திகதிகளில் காலை 9 மணி முதல் பிற்பகல் 2 மணிவரை உயர் பட்டப்படிப்புகள் பீடத்தில் இடம்பெறவுள்ளது.

இக்கற்கைநெறியைப் பயிலும் மாணவர்கள் பண்பாட்டியல் கற்கைநெறி இணைப்பாளரை சந்தித்து இது தொடர்பான மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளுமாறு உயர்பட்டப் படிப்புகள் பீடாதிபதி பேராசிரியர் ச.சத்தியசீலன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-4)

# புகலிடம் கோரிய இலங்கைத் தமிழர்களை அவுஸ்திரேலியா நாடு கடத்தக்கூடாது

## சர்வதேச மன்னிப்புச் சபை கோரிக்கை

(கொழும்பு)

அவுஸ்திரேலியாவுக்கு சென்று அகதி அந்தஸ்து கோரியுள்ள இலங்கைத் தமிழர்களை அவுஸ்திரேலிய அரசாங்கம் நாடு கடத்தக் கூடாது என சர்வதேச மன்னிப்பு சபை கோரிக்கை விடுத்துள்ளது.

முன்னதாக ஓசியானிக் வைக்கிங் கப்பலின் மூலம் காப்பாற்றப்பட்ட தமிழர்களில் 10 பேர் மீள் குடியேற்றத்துக்காக உரோமானியாவின் இடைத்தங்கல் முகாமில் தங்கவைக்கப்பட்டனர்.

எனினும் பாதுகாப்பு காரணங்களுக்காக அவர்களை ஏற்றுக்கொள்ள கனடாவும் அமெரிக்காவும் மறுத்தமையை அடுத்து அவுஸ்திரேலியா நாடு கடத்த முயற்சிப்பதாக மன்னிப்பு சபை குற்றம் சுமத்தியுள்ளது.

இலங்கையின் இராணுவப் புலனாய்வு தகவல்களின்படியே இவர்கள் நாடு கடத்தப் படவுள்ளதாக மன்னிப்புச் சபை சுட்டிக்காட்டியுள்ளது.

அவர்கள் நாடு கடத்தப்பட்டால் இலங்கையில் அவர்களுக்கு ஏற்படக்கூடிய விளைவுகளுக்கு அவுஸ்திரேலிய அரசாங்கமே பொறுப்பேற்கவேண்டும் என தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகள் பிரகடனப்படி அகதிகளாக ஏற்றுக் கொள்ளப்பட்டவர்களை திருப்பி அவர்களின் நாட்டுக்கு அனுப்புவது ஏற்றுக்கொள்ள முடியாதது என்றும் சர்வதேச மன்னிப்பு சபை தெரிவித்துள்ளது.

2009 ஆம் ஆண்டு ஒக்டோபர் திங்களில் 78 தமிழர்கள் இந்தோனேசியாவின் ஊடாக அவுஸ்திரேலியாவுக்கு கப்பல் மூலம் வந்து அனர்த்தத்துக்கு உள்ளான போது ஓசியானிக் வைக்கிங் கப்பல் மூலம் காப்பாற்றப்பட்டனர்.

இதன் பின்னர் அவுஸ்திரேலிய அரசாங்கம் வழங்கிய உறுதிமொழியை அடுத்து வெவ்வேறு நாடுகளின் இடைத்தங்கல் முகாம்களில் வைக்கப்பட்டிருந்தனர்.

இருப்பினும் தமிழர்களை சட்டவிரோதமான முறையில் அவுஸ்திரேலியாவிற்கு அனுப்பி வைக்கும் நடவடிக்கைகள் முற்று முழுதாக கடற்படையினரால் முடக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. சட்டவிரோத ஆட்கடத்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் நபர்கள் குறித்து கடற்படைப் புலனாய்வுப் பிரிவினர் தகவல்களை திரட்டியுள்ளதால் இந்நடவடிக்கை முடக்கப்பட்டுள்ளது.

கடந்த பத்து மாதங்களில் தமிழர்களை ஏற்றிய எந்தவொரு கப்பலும் அவுஸ்திரேலியாவிற்கு செல்லவில்லை என கடற்படைத் தளபதி திசர சமரசிங்க தெரிவித்துள்ளார். கடற்படையினரின் நடவடிக்கைகளை அவுஸ்திரேலிய கரையோரப் பாதுகாப்புப் பிரிவினரும் பாராட்டியுள்ளனர். (ஸ்ரீ-2)

# உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் வட-கிழக்கில் தனித்து போட்டியிடுவதற்கு மு.கா. தீர்மானம்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களின் போது வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தனித்து போட்டியிடத் தீர்மானித்துள்ளது.

வடக்கு -கிழக்கில் மரச் சின்னத்தில் போட்டியிடவுள்ளதாக கட்சியின் பொதுச் செயலாளர் ஹசன் அலி தெரிவித்துள்ளார்.

ஏனைய ஏழு மாகாணங்களிலும் ஏனைய கட்சிகளுடன் கூட்டணி சேர்ந்து போட்டியிடத் தீர்மானித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் தனித்துப் போட்டியிடுவதனையே கட்சியின் 90 வீதமான ஆதரவாளர்கள் விரும்புவதாக அவர் தெரிவித்துள்ளார்.

தேர்தல்களில் எவ்வாறு போட்டியிடுவது என்பது தொடர்பில் பிரதேச மக்களிடம் கருத்துக்களை கோரும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார். (ஸ்ரீ-2)



மருதனார்மடத்தில் நிர்மாணிக்கப்பட்டு வரும் வடமாகாண கல்வித் திணைக்களத்தின் கட்டட நிர்மாணப் பணிகள் இடம்பெறுவதைப் படத்தில் காணலாம். (படம்:-என்.குமார்)

# சிறந்த சமூகமொன்றை கட்டியெழுப்ப அனைவரினதும் ஒத்துழைப்பு வேண்டும்

## எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)



நல்ல தரமான சமூகமொன்றை கட்டியெழுப்புவதற்கு அனைத்துத் தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்கவேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

மலர்ந்துள்ள புத்தாண்டை முன்னிட்டு நாட்டு மக்களுக்கு அனுப்பிவைத்துள்ள வாழ்த்துச் செய்தியில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். மக்கள் எதிர்நோக்கி வரும் துன்பங்களுக்கும் துயரங்களுக்கும் தீர்வு காணப்பட வேண்டுமென தெரிவித்துள்ளார்.

அனைத்து மக்களினதும் திறமைகளையும் பலத்தையும் ஒன்று திரட்டினால் நாடு தற்போது எதிர்நோக்கி வரும் சவால்களை வெற்றி கொள்வது கடினமாகாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நீதி, நியாயம் , ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகள் போன்றவற்றை நிலை நாட்டுவது தொலைதூர கனவாக தற்போது காணப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# நடமாடும் பல் வைத்தியசேவை

(யாழ்ப்பாணம்)

யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையினால் நடமாடும் பல்வைத்திய சேவை நாளை திங்கட்கிழமை புங்குடுதீவு பிரதேச வைத்தியசாலையிலும் , மறுநாள் செவ்வாய்க்கிழமை குடத்தனை கிராமிய சுகாதார நிலையத்திலும் 5ஆம் திகதி புதன்கிழமை அல்லைப்பிட்டி கிராமிய சுகாதார நிலையத்திலும், மறுநாள் வியாழக்கிழமை மருதங்கேணி பிரதேசவைத்தியசாலையில் இடம்பெறும் 7ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலையில் கொடிகாமம் பிரதேச வைத்தியசாலையிலும் நண்பகலில் வரணி பிரதேச வைத்தியசாலையிலும் மறுநாள் சனிக்கிழமை பண்டத்தரிப்பு பிரதேச வைத்தியசாலையிலும் இடம்பெறுமென யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# கவிதைக் கலசம்

## இமயம் தொட...



மனிதா
அகண்ட இப் பூமியில்
நீ மட்டும் பிறக்கவில்லை
எத்தனையோ கோடி உயிர்கள்
நீ மட்டும் ஏன்
அனைத்தையும்
அழித்துக் கொண்டேயிருக்கிறாய்
அழிவுக்கான உன்பயணம்
அழிவுக்கானதென்பது
இன்னும் உனக்குப் புரியவில்லையா?

மாவை. நா.கஜேந்திரா

## சங்குநாதம்

### உயிராய்...

சத்தியம் சாகவில்லை
சாதனை வீழவில்லை
உள்ளங்கள் இணைந்தால்
உறவுகள் தடையானாலும்
இதயத்தில்
உதயமான காதல்
காலமெல்லாம் வாழ்ந்து
கொண்டே இருக்கும்
என் வெற்றிக்குப் பின் நீயல்ல
வெற்றிக்குக் காரணமே நீதான்

எஸ்.சிவானுஷா.
கொக்குவில்

### சந்தேகம்

வாழ்வில் வரக்கூடாதது
வந்தால்
குடும்பத்தில் குழப்பம்
செய்யக்கூடியது
உள்ளங்களைக் குலைத்து
உறவுகளைப் பிரிப்பது
உன்னையும் என்னையும்
இன்றுவரை
தூரவே தள்ளிவைத்தது

யோ.தனுஷா
சாவகச்சேரி

### என் அன்பே...

காலமெல்லாம்
கண்ணிமைத்திட
என் மனதில்
நீ உள்ளாய்
ஆனால் உன் மனதில்
நான் இல்லையே
என் அன்பே!
நான் உன்னைப் பூவென
நினைக்கின்றேன்
ஆனால் நீயோ
என்னை முள்ளென
நினைக்கின்றாய்
உன்னிடத்தில் மலர்போன்ற
புன்னகை பெறுவது
பட்ட மரம் தளிர் விடுவது
போன்று......



எம்.எ.பிரியா
வரணி

### கவிதைத் துளிகள்

**தாய்**

கருவறை என்னும் கோவிலில்
தன் தெய்வத்தை தாங்கும்
உன்னதமான உறவு...

**தந்தை**

அறிவு சொல்லித் தந்த
ஆசானுக்கே நிகரான
ஒளி .....

**பிரிவு**

கண்ணீரை பேச வைக்கும்
கொடிய செயல்

செ.கௌசிகா
யா/வட இந்துமகளிர் கல்லூரி
பருத்தித்துறை

**மௌனம்**

அவளுக்கு மட்டும் தெரிந்த
அர்த்தமுள்ள பாசை

**காதல்**

கண்களால் புகுந்து
இருதயத்தை குடையும்
வண்டு

பொன்.கிருசாந்
சங்கானை

### தைத்திருநாளே வருக...!



துன்பத்தை அகற்றி
இன்பத்தைப் பெருக்கி
வையத்தை உயர்த்தும்
வாழ்வதைச் சமைத்து
நல்லதைப் பரப்பும்
நாள்களைத் தந்திட
எம் இல்லங்கள் தோறும்
இன் மழை பொழிவாய்
இனிய தைப்பொங்கலே
வந்திடு வந்திடு நிறைவாய்..

பா.பொன்நிலவன்
மீசாலை

### ஊனமுற்றோர்

பார்வை இருந்தும்
தீயன பார்ப்போர்
பேச குரல் இருந்தும்
தீயன பேசுவோர்
நல்ல மனம் இருந்தும்
பிறரைக்காயப் படுத்துவோர்
அதிகாரம் இருந்தும்
அதை தப்பாக பிரயோகிப்போர்
கடமைகள் இருந்தும்
அதைசரிவரச் செய்யாதோர்

R.ராஜீ

### மீண்டும் சந்திப்போமா?



உன்னைக் கண்டேன் அந்த
ஒரு நிமிடம் என்
இதயம் தாமரை மலராய்
எங்கோ மலர்ந்தது
உன்னைப் பிரிந்தேன் அந்த
நிமிடம் என் இதயம்
வாடிய மலராய்
எங்கோ மறைந்தது
மறைந்தாலும் என்னுயிர்
உன்னையே கேட்கிறது
உனக்காகவே உயிர்வாழ்கிறேன்
உன்னை மறந்து விட மாட்டேன்

பா.கங்கா
வண்ணார்பண்ணை



## மௌனத்தின் தேடல் - 51

### நினைவு சிலைகள்

உலக ஆரம்பமும் கடலே
உலக அழிவும் கடலே
உலகையே ஆட்டிவைத்து
கலங்கவைத்த கடற்கோளின்
நினைவு சிலைகளா?

பொ.புனிதன்
வரியப்புலம்

### இயற்கைஅனர்த்தம் (சுனாமி)

இயற்கை அனர்த்தத்தால்
இறைவனின் செயலினால்
இறந்தவரின்
நினைவிற்காகவா?
மனிதர்களின் சிற்பம்

கி.ரம்யா
தாவடி

### நினைவு

கடல் சீறி எழுந்தமையால்
கல்லறைகள் அமைத்தோம்
தெரு ஏறிப் போர் வந்து
அமைத்ததையும் இழந்தோம்
மண்மேடாய் இடம் போயும்
மணற்சிற்பமாய்...

கி.சரண்ராஜ்
கிளிநொச்சி

### விடியாத நினைவுகளுடன்

கண்களில் கண்ணீர் கொண்டு
செய்த இச் சிற்பத்தினால்
கலங்கி நிற்கின்றோம் - இன்று
போல் தான் அன்றும்
எம் உறவுகளை
புதைய விட்டுக்கதறினோம்

இ.நர்மதன்
யா/கரணவாய்
பொன்னம்பல வித்தியாலயம்

### நினைவுச் சிற்பங்கள்

இங்கே மண்ணினால்
செதுக்கப்பட்டது வெறும்
அழகுக் கலை வண்ணமல்ல
ஆழிப் பேரலையில்
அள்ளுண்டு போன
எங்கள் உறவுகளின்
நினைவுச் சிற்பங்கள்

வி.அபிசன்
அல்லையம்பதி

### அவலம்

அழிந்து போன வாழ்க்கையை
மண்ணில் செய்து
மீண்டும் காட்சிப்படுத்தி
ஞாபகப்படுத்துபவர்கள்
யாரோ?

கு.குலமகள்
யாழ்ப்பாணம்

### ஆழ் கடல்

சுனாமி என்ற வடு
சுமந்த ஆழ்கடலே
சுற்றித்திரிந்த மணல்மேடு
சுற்றிலும் பிணங்கள்
என் செய்வேன்

லூ.உஷா
கிளிநொச்சி

கடற்கரை மணல் தனில்
கலைகளை வாழ வைக்கும்
கலைஞர்களே
கவனமாயிருங்கள்
கடலன்னை சிலவேளை
கடும் கோபம் கொள்ளவும்கூடும்

ஆஷா
யாழ்ப்பாணம்

### உயிர்த்துடிப்பு

கடல் அன்னையின்
மடியில் செதுக்கப்பட்ட
சிற்பங்களே
உங்களது உயிர்த்துடிப்பு
ஆரம்பமாகும் நாள்
வெகு தொலைவில் இல்லை

சு.பிரியங்கா
யா/வ.ம.ம.வி

### இழப்பு

இயற்கைத் தாயின்
இன்னல்களில்
இழந்தது
இவை மட்டுமா?

செ.மோகன்
மாசியப்பிட்டி

### சுனாமி

விடியற்காலை!
பேரலையால் பேரவலம்
எம் உறவெல்லாம்
அலையில் அடங்கி
கரையில் ஒதுங்கினர்

ஜெ.திவ்வியா
நுணாவில்

மனிதா
வெறும் கடற்கரை
மணல் உன்னால்
இன்று உயிர்
பெற்று
அழகிய சிற்பமாய்
பிரகாசிக்கின்றது

சு.ஜெயரூபன்
பருத்தித்துறை

சுனாமி தந்த சுவடுகளா ....? இல்லை
வன்னியில் நடந்த
கொடூரமோ...? இல்லை
சனல் 4 வீடியோ தந்த
அவலமா...?

ஸ்ரீ.புவிதா
ஊரெழு

### உள்ளக் குமுறல்

உறவுகளின் நிலைகளை
உண்மையின் உணர்வுகளை
உரு எடுத்துக்காட்டுகின்ற-
ஐ.நா.சபையினரே
உன்னித்துப் பாருங்கள்
விளங்கும்
உங்களுக்கும் உண்மை


பா.தர்ஜா
அளவெட்டி

### உயிர்ச் சேதம்

உயிர் தந்த தாயவள்
மண்ணில்
உயிரற்றுக் கிடக்கும்
மனித சடலங்கள் - இன்றும்
மாரடித்து புலம்புவது
சுனாமியின் நினைவுகள்

அ.மேரிஅஜந்தா
எழுவைதீவு

## சங்குநாதம் மௌனத்தின் தேடல்- 52



### அன்பு வாசகர்களே !

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகளை

ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 07.01.2011 ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில் அமையும் கவிதைகளிற்கே முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

# 2011 புத்தாண்டு பலன்கள்

## உங்களுக்கு எப்படி?




(சித்திரை 3,4 ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1, 2, 3 ஆம் பாதங்கள்)

இரண்டாம் சுற்றில் சனி வந்தால்
இன்பம் நாளும் தேடி வரும்!

நேரம், காலம் பார்த்துச் செய்தால், நினைத்ததை சாதிக்கலாம் என்று சொல்லும் துலா இராசி நேயர்களே!

புத்தாண்டு தொடங்கும் பொழுது, உங்கள் இராசிநாதன் சுக்ரன் பலம் பெற்று விளங்குகிறார். அதே நேரத்தில் உங்கள் இராசிநாதனுக்கு பகைவனான குருவும் சொந்த வீட்டில் பலம் பெற்று சஞ்சரிக்கிறார். எனவேதான் உங்களுக்கு ஆதாயத்தைக் காட்டிலும் விரயம் அதிகரிக்கலாம். எனவே, விழிப்புணர்ச்சி கூடுதலாக செலுத்துவதன் மூலமும், எதையும் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்துச் செய்வதன் மூலமும் இவ்வாண்டை நீங்கள் இனிமையான ஆண்டாக மாற்றிக்கொள்ளலாம்.

ஒவ்வொருவருக்கும் குறைந்தது மூன்று முறையாவது ஏழரைச்சனி வரும். முதல் சனியை மங்கு சனி என்றும், இரண்டாவது சனியை பொங்கு சனி என்றும், மூன்றாவது சனியை வேறு ஒரு விதத்திலும் வர்ணிப்பர். சனி உங்கள் இராசிக்கு நல்லவன்தான். ஆதாயத்தை தருபவனும் உங்களுக்கு சனிதான். அதேநேரத்தில் ஜென்மச் சனியாக விளங்கும் பொழுது, திடீர் விரயத்தைக் கொடுத்து திக்குமுக்காடச் செய்பவனும் சனிதான். எனவே, முறையாக நீங்கள் சனி வழிபாட்டை மேற்கொண்டால், முன்னேற்றங் களில் வரும் இடையூறுகளை தவிர்க்கலாம்.

ஆண்டின் தொடக்கத்தில் வரும் குருப் பெயர்ச்சி, அதற்கு பின்னர் வரும் இராகு-கேது பெயர்ச்சி, அதற்கு அடுத்ததாக வரும் சனிப் பெயர்ச்சி அத்தனை பெயர்ச்சிகளும் மொத்தமாக வந்து, இந்த ஆண்டு உங்களுக்கு மறக்க முடியாத ஆண்டாக அமைத்துக் கொடுக்கப்படுகிறது.

புத்தாண்டில் உள்ள கிரக நிலையின் கட்டத்தையும், உங்கள் சுயஜாதகத்தில் உள்ள கட்டத்தையும் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். அவை இரண்டும் இணைந்து செயல்பட்டால், துணிந்து காரியங்களைச் செய்யலாம். இல்லையேல், பணிந்து வணங்கி, பரிகாரங்களைச் செய்வதன் மூலம் பலன் பெறலாம்.

உங்கள் இராசிநாதன் சுக்ரனாவார். அவர் எட்டாம் இடத்திற்கும் அதிபதியாக அல்லவா விளங்குகிறார். எனவே பெயர் எண்ணின் ஆதிக்கத்தை ஆராய்ந்து, யோசித்து வைப்பதே நல்லது. உங்கள் சுய ஜாதகத்தில் இராசி, அம்சம் இரண்டிலும் சுக்ரன் இருக்கும் பரிகார பலமறிந்து, அதற்குரிய கிரக எண்ணின் ஆதிக்கத்தில் உங்கள் பெயரை யும், உங்கள் தொழில்நிலையத்தின் பெயரையும் அமைத்துக் கொண்டால், உன்னதமான எதிர்காலத்தைக் காண இயலும்.

வசதி வாய்ப்போடு வாழ்ந்தால் சரி என்று வாழ்பவர்களுக்கு மத்தியில் உலக இன்பங்கள் அனைத்தையும் ஒருசேர அனுபவிக்க வேண்டுமென்று விரும்புபவர்கள் நீங்கள். தெய்வபக்தி உங்களுக்கு அதிகமாகவே இருக்கும். சாமர்த்தியமாகப் பேசி சமாளிக்கும் ஆற்றலைப் பெற்றவர் நீங்கள். சேமிப்பிலேயே குறிக்கோளாக இருப்பீர்கள்.

உங்களுக்கு இந்த புத்தாண்டில் ஆறாமிடத்தில் உள்ள குருவும், அதற்கு பின்னால் ஏழாமிடத்தில் சஞ்சரிக்கப் போகும் குருவும் என்ன செய்யப் போகிறது என்பதைப் பற்றிப் பார்ப்போம்.

### 01.01.2011 முதல் 07.05.2011 வரை

இக்காலத்தில் எதிரிகளின் பலம் கூடும். இலாப நோக்கத்தோடு செயல்பட்டவர்கள் உங்களை விட்டு விலகுவர். உத்தியோகத்தில் எதிர்பார்த்த பொறுப்புகள் வந்தாலும் அதை ஏற்றுக்கொள்ள தயங்குவீர்கள். மதிநுட்பத்தால் மகத்தான காரியங்களைச் செய்யும் நீங்கள் குடும்ப பிரச்சினைகள் தீர முக்கிய புள்ளிகளைச் சந்திப்பீர்கள். விலை உயர்ந்த பொருட்களை வாங்குவதில் ஆர்வம் கூடும்.

உடன்பிறப்புகள் வழியில் நீண்ட நாட்களாக வசூலாகாத தொகை இப்பொழுது வந்து சேரும். கடன்சுமையில் முக்கால்வாசி குறைந்தாலும், பன்னிரெண்டாமிடத்தில் சனி பலம் பெறுவதால், புதிய கடன்கள் வாங்கும் சூழ்நிலையும் உருவாகலாம். தொழிலுக்காக வங்கிகளில் உதவிகேட்டு விண்ணப்பித்தவர்களுக்கு அது தானாக வருவது கண்டு ஆச்சரியப்படுவீர்கள். நண்பர்கள் இல்ல திருமணங்களை நடத்தி வைப்பீர்கள். விரய ஸ்தானத்தை குரு பார்ப்பதால், அடுத்தவர் நலனுக்காக ஒரு தொகையைச் செலவிடும் சூழ்நிலை உருவாகும். திடீர் இடமாற்றம், வீடு மாற்றங்களைச் சந்திக்க நேரிடும்.

### 08.05.2011 முதல் 31.12.2011 வரை

இக்காலத்தில் குரு ஏழாமிடத்தில் சஞ்சரிக்கப் போகிறார். அதன் நேர்பார்வை உங்கள் இராசியில் பதிகிறது. அதுமட்டுமல்லாமல், 3, 11 ஆகிய இடங்களிலும் பதியப்போகிறது. எனவே ஆரோக்கியத்தில் இருந்த தொல்லைகள் ஓரளவு குறையும். மாற்று மருத்து வத்தை மேற்கொள்வதன் மூலம் மகத்தான உடல் வாகைப் பெறலாம்.

பகைக்கிரகமான குரு உங்கள் இராசியைப் பார்ப்பது பொருத்தமான பலனைக் கொடுக்காது. என்றாலும், குருவை வழிபட்டால் உங்கள் வளர்ச்சி அதிகரிக்கும். குரு பார்க்க கோடி நன்மை என்பது பழமொழி அல்லவா? எனவே, அது உங்களைப் பார்ப்பதைக் காட்டிலும், நீங்கள் அவரைப் போய் பார்ப்பது மூலம் நிலைமை சீராகும். நிழல் போல் தொடர்ந்து வந்த துயரங்கள் மாறும். தொழில் மாற்றச் சிந்தனைகள் மேலோங்கும்.

பழைய தொழில்களைப் பாதியிலேயே விட்டுவிட்டு, புதிய தொழில் தொடங்க நண்பர்களுடன் சேர்ந்து திட்டம் தீட்டுவீர்கள். அதற்காக தீவிர முயற்சியும் செய்வீர்கள். கூட்டாளிகள் உங்களை விட்டு விலகுவதைப் பற்றி கவலைப்பட மாட்டீர்கள். குழந்தைகள் நலன் கருதியும், குடும்பச் சூழ்நிலை கருதியும் பலவாறாக தொகையைச் செவிட நேரிடும்.

தாய், தந்தையரின் உடல்நலத்தில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. அந்நியதேச தொடர்புகளால், ஆதாயம் காண்பீர்கள். இளைய சகோதரத்துடன் இருந்த பகை அகலலாம். இனிய பலன்கள் தொடர்ந்து நடைபெற தட்சிணாமூர்த்தியைத் தேடிச் சென்று வழிபட்டு வருவது நல்லது. பயணங்கள் அதிகரிக்கும். பக்கபலமாக இருக்கும் நண்பர்களால் சிக்கல்கள் உருவாகாமல் பார்த்துக் கொள்வதும் நல்லது.

மே 16ஆம் திகதி விருச்சிக இராசியில் இராகுவும், ரிஷப இராசியில் கேதுவும் சஞ்சரிக்கப் போகிறார்கள். இரண்டாமிடத்தில் இராகு சஞ்சரிப்பது நன்மைதான். என்றாலும், எட்டாமிடத்தில் அல்லவா கேது சஞ்சரிக்கிறார். எனவே, குடும்பத்தில் உள்ளவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது. கொடுக்கல்-வாங்கல்களில் கூடுதல் கவனம் தேவை.

வாழ்க்கைத்துணை வழியே திடீர் செலவுகள் ஏற்படலாம். இனம்புரியாத கவலை மேலோங்கும். பணப்புழக்கம் இருந்தும், மன நிம்மதி குறையும். இந்த நேரத்தில் வழிபாடுகள் தான் உங்கள் வளர்ச்சியைத் தக்க வைக்கும். பொதுவாக, சற்ப சாந்தி செய்வதும் நல்லது.


உடன்பிறப்புகள் உங்கள் சொத்து பிரச்சினையில் நல்ல முடிவெடுக்க விடமாட்டார்கள். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு திடீர் திருப்பங்கள் ஏற்படும். நீண்ட தூரப் பயணங்களை மேற்கொள்ளக்கூடிய உத்தியோகமாக அமைக்கூடிய வாய்ப்பு கூட ஒரு சிலருக்கு உருவாகலாம். கேது பலத்தால் கூட இருப்பவர்களின் ஆதரவு குறைந்தாலும், அப்போதைக்கு அப்போது புதியவர்களும் அறிமுகமாகிக் கொண்டே இருப்பர்.

புத்தாண்டில் நல்ல சம்பவங்களை நாளும் சந்திக்கவும், தொல்லை தந்தவர்கள் விலகவும், ஆட்கொண்ட நாதர், தேவியை வழிபட்டு வருவது நல்லது. வார வழிபாடாக, அனுமன் வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். ஆனந்தம் குடியேறும்.

டிசெம்பர் 21ஆம் திகதி துலாம் இராசியில் சனி உச்சம் பெறப்போகிறார். உங்கள் இராசியில் உச்சம் பெறும் சனி தனது பார்வை பலத்தாலும், ஏழரைச்சனியின் ஆதிக்கத்தாலும் எண்ணற்ற மாற்றங்களை உங்களுக்கு வழங்கப் போகிறார். குறிப்பாக, சகோதர வழியில் பிரச்சினைகள் ஏற்பட்டு அகலும். வந்த வரன்கள் மீண்டும் திரும்பிச் சென்று விடும். பிரயாசை எடுத்து எந்தக் காரியம் செய்தாலும், அது முடிவடைவதில் தாமதம் ஏற்படலாம். மற்றவர்களைப் பற்றி விமர்சிப்பதை தவிர்ப்பது நல்லது. மாற்றுக் கருத்துடையோரின் எண்ணிக்கை அதிகரிக்கும்.

இந்த நேரத்தில் நீங்கள் விட்டுக் கொடுத்துச் செல்வது தான் நல்லது. புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்திடும் பொழுது, நம்பிக்கைக்கு உரியவர்களா என்று பார்த்து கையெழுத்திடுவது நல்லது. (தொடரும்)

**சிவல்புரிசிங்காரம்**



அதிவண. கலாநிதி எஸ்.ஜெபநேசன் அடிகளாரின் தொடரும் ஆன்மீக கல்வி சார்பயணம் சுயசரிதை நூல் வெளியிட்டு விழா நேற்று முன்தினம் யாழ்.பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் இலங்கை திருச்சபையின் யாழ். குருமுதல்வர் வண. எஸ்.பி.நேசகுமார் அடிகள் மங்கல விளக்கேற்றுவதையும் கலைத்தூது அழகியற்கல்லூரி இயக்குநர் வண.பிதா மரியசேவியர் அடிகளார்,யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா ஆகியோர் உரையாற்றுவதையும் நூலின் முதல் பிரதியை வாழ்நாள் பேராசிரியர் அ.சண்முகதாஸிடமிருந்து அவுஸ்திரேலியாவின் விக்டோறியாப்பல்கலைக்கழக தாவர மருத்துவவியல் பேராசிரியர் நித்தி.கனகரத்தினம் பெற்றுக்கொள்வதையும் அருகில் நூலாசிரியர் நிற்பதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:-எஸ்.கரன்)

# இராகங்கள் பிறந்த வரலாறு

2

ஜயதேவர் கீதகோவிந்தம் என்ற இசை சாகித்தியங்களை இயற்றியுள்ளார்.பட்டினம் இராமுடு பாகவதர் இவற்றிற்கு தென்னாட்டு இராகங்களை அமைத்துள்ளார்.இதனை அஷ்டபதி எனவும் கூறுவர். இசை, பக்தி, மொழி, கருத்து முதலியவற்றைக் கொண்டு ஜயதே வரை ஆதிசாகித்திய கர்த்தாக்களில் முதன்மை பெற்றவர் என்றும் கூறலாம்.

15ஆம் நூற்றாண்டின் கோபன்னா என்ற ராமதாஸர் நூற்றுக்கணக்கான இராகங்களில் ஆயிரக்கணக்கான கீர்த்தனைகளை இயற்றியுள்ளார். இதுமட்டுமன்றி நமது நாட்டின் பல்வேறு பகுதிகளில் ஆபிரர்கள், காம்போஜர்கள் மாளவர்கள் ,பைரவர்கள், ஸௌவீரர்கள், புஸிந்தர்கள் போன்றவர்களின் வரலாற்றுக் குறிப்பிலிருந்து நமக்கு ஏராளமான இராகங்கள் கிடைத்துள்ளன.

ஸௌவீரர்களிடமிருந்து ஸாவேரி, அஸாவேரி, சுத்தஸாவேரி, சாரங்கா போன்ற இராகங்கள் பிற்காலத்தில் சாஸ்திரிய சங்கீதத்தில் பிரதானமாக இடம் பெற்றிருக்கின்றன. மாளவர்களிடமிருந்து மாளவம், மாளவகௌளம் போன்ற இராகங்களும் ஆபிரர்களிடமிருந்து ஆபேரி, ஆபோகி, ஆபீரு ஆகிய இராகங்களும் காம்போஜர்களிடமிருந்து காம்போதி இராகமும் பைரவர்களிடமிருந்து பைரவி இராக வகைகளும் பிற்காலத்தில் முதிர்ந்த சங்கீதத்தில் இடம் பெற்றிருக்கின்றன.

இராகங்களுக்குரிய தேவைகளும் கோலங்களும் கிரகங்களும் இசைநூல்களில் வகுக்கப் பட்டிருக்கின்றன.

உதாரணமாக பரம சிவனை காலை வேளையில் துயில் எழுப்ப கின்னர்கள் மங்களகைசிக இராகம் பாடினார்கள் என்று காளிதாஸரின் குமாரசம்பவம் என்ற காவியம் கூறுகின்றது.

மதியவேளையில் சாரங்கா என்ற இராகம் பாடப்பட்டதாக சாகுந்தலம் என்ற நாடகம் அறிவிக்கின்றது. மேகம் என்ற இராகம் மழையைப் பெய்வித்தது என்றும் வரலாறுச் செய்தியுள்ளது. தியாகராஜர் அமிர்தவர்சினி இராகம் பாடி இறைவனை உயிர்ப்பித்தார் என்று கூறப்படுகிறது.

நமது இசை இனிமை ஒன்றையே அடிப்படையாகக் கொண்டது.இந்த இனி மைக்கு முக்கிய காரணமாம் நமது இராக முறையே ஆகும். இராகம் பாடுவதில் பூரண இனிமையை வெளிப்படுத்துவதில் முதலிடம் பெற்றுள்ளது.இது தலை சிறந்த பாணியாகும்.

ஒரு மனிதனிடம் உள்ள பண்பை அவனது பாணி எடுத்துக்காட்டும். ஒரு நாட்டுக் கல்வி, பண்பாடு, நாகரிகம் முதலியவற்றின் மேன்மையை அந்த நாட்டுச் சங்கீதம் எடுத்துக் காட்டும் என்பது பன்னாட்டு இசையாராய்ச்சியாளர்களின் முடிவு, பாணி,பாவம், பண்பு முதலிய குணநலன்கள் நிறைந்த இராக முறை இணையற்றதாகும்.

செல்வி சிவறூபி ஸ்ரீஜெகநாதன்
B.F.A(Hons)
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இராமநாதன் நுண்கலைக்கழகம்

இசை மனிதனைப் பண்படுத்தும்; இறைவனை ஈர்ப்பிக்கும்; அவனிடம் மனிதனைச் சேர்ப்பிக்கும் ; வாழ்க நம் இசைமரபு வளர்க நம் இசைப்பண்பு. (முற்றும்)

## வெளிநோயாளர் பிரிவு சேவை நேரம் நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தின் பருத்தித்துறை, சாவகச்சேரி ஆதாரவைத்தியசாலைகளிற்கான வெளிநோயாளர் பிரிவு சேவை நேற்று தொடக்கம் இரவு 8 மணிவரை நீடிக்கப்பட்டு சிகிச்சா சேவை வழங்கப்படும் எனவும் இதன்மூலம் அப்பகுதி வாழ் மக்கள் மேலதிக பயனைப் பெறமுடியுமென யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## நல்லிணக்க ஆணைக்குழு முன் சாட்சியமளிக்குமாறு ரணில் -சந்திரிகாவுக்கு உத்தியோகபூர்வ அழைப்பு

(கொழும்பு)

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் முன் கருத்துக்களை முன்வைக்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ஆகியோருக்கு உத்தியோகபூர்வமாக அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக ஆணைக் குழுவின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஆணைக்குழுவின் தலைவரான முன்னாள் சட்டமா அதிபர் சீ.ஆர்.டி சில்வா இவர்களுக்கான அழைப்பை எழுத்து மூலம் அனுப்பிவைத்துள்ளார் என அந்த அதிகாரி குறிப்பிட்டுள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை இந்த அழைப்புகள் அனுப்பப்பட்டதாகவும் நேற்று முன்தினம் வரை அவர்கள் இந்த அழைப்பு தொடர்பில் பதிலளிக்கவில்லை எனவும் அந்த அதிகாரி கூறியுள்ளார்.

,கடந்த 2002 ஆம் ஆண்டு தொடக்கம் 2009 ஆம் ஆண்டு வரை இலங்கையின் அரசியலில் பிரதான பங்காற்றிய சிரேஷ்ட அரசியல்வாதிகள் என்ற அடிப்படையில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா ஆகியோருக்கு அழைப்பு விடுக்கப்பட்டதாகவும் நல்லிணக்க ஆணைக்குழு சிரேஷ்ட அதிகாரி கூறியுள்ளார்.

(ஸ்ரீ-2)

## 3 இலட்சத்து 60 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் வெள்ளத்தால் பாதிப்பு



மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் திருகோணமலை ஆகிய மாவட்டங்கள் உட்பட வடக்கு கிழக்குப் பிரதேசங்களில் பெய்து வரும் அடை மழை மற்றும் வெள்ளம் காரணமாக 97 ஆயிரத்து 144 குடும்பங்களைச் சேர்ந்த 3 இலட்சத்து 64 ஆயிரத்து 854 பேர் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பாதிக்கப்பட்டவர்களுள் 16ஆயிரத்து 117 பேர் இடம்பெயர்ந்த முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர் என்று இடர்முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது.

மட்டக்களப்பு, திருகோணமலை மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் 4ஆயிரத்து 31 குடும்பங்கள் முகாம்களில் தஞ்சம் புகுந்துள்ளன. இந்த மாவட்டங்களில் 63 முகாம்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

மழையாலும், வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு இங்குள்ள முகாம்களில் தேவையான நிவாரணப் பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

மேலும் இந்த மாவட்டங்களில் வெள்ளம் காரணமாக ஆயிரத்து 437 வீடுகள் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளன. இதுவரை இரண்டு மரணங்களும் சம்பவித்துள்ளன. (ஸ்ரீ-2)

## பன்றிக் காய்ச்சலுக்கான தடுப்பு மருந்தை பெறுவதற்கு அரசாங்கம் முயற்சி

இலங்கையில் பரவி வரும் பன்றிக் காய்ச்சலை எதிர்கொள்ளத் தேவையான தடுப்பு மருந்துகளை அரசாங்கம் உலக சுகாதார நிறுவனத்திடம் கோரியுள்ளது.

ஏற்கனவே இலங்கை அரசுக்கு 20 இலட்சம் தடுப்பு மருந்துகளை உலக சுகாதார நிறுவனம் வழங்கியுள்ள நிலையில், தற்போது மேலும் 5 இலட்சம் தடுப்பு மருந்துகள் கோரப்பட்டுள்ளன.

ஏற்கனவே அளிக்கப்பட்டுள்ள மருந்துகளின் பாவனைக் காலம் ஜனவரி மாதம் 8ஆம் திகதியுடன் முடிவடைவதால், புதிய மருந்துளை அரசு கோரியுள்ளதாக தொற்று நோய் நிபுணர் டாக்டர் நவரத்தினசிங்கம் ஜனகன் தெரிவித்துள்ளார்.

ஆனால் தற்போது மேலை நாடுகளில் உள்ள மருந்து தயாரிப்பு நிறுவனங்கள் மூன்று வைரஸ்களுக்கு எதிராக செயல்படும் ஒரு மருந்தை தயாரிப்பதில் தான் ஆர்வம் காட்டுவதால், இந்த மருந்துகளை மேலைநாடுகளிடம் இருந்து பெறுவதில் சிக்கல்கள் இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த நோய் காரணமாக இலங்கையில் குறைந்தது 23 பேர் வரை உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ)

## வடக்கில் ஐஸ் தொழிற்சாலைகளின் பரீட்சார்த்த உற்பத்தி ஆரம்பம்

யாழ்.மாவட்டத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள பனிக்கட்டி உற்பத்தி தொழிற்சாலைகள் இரண்டும் பரீட்சார்த்த உற்பத்தியை ஆரம்பித்துள்ளன.

முப்பது மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ள இத் தொழிற்சாலைகளில் ஒன்று யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்திடமும் மற்றையது வடமராட்சி கடற்றொழிலாளர் சங்க சமாசத்திடமும் ஒப்படைக்கப்படவுள்ளன.

புதிய ஐஸ்தொழிற்சாலைகள் உற்பத்தியை முழுமையாக மேற்கொள்ளும்போது யாழ். மாவட்ட கடற்றொழிலாளர்கள் தென்னிலங்கையில் இருந்து ஐஸ் கட்டிகளை எடுத்து வருவது தவிர்க்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

இத் தொழிற்சாலைகள் யாழ்ப்பாணம் நாலாம் குறுக்குத் தெருவிலும் மற்றையது பருத்தித்துறை இன்பருட்டியிலும் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. (ஸ்ரீ-2)

## இணையத்தளம் மூலமாக விசா வழங்கும் திட்டம் இலங்கையிலும் அறிமுகம்

(கொழும்பு)

இணையத்தளம் வாயிலாக, விசா பெற்றுக்கொள்ளும் இலகுமுறையை பிறந்திருக்கும் புத்தாண்டில் இலங்கையிலும் அறிமுகப்படுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இவ் ஆண்டு சுற்றுலா ஆண்டாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதையொட்டி, சுற்றுலாப் பயணிகளின் வசதி கருதியே இத் திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளதாக அரசாங்கத்தின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, அமைச்சர்களான பசில் ராஜபக்ஷ,பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் மற்றும் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோரின் கலந்துரையாடலுக்கு அமைவாக அரசாங்கம் இத் திட்டம் குறித்து விசேட கவனம் செலுத்தியுள்ளது.எதிர்வரும் காலங்களில் வெளிநாட்டவர்கள் அந் நாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்களுக்கு வராமல் இணையத்தளம் ஊடாகவே இலங்கை வருவதற்கான விசாவைப் பெற்றுக்கொள்ளும் நடைமுறை அமுலுக்கு வரவுள்ளது.

விசா வழங்குவதற்கான இணையத்தள சேவை 24 மணிநேரமும் இயங்கும் வகையில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் மேலும் தெரியவந்துள்ளது. (ஸ்ரீ)

# ஏற்றுமதி வருமானம் அதிகரித்த போதும்
# வர்த்தகப் பற்றாக்குறை உயர்வு - ம.வங்கி

2010இன் முதல் 10 மாதங்களில் ஏற்றுமதி மூலம் கிடைத்த திரண்ட வருமானம் அதிகரித்த அதேவேளை அதைவிட அதிகமான வீதத்தினால் இறக்குமதி செலவினம் அதிகரித்ததால், வர்த்தகப் பற்றாக்குறை உயர்வடைந்ததாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.மத்திய வங்கி வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

2010இன் முதல் 10 மாத காலப் பகுதியில் ஏற்றுமதிகளிலிருந்தான ஒன்றுதிரண்ட வருமானம் 6 ஆயிரத்து 505 மில்லியன் அமெரிக்க டொலர்.

இதேவேளை 2010இன் முதல் 10 மாத காலப் பகுதியில் இறக்குமதிகள் மீது ஏற்பட்ட திரண்ட செலவு 10 ஆயிரத்து 863 மில்லியன் அமெரிக்க டொலர்.

இதன் விளைவாக இக்காலப் பகுதியில் வர்த்தகப் பற்றாக்குறை 4 ஆயிரத்து 357 மில்லியனாகும். இது 2009இன் இக் காலப் பகுதியில் 2 ஆயிரத்து 431 மில்லியனாகக் காணப்பட்டது.

2010 ஒக்டோபரில் ஏற்றுமதிகளின் வளர்ச்சிக்கான பாரிய பங்களிப்பு கைத்தொழில்துறையிலிருந்து கிடைத்தது.இதற்கு புடைவைகள் மற்றும் ஆடைகள் ,இறப்பர் உற்பத்திகள், பொறிகள் மற்றும் கருவிகள் என்பவற்றிலிருந்தான வருவாய்களில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்புகள் வழிவகுத்தன.

வைரம் மற்றும் ஆபரண ஏற்றுமதிகளிலிருந்தான வருமானம் 10 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த போதிலும் கைத்தொழில் ஏற்றுமதிகளின் மற்றைய அனைத்து துணை வகைகளின் வருவாய்களிலும் ஏற்பட்ட வளர்ச்சி 26 சதவீத்தினைக் கடந்தது.

ஒக்டோபரில் தேயிலை மற்றும் இறப்பரின் சராசரி ஏற்றுமதி விலைகள் முறையே கிலோக் கிராமுக்கு 4.43 அமெரிக்க டொலர்ஆகவும், 3.81அமெ.டொலராகவும் தொடர்ந்து உயர்ந்த மட்டத்தில் விளங்கின.

2010 ஒக்டோபரில் நுகர்வுப் பொருட்களின் இறக்குமதி மீதான செலவினம் உயர்வடைந்தமைக்கு மோட்டார் வாகனங்களை முக்கியமாகக் கொண்ட உணவல்லா நுகர்வுப் பொருட்களின் உயர்ந்த இறக்குமதிகளே காரணமாகும்.

உணவு இறக்குமதிகள் மீதான செலவினம் அதிகரித்தமைக்கு சீனி இறக்குமதிகளின் உயர்ந்த விலைகளும் பால் உற்பத்திகளின் இறக்குமதி அளவு அதிகரித்தமையுமே முக்கிய காரணிகளாக விளங்கின.

பெற்றோலியம் மற்றும் வளமாக்கி என்பவற்றின் இறக்குமதிகளின் அளவு குறைவடைந்தமையின் காரணமாக அவை இரண்டினதும் இறக்குமதி செலவினம் 50 சதவீதத்திற்கும் கூடுதலாக வீழ்ச்சியடைந்தது.

2010இன் முதல் 10 மாத காலப் பகுதியில் தொழிலாளர் பண அனுப்பல்கள், 2009இன் இதே காலப் பகுதியை விட 3ஆயிரத்து 380 மில்லியன் அமெரிக்க டொலருக்கு 21.9 சதவீத்தினால் அதிகரித்தது.




# யாழ். வர்த்தக கண்காட்சிக்கு
# கொழும்பிலிருந்து வர்த்தகக் குழு




யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தக் கண்காட்சிக்காக இலங்கை கைத்தொழில் வர்த்தக சம்மேளனத்தின்(FCCISL) ஏற்பாட்டில் கொழும்பிலிருந்து வர்த்தகக் குழுவினர் யாழ்ப்பாணம் வரவுள்ளனர்.

யாழ்ப்பாணத்துடனான வர்த்தகத் தொடர்புகளை மீள ஆரம்பிக்கவும், அதிகரிக்கவும், எதிர்கால வர்த்தக வாய்ப்புகளை ஆராயவும் இச் சிறந்த வாய்ப்பை பயன்படுத்தி யாழில் முதலீட்டை மேற்கொள்ள முடியும் என எதிர்பார்த்து இக்குழுவினர் வருகை தரவுள்ளதாக இலங்கை கைத்தொழில் வர்த்தக சம்மேளன வட்டாரத் தகவல்கள் தெரிவித்தன.

யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகக் கண்காட்சி எதிர்வரும் 21,22 ,23-ம் திகதிகளில் யாழ் துரையப்பா விளையாட்டரங்கில் இடம்பெறவுள்ளது.

## ஜனசக்தியின் தரப்படுத்தல் உயர்த்தப்பட்டது

ஜனசக்தியின் இழப்பீட்டுக் கோரல்களை வழங்கும் திறனைக் கருத்தில் கொண்டு அந்நிறுவனத்தின் தரப்படுத்தலை Aயிலிருந்து BBB+ ஆக RAM லங்கா ரேட்டிங் தரமுயர்த்தியுள்ளது.முன்னைய கணிப்பு தொடக்கம் அதன் பொதுப் பிரிவில் செலவு விகிதத்தை மேம்படுத்தி சிறப்பான கோரல் விகிதத்தை தக்கவைத்துக் கொண்ட ஜனசக்தியின் உறுதியான செயற்பாடுகளின் அடிப்படையில் இத் தரமுயர்த்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக ஜனசக்தியின் முகாமைத்துவப் பணிப்பாளர் பிரகாஷ் சாப்டர் தெரிவித்துள்ளார்.

## 'லங்கா பெல்' பில்லை கார்கில்ஸில் செலுத்தலாம்

லங்கா பெல் தெலைபேசி நிறுவனம் தனது 'பில்' கொடுப்பனவு வலையமைப்பை மேலும் விரிவுபடுத்தும் வகையில் நாட்டின் முன்னணி சுப்பர் மார்கெட் தொடரான கார்கில்ஸ் புட் சிற்றியுடன் பங்காளித்துவத்தை ஏற்படுத்தியுள்ளது.

லங்கா பெல்லின் பிற்கொடுப்பனவு வாடிக்கையாளர்கள் இப்பொழுது தமது தொலைபேசிக் கட்டணங்களை நாடெங்கிலுமுள்ள 150 கார்கில்ஸ் புட் சிற்றி விற்பனை நிலையங்களில் ஏதேனும் ஒன்றில் செலுத்தலாம் என லங்கா பெல் முகாமைத்துவப் பணிப்பாளர் பிரசாத் சமரசிங்க தெரிவித்தார்.

## ஸ்பைஸ் கைத்தொலைபேசி இலங்கையில் அறிமுகம்

இந்தியாவில் பிரபலமடைந்துவரும் ஸ்பைஸ் கைத்தொலைபேசிகள், இலங்கையில் எக்ஸ்போ இன்டஸ்ரியல் குறூப்பின் கூட்டிணைவுடன் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.ஜனவரி முதல் இவ்வகை கைத்தொலைபேசிகளை இலங்கைச் சந்தைகளில் பெற்றுக்கொள்ள முடியும்.




## சிறிலங்கன் எயார்லைன்ஸுக்கு புதிய விமானம்

நாட்டுக்குவரும் உல்லாசப் பயணிகளின் அதிகரிப்பையடுத்து சிறிலங்கன் எயார் லைன்ஸ் மற்றுமொரு எயார் பஸ் ஏ 320 ரக பயணிகள் விமானத்தை கொள்வனவு செய்துள்ளது.தற்போது 4 ஏ320 விமானங்கள்,5 ஏ 330 விமானங்கள், 5 ஏ340 விமானங்களுடன் ஒற்றர் விமானம் ஒன்றையும் நிறுவனம் சொந்தமாகக் கொண்டுள்ளது.

# ஹீரோ-ஹோண்டா நிறுவனங்களின் கூட்டணி முறிந்தது

கடந்த 26 ஆண்டுகளாக இணைந்து செயல்பட்டு வந்த, ஹீரோ-ஹோண்டா நிறுவனங்களின் கூட்டணி முடிபடைந்தது. இந்தியாவின் முன்னணி இரு சக்கர வாகனங்களைத் தயாரிக்கும் நிறுவனமாக ஹீரோ-ஹோண்டா இருந்து வருகிறது. இதில் 'ஹீரோ' இந்தியக் கம்பனி; 'ஹோண்டா' ஜப்பான் கம்பனி. இரு நிறுவனங்களும் 1984இல் ஒன்றாக இணைந்து செயல்பட துவங்கின.

இந்நிறுவனத்தின் 'ஸ்பிளெண்டர்' மோட்டார் சைக்கிள் விற்பனையில் மிகப் பெரிய சாதனையை படைத்தது.இருசக்கர வாகனத் தயாரிப்பில் நீண்ட காலமாக இந் நிறுவனம் முதலிடத்தில் இருந்து வருகிறது. இந்நிலையில் இரு நிறுவனங்களும் தனியாக பிரிவது என முடிபெடுத்துள்ளன.அதனால் 26 ஆண்டுகளாக நீடித்து வந்த கூட்டணி,தற்போது முடிபுக்கு வந்துள்ளது.



இது குறித்து பங்குச்சந்தை நிபுணர் ஒருவர் கூறியதாவது,

கடந்த 26 ஆண்டுகளாக ஹீரோ நிறுவனத்துடன் ஒன்றாகச் செயற்பட்டு வந்த ஹோண்டா நிறுவனம் தன் வசமுள்ள 26 சதவீத பங்குகளை ஹீரோ நிறுவனத்துக்கு தற்போதைய பங்குவிலையில்விற்பனை செய்ய முடிபு செய்துள்ளது.(1.4 பில்லியன் அமெரிக்க டொலர்)

இதனால் நிறுவனத்தின் பணப் புழக்கத்தில் எந்தப் பிரச்சினையும் இருக்காது.

ஏற்கெனவே 'சுசுகி', 'எஸ்காார்ட்ஸ்' போன்ற நிறுவனங்கள் பிரிந்துள்ளன.

இரு சக்கர வாகனச் சந்தையில் மிகப்பெரிய வாய்ப்புக்கள் இருப்பதால் நிறுவனங்கள் தங்களது சொந்தப் பெயரில் வாகனங்களை உற்பத்தி செய்து விற்பனை செய்ய விரும்புகின்றன.

இதேவேளை, ஹீரோ ஹோண்டா நிறுவன நிர்வாக இயக்குநரும் தலைமை செயல் அதிகாரியுமான பவன்முன்னால் கருத்து தெரிவிக்கையில், 2014 வரை ஹீரோ - ஹோண்டா பிராண்டில் எந்த மாற்றமும் இருக்காது.ஹீரோ ஹோண்டா நிறுவனம் ஏற்கெனவே தயாரித்து விற்பனை செய்யும் மாடல்கள் இனியும் தொடர்ந்து தயாரிக்கப்படும். இது தவிர புதிய தயாரிப்புகளும் அறிமுகப்படுத்தப்படும். ஹீரோ ஹோண்டா என்று உள்ள பெயர் மாற்றம் செய்யப்படும். இப்போது வாகன விற்பனையில் 2 சதவீதம் முதல் 3 சதவீதம் வரை ராயல்டி தொகை ஹோண்டா நிறுவனத்துக்கு அளிக்கப்படுகிறது என்றார்.

ஆனால் எதிர்காலத்தில் ஹீரோ நிறுவனம் ஏராளமான சவால்களைச் சந்திக்க வேண்டி இருக்கும்.

ஹோண்டா நிறுவனம் ஏற்கனவே தனது பிராண்டில் முழுக் கவனத்தையும் செலுத்தி வருகிறது.

ஹீரோ ஹோண்டா நிறுவனத் தயாரிப்புகளில் ஸ்பிளெண்டர் மோட்டார் சைக்கிளுக்கு கடும் கேள்வி நிலவுகிறது.இதனால் நான்காவது ஆலையை அமைக்க நிறுவனம் திட்டமிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஆண்டிறுதியில் பணவீக்கம் 6.9 %.

தொகைமதிப்பு புள்ளிவிபரவியல் திணைக்களத்தினால் கணிக்கப்படும் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணால் அளவிடப்பட்டவாறான பணவீக்கம் புள்ளிக்குப் புள்ளி அடிப்படையில்நவம்பரின் 7.0 வீதத்துடன் ஒப்பிடுகையில் டிசம்பரில் 6.9 சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது.

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 110.20 | 112.02 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 169.58 | 173.80 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 145.51 | 150.04 |
| சுவிஸ் பிராங் | 116.66 | 120.57 |
| கனேடிய டொலர் | 109.29 | 112.98 |
| அவுஸ்திரேலிய டொலர் | 111.08 | 114.85 |
| சிங்கப்பூர் டொலர் | 84.96 | 87.64 |
| ஜப்பான் யென் | 1.34 | 1.38 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.47 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 30.20 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

## பங்குச் சந்தை விபரம்

(வார இறுதியில்)

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 6558.25 | 6635.87 ⇧ |
| மிலங்கா விலைச்சுட்டி | 6985.03 | 7061.46 ⇧ |

விலை அசைவுகளின் அடிப்படையில் — புரள்வு (ரூபா.மில்.) 7657.72

**உயர்வடைந்த பங்குகள்(ரூ.):** மல்வத்தை(X) (62.50), அகல்வத்தை (63.00),ஹகவத்தை (28.00),மோரிஷன்ஸ் (1600.00),ஹொட்டகல (116.90).

**சரிவைக் காட்டிய பங்குகள்(ரூ.):** பிரகியூட் (21.10), எஸ்.எம்.பி.லீசிங்(X) (0.60),கொன்பி ஹோட்டல் (243.10),புளூ டைமன்ஸ் (3.40),இன்டோ மலே(425.00).

மேலதிக தகவல்கள்: www.cse.lk

# கொழும்பில் 7 நட்சத்திர ஹோட்டல்;
# ரூ.1400 கோடிக்கு நிலத்தை வாங்கியது சங்கிரி-லா

காலிமுகத்திடலுக்கு முன்னால் அமைந்துள்ள, பாதுகாப்பு அமைச்சுக்கு சொந்தமான இராணுவத் தலைமையகம் அமைந்திருந்த 10 ஏக்கர் நிலத்தை, ஹொங்கொங்கை தளமாகக் கொண்ட சங்கிரி-லா நிறுவனக் குழுமம் 125 மில்லியன் அமெரிக்கடொலருக்கு( ரூ.ஆயிரத்து 400 கோடி)கொள்வனவு செய்துள்ளதாக அமைச்சு உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தலைவர் நாலக கொடஹேவாவும் இதனை உறுதி செய்துள்ளார்.75 மில்லியன் டொலர் செலுத்தப்பட்டுள்ளதாகவும், மிகுதி 50 மில்லியன் பின்னர் செலுத்தப்படவுள்ளதாகவும் தெரிவித்தார்.

கொழும்பில் அமைக்கப்படவிருக்கும் ஏழு நட்சத்திர ஹோட்டலுக்கு சங்கிரி-லா (Shangri-La)நிறுவனம் 500 மில்லியன் அமெரிக்க டொலர்களை முதலீடு செய்யவுள்ளது.இந்தக் ஹோட்டல் 500 அறைகளைக் கொண்டதாக அமைக்கப்படவுள்ளது.

1971ஆம் ஆண்டு சிங்கப்பூரில் முதன்முதலில் சங்கிரி-லா உல்லாச நட்சத்திர ஹோட்டல் அமைக்கப்பட்டது.அதன் பின்னர் அவுஸ்திரேலியா, கனடா, நேபாளம் , ஓமான், தாய்வான், மலேசியா, மாலைதீவுகள் உட்பட பல நாடுகளில் 70 ஹோட்டல்களை சங்கிரி-லா நிறுவனம் அமைத்துள்ளது.



சங்கிரி-லா நிறுவனத்துக்கு இலங்கை முதலீட்டு சபை அனுமதியளித்துள்ளதாக திறைசேரியின் செயலாளர் கலாநிதி பி.பீ.ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

## நூறு கோடி ரூபாவை மோசடி செய்ய முயற்சித்த இருவர் கைதாகினர்

(கொழும்பு)

ஆடைகளை ஏற்றிய கப்பல் ஒன்று இலங்கையை நோக்கி வருவதாகக் கூறி சுமார் நூறு கோடி ரூபாவை மோசடி செய்ய முயற்சித்த இருவர் இலங்கைத் துறைமுக சுங்க அதிகாரிகளினால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்களில் தனியார் வங்கியொன்றின் அதிகாரியும் அடங்குவதாகச் சுங்கப் பிரிவுத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

இலங்கையில் செயற்படாத ஒரு நிறுவனத்தின் பெயரில் போலிப் பதிவுகளையும் ஆவணங்களையும் அடையாளத்தை உறுதிப்படுத்தும் அட்டைகளையும் காண்பித்த இவர்கள் துறைமுக அதிகாரிகளை ஏமாற்றிப் பண மோசடியில் ஈடுபட முயற்சித்த போதே கைது செய்யப்பட்டனர்.

இவர்களால் கூறப்பட்ட ஆடைக் கப்பல் தொடர்பான தகவல்கள் குறித்து விசாரணை மேற்கொள்ளப்பட்ட போது அவ்வாறானதொரு கப்பல் இலங்கையை நோக்கி வரவில்லை என்ற விடயமும் அம்பலமாகியுள்ளது. (ஶ்ரீ-2)

## வன்னியில் யுத்தத்தின் போது கைவிடப்பட்ட 915 மோட்டார் சைக்கிள்கள் இனங்காணப்பட்டன

(கொழும்பு)

வன்னியில் யுத்தத்தின் போது கைவிடப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள்களில் 915 தற்போதைக்கு இனம் காணப்பட்டுள்ளதாக கிளிநொச்சி அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார்.

யுத்த காலகட்டத்தில் கடுமையான தாக்குதல் சூழ்நிலையில் இடத்துக்கிடம் எடுத்துச் செல்ல முடியாத காரணத்தால் உரிமையாளர்களால் கைவிடப்பட்ட 2000 மோட்டார் சைக்கிள்களை உரியவர்கள் ஆவணங்களைச் சமர்ப்பித்து பெற்றுக்கொள்ள முடியும் என்று அண்மையில் அறிவிக்கப்பட்டிருந்தது.

அதற்கமைவாக சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் மூலமாக 915 மோட்டார் சைக்கிள்கள் தற்போதைக்கு இனம் காணப்பட்டுள்ளன. அவற்றை உரியவர்களிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

இனங்காணப்பட்டுள்ள மோட்டார் சைக்கிள்களின் விபரங்கள் தற்போது கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. அதில் கோரப்பட்ட ஆவணங்களைச் சமர்ப்பித்து அவற்றின் உரிமையாளர்கள் தங்கள் வண்டிகளை எடுத்துச் செல்ல முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஶ்ரீ-2)

## கடந்த ஆண்டில் 57 ஊடகவியலாளர்கள் உலகளாவிய ரீதியில் கொல்லப்பட்டுள்ளனர்

### எல்லைகளற்ற ஊடகவியலாளர்கள் ஒன்றியம் தெரிவிப்பு

(கொழும்பு)

கடந்த ஆண்டில் 57 ஊடகவியலாளர்கள் உலகளாவிய ரீதியாக கொலை செய்யப்பட்டுள்ளதாக பிரான்ஸை தலைமையாகக் கொண்ட எல்லைகளற்ற ஊடகவியலாளர்கள் ஒன்றியம் விடுத்துள்ள வருடாந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொலைகள் பாகிஸ்தான், ஈராக் மற்றும் மெக்சிக்கோ ஆகிய நாடுகளிலேயே அதிக அளவில் இடம்பெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு ஊடகவியலாளர்களின் கொலைகளில் சிறிய அளவிலான வீழ்ச்சி காணப்பட்ட பொழுதிலும் கடத்தல் சம்பவம் அதிகம் இடம்பெற்றுள்ளதாக அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதற்கு இணங்க 51 ஊடகவியலாளர்கள் கடத்திச்செல்லப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஊடகவியலாளர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட கொலை மற்றும் கடத்தல் தொடர்பான சம்பவங்களுடன் தொடர்பானவர்களை கண்டுபிடித்து சட்டத்தின் முன் நிறுத்த அரசாங்கங்கள் அதிக சிரத்தை காட்டவில்லை எனவும் பிரான்ஸை தலைமையாக கொண்ட எல்லைகளற்ற ஊடக வியலாளர்கள் ஒன்றியம் குற்றம் சாட்டியுள்ளது. (ஶ்ரீ-2)

## அரச சார்பற்ற நிறுவனங்களை பாதுகாப்பு அமைச்சில் பதிவு செய்யுமாறு பணிப்புரை

(கொழும்பு)

ஆயிரத்து 300 அரச சார்பற்ற நிறுவனங்களை பாதுகாப்பு அமைச்சின் கீழ் பதிவு செய்யுமாறு அரசாங்கம் அறிவித்துள்ளது.

பெரும்பாலான அரச சார்பற்ற நிறுவனங்கள் இலங்கை அரசாங்கத்தின் சட்டதிட்டங்களை மதிக்காமல் நடந்து கொள்வதே அதற்கான காரணம் என்பதாக அரசாங்கம் அறிவித்துள்ளது. அத்துடன் இன்னும் சில அரச சார்பற்ற நிறுவனங்கள் இலங்கை அரசாங்கம் மற்றும் பாதுகாப்புப் படையினருக்கு எதிரான போக்கைக் கொண்டிருப்பதும் அதற்கான காரணம் என்பதாகவும் மேலும் தெரியவருகின்றது.

அதன் காரணமாக இனிவரும் காலங்களில் அனைத்து அரச சார்பற்ற நிறுவனங்களும் அவர்களுக்கு வெளிநாடுகளிலிருந்து பணம் கிடைக்கும் விதம், அதனைச் செலவு செய்யும் வழிகள் என்பன குறித்த விபரங்களை பாதுகாப்பு அமைச்சுக்குத் தெரிவித்தாக வேண்டும்.

இவ்வாறான நடவடிக்கைகள் மூலம் அரசாங்கத்துக்கு எதிராகச் செயற்படும் அரச சார்பற்ற நிறுவனங்களைக் கட்டுப்படுத்தலாம் என்பதாக பாதுகாப்பு அமைச்சு எதிர்பார்க்கின்றது. (ஶ்ரீ-2)

## விசாரணைகளை துரிதப்படுத்துமாறு விடுதலைப்புலி சந்தேகநபர்கள் கோரிக்கை

(கொழும்பு)

தமக்கு எதிரான விசாரணைகளை துரிதப்படுத்துமாறு தமிழீழ விடுதலைப்புலி சந்தேகநபர்கள் கோரிக்கை விடுத்துள்ளதாக உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. பூசா தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சிரேஷ்ட விடுதலைப்புலி சந்தேக நபர்கள் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளனர்.

அண்மையில் உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு பூசா தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழீழ விடுதலைப்புலி உறுப்பினர்களிடம் சாட்சியங்களை திரட்டியுள்ளனர்.

20 சந்தேக நபர்களிடம் உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவினர் சாட்சியங்களை திரட்டியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சாட்சியமளித்த சந்தேக நபர்களின் பெற்றோர் மற்றும் உறவினர்களை வடக்கு- கிழக்கில் நடைபெற்ற அமர்வுகளின் போது உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவினர் ஏற்கனவே சந்தித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள விடுதலைப்புலி உறுப்பினர்கள்சாதாரணபோராளிகள் அல்ல எனவும் உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. இதனால் இந்தச் சாட்சியம் திரட்டும் நடவடிக்கை பகிரங்கமாக நடத்தப்படவில்லை என சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை தமிழீழ விடுதலைப் புலிகளினால் தாக்குதல்களுக்கு இலக்கான அநுராதபுர கிராமங்களில் விரைவில் சாட்சியங்கள் திரட்டப்படும் என உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு அறிவித்துள்ளது. (ஶ்ரீ-2)

## சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளினால் மக்களுக்கான சலுகைகளை வழங்க முடியவில்லை

### ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

சர்வதேசநாணயநிதியத்தின்நிபந்தனைகளினால் மக்களுக்கு அரசாங்கத்தினால் சலுகைகளை வழங்க முடியவில்லை என எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாகவே அரசாங்கத்தினால் உத்தேசிக்கப்பட்டளவு சம்பள உயர்வினை மக்களுக்கு வழங்க முடியவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்துடன் ஏற்படுத்திக் கொண்டுள்ள இணக்கப்பாடுகளினால் புத்தாண்டில் மக்களுக்கு நிவாரணங்களை வழங்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதாக தெரிவித்த அவர் இந்த விடயம் குறித்து அரசாங்கம் பாராளுமன்றில் தெளிவுபடுத்த வேண்டுமென வலியுறுத்தியுள்ளார்.

வரிச் சலுகைகளை அகற்றுவதன் மூலம் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்த முடியும் என சர்வதேச நாணய நிதியம் அறிவித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (ஶ்ரீ-2)




★ 0366 - அலமானி எனப்படும் ஜேர்மனிய ஆதிக்குடிகள் ரைன் ஆற்றைக் கடந்து ரோமை முற்றுகையிட்டனர்.

★ 1492 - ஸ்பெயினில் முஸ்லிம்களின் ஆளுகைக்குட்பட்ட கடைசி நகரமான கிரனாடா சரணடைந்தது.

★ 1757 - கல்கத்தாவை ஐக்கிய இராச்சியம் கைப்பற்றியது.

★ 1782 - பிரித்தானியக் கிழக்கிந்தியக் கம்பனி அட்மிரல் எட்வெர்ட் ஹியூஸ் தலைமையில் இந்தியாவில் இருந்து திருகோணமலை நோக்கிப் புறப்பட்டது.

★ 1791 - ஒகையோ மாநிலத்தில் குழந்தைகள் உட்பட குடியேற்றவாசிகள் 14 பேரை இந்திய ஆதிக்குடிகள் படு கொலை செய்தனர்.

★ 1793 - ரஷ்யாவும் புரூசியாவும் போலந்தை பங்கிட்டன.

★ 1893 - வட அமெரிக்காவில் தொடரூந்துப் பாதைகளில் நேரத்தை அளவிடும் குரோனோமீற்றர்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.

★ 1905 - ரஷ்யக் கடற்படையினர் சீனாவின் போர்ட் ஆதரில் ஜப்பானியரிடம் சரணடைந்தனர்.

★ 1921 - ஸ்பெயினின் சாண்டா இசபெல் கப்பல் மூழ்கியதில் 244 பேர் கொல்லப்பட்டனர்.

★ 1941 - இரண்டாம் உலகப் போர்: வேல்ஸில் கார்டிஃப் என்ற இடத்தில் லாண்டாஃப் தேவாலயம் ஜேர்மனியரின் குண்டுவீச்சில் பலத்த சேதம் அடைந்தது.

★ 1942 - இரண்டாம் உலகப் போர்: மணிலா ஜப்பானியரினால் கைப்பற்றப்பட்டது.

★ 1955 - பனாமாவின் ஜனாதிபதி ஜோசே அன்ரோனியோ ரெமோன் படு கொலை செய்யப்பட்டார்.

★ 1959 - முதலாவது செயற்கைச் செய்மதி, லூனா 1, சோவியத் ஒன்றியத்தால் விண்ணுக்கு ஏவப்பட்டது.

★ 1971 - கிளாஸ்கோவில் உதைபந்தாட்ட மைதானம் ஒன்றில் இடம்பெற்ற விபத்தில் சிறுவர்கள் உட்பட 66 பேர் கொல்லப்பட்டனர்.

★ 1982 - சோமாலிய அரசுக்கு எதிரான தமது முதலாவது இராணுவ நடவடிக்கையை சோமாலிய தேசிய இயக்கம் தொடங்கியது. சோமாலியாவின் வடபகுதியில் அரசியல் கைதிகளை விடுவித்தனர்.

★ 1993 - யாழ்ப்பாணம், கிளாலி நீரேரியில் 50க்கும் மேற்பட்ட பயணிகள் படையினரால் படுகொலை செய்யப்பட்டனர்.

★ 1999 - விஸ்கொன்சின் மாநிலத்தில் இடம்பெற்ற பலத்த பனிப்புயலில் சிக்கி 68 பேர் கொல்லப்பட்டனர்.

★ 2006 - மன்னாரில் இலுப்பைக்கடவையில் இடம்பெற்ற வான் தாக்குதலில் 8 சிறுவர்கள் உட்பட 15 பொது மக்கள் கொல்லப்பட்டனர். 40 பேர் படுகாயமடைந்தனர்.

### பிறப்புகள்

★ 1940 - எஸ்.ஆர்.ஸ்ரீனிவாச வரதன், ஏபெல் பரிசு பெற்ற கணிதவியலாளர்.

★ 1961 - கேணல் கிட்டு, விடுதலைப் புலிகளின் மத்தியகுழு உறுப்பினர், தளபதி (இ.1993)

### இறப்புகள்

★ 1782 - கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்கன், இலங்கையின் கண்டியை ஆண்ட கடைசி அரசன்.

★ 1876 - மீனாட்சி சுந்தரம்பிள்ளை, தமிழறிஞர் (பி.1815)

★ 1960 - தி.வை.சதாசிவ பண்டாரத்தார், தமிழக வரலாற்று அறிஞர் (பி. 1892)

**2008 - விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்குமிடையே 2002 இல் கைச்சாத்திடப்பட்ட போர் நிறுத்த உடன் படிக்கையில் இருந்து வெளியேறுவதாக இலங்கை அரசு அறிவித்தது.**

# அவுஸ்திரேலியாவில் பேரழிவு; 2 இலட்சம் மக்கள் வெளியேற்றம்

(சிட்னி)

அவுஸ்திரேலியாவில் வரலாறு காணாத கனமழையால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால் அதன் வடபகுதி பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

இதுவரை இரண்டு இலட்சம் மக்கள் தங்கள் வசிப்பிடங்களை விட்டு விட்டு வெளியேறியுள்ளனர். சீனி ஏற்றுமதி நிறுவனங்கள் இழுத்து மூடப்பட்டுள்ளன. பசுபிக் கடல் பிராந்தியத்தில் லாநினா என்ற பருவ நிலை மாற்றம் ஏற்பட்டிருக்கிறது.

இது பசிபிக் பகுதியில் ஏற்படும் வெப்ப நிலை அதிகரிப்பிற்கான எல்நினோ மாற்றத்திற்கு எதிரிடையானது. சில ஆண்டுகள் இடைவெளியில் ஏற்படும் இப்பாதிப்பால் அவுஸ்திரேலியாவின் வடகிழக்குப் பகுதியில் கடந்த ஒரு மாதமாக கனமழை பெய்து வருகிறது.

இதனால் அப்பகுதியில் உள்ள ஆறுகளின் நீர்மட்டம் உயர்ந்து வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. உலகில் அதிகளவில் நிலக்கரி ஏற்றுமதி செய்யும் நாடுகளில் அவுஸ்திரேலியாவும் ஒன்று. இந்தக் கனமழை காரணமாக நிலக்கரி சுரங்கங்கள் மூடப்பட்டன.

மேலும் சீனி ஏற்றுமதி தொழிற்சாலைகளும் செயற்பட முடியவில்லை. வடமாகாண குயின்ஸ்லேண்ட் வெள்ளத்தில் மிதப்பதால் அங்கு பல்வேறு தொற்று நோய்கள் ஏற்பட வாய்ப்பிருப்பதாகவும் வெள்ள நீரோடு பாம்புகள், முதலைகள் வருவதற்கு வாய்ப்பிருப்பதாகவும் அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

இந்நிலையில் வெள்ளம் பாதித்த பகுதிகளை பிரதமர் ஜூலியா கில்லாட் நேற்று முன்தினம் பார்வையிட்டார். அதேநேரம் தெற்கு மாகாணங்களான விக்டோரியா மற்றும் தெற்கு அவுஸ்திரேலியாவில் கடும் வெயில் வாட்டுகிறது.

வெப்பநிலை 104 டிகிரியையும் தாண்டி விட்டதால் ஆங்காங்கே காட்டுத்தீ பரவி வருகிறது. ஆனால் அதிகரித்து வரும் வெப்ப நிலை காரணமாக எந்நேரமும் பேரழிவை உண்டுபண்ணும் காட்டுத்தீ ஏற்படலாம் என்பதால் சுற்றுலாப் பயணிகள் தெற்கு மாகாணங்களை விட்டு வெளியேறும்படி அதிகாரிகளால் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். (ஸ்ரீ-2)

## பிரேசிலின் முதல் பெண் ஜனாதிபதி நேற்று பதவியேற்றுள்ளார்

(பிராசில்லா)

பிரேசில் நாட்டின் முதல் பெண் ஜனாதிபதியாக 63 வயதாகும் டில்மா ரூஸ்ஸெப் நேற்று பதவியேற்றுள்ளார்.

தற்போதைய ஜனாதிபதியாக உள்ள லூயிஸ் இன்னாசியா லூலா டா சில்வாவின் பதவிக்காலம் நேற்றுடன் முடிவடைந்துவிட்டது.

புதிதாக பதவியேற்க உள்ள ஜனாதிபதிக்கு நாட்டில் நிலவிவரும் ஏழை, பணக்காரன் என்ற வித்தியாசத்தை குறைப்பது கடந்த 2014 இல் உலக கால்பந்து போட்டி மற்றும் 2016 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டியை நடத்துவது போன்ற மிகப்பெரிய சவால்களை எதிர்கொள்ளவிருக்கின்றனர்.

மேலும் இவர் தற்போது பதவி விலகிச் செல்லும் லூயிஸ் இன்னாசியா அமைச்சரவையில் பொருளாதார நிபுணராக பங்கு பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)






பாகிஸ்தானின் வடமேற்கில் பழங்குடியினப் பகுதிகளில் அமெரிக்கப் போர் விமானங்கள் சமீபகாலமாக குண்டுகள்வீசி வருகின்றன. இதைக் கண்டித்து ஆளும் கூட்டணியில் அங்கம் வகிக்கும் ஜமாயத் உலேமா கட்சி நேற்று முன்தினம் பேரணி நடத்தியது.

# தேவாலயத்தில் இடம்பெற்ற புத்தாண்டு பிரார்த்தனையின்போது குண்டுவெடிப்பு

## எழுவர் பலி; பலர்காயம்



(கெய்ரோ)

எகிப்து நாட்டின் வடக்கு பகுதியில் அலெக் சாண்டிரியா நகரம் உள்ளது. புத்தாண்டை முன்னிட்டு அங்குள்ள கிறிஸ்தவ தேவாலயத்தில் நேற்று முன்தினம் நள்ளிரவு சிறப்பு பிரார்த்தனை நடந்தது. இதில் கலந்து கொள்ள திரளான மக்கள் கூடியிருந்தனர். அப்போது தேவாலயத்தின் முன்பு நிறுத்தப்பட்டிருந்த காரில் திடீரென பெரும் சத்தத்துடன் குண்டு வெடித்தது. இதனால் கார் தீப்பிடித்து எரிந்தது. அப்பகுதி முழுவதும் அதிர்ந்தது. இதைத் தொடர்ந்து மேலும் 2 கார் குண்டுகள் வெடித்தன. இதனால் அப்பகுதி முழுவதும் கரும்புகை சூழந்தது. பிரார்த்தனையில் கலந்து கொண்ட மக்கள் அங்கு மிங்கும் சிதறி ஓடினர்.

இந்தத் தாக்குதல்களில் 7 பேர் அதே இடத்தில் பலியானார்கள். 24 பேர் காயம் அடைந்தனர். தகவல் அறிந்ததும் மீட்புக் குழுவினர் விரைந்து வந்தனர். காயம் அடைந்தவர்களை மீட்டு வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர். இச்சம்பவத்துக்கு அல்கொய்தா தீவிரவாத அமைப்பு பொறுப்பு ஏற்றுள்ளது.

கடந்த ஒக்டோபர் மாதம் 31 ஆம் திகதி ஈராக்கின் தலைநகர் பக்தாத்தில் கிறிஸ்தவ தேவாலயத்தில் இதுபோன்ற தாக்குதலை அல்கொய்தா தீவிரவாதிகள் நடத்தினர்.

அதில் 2 பாதிரியார்கள் , 7 இராணுவ வீரர்கள் உட்பட 44 பேர் உயிரிழந்தனர். அதை தொடர்ந்து கிறிஸ்தவர்களுக்கு எதிராக கொலை மிரட்டல்களை விடுத்து வந்தனர். அவர்கள் எகிப்திலும் கிறிஸ்தவ தேவாலயத்துக்கு வெடிகுண்டு தாக்குதல் மிரட்டல் விடுத்து வந்தனர்.

எகிப்தில் அலெக்சாண்டிரியா தேவாலயத்தில் கார் குண்டுத் தாக்குதல் நடைபெற்றதைத் தொடர்ந்து அங்கு கிறிஸ்தவர்களுக்கும் மற்றொரு பிரிவினருக்கும் இடையே மோதல் மற்றும் கலவரம் வெடித்தது. இரு தரப்பினரும் கல்வீசி தாக்கிக் கொண்டனர். பயங்கர ஆயுதங்களாலும் தாக்கி கொண்டனர். கலவரத்தை அடக்கும் பணியில் எகிப்து பொலிஸார் ஈடுபட்டுள்ளனர். (ஸ்ரீ-2)

# இந்திய இராணுவத்திடம் பயிற்சியா? நேபாள மாவோயிஸ்ட்கள் மறுப்பு

(காத்மண்டு)

நேபாள மாவோயிஸ்டுகள் இந்திய இராணுவத்தினரிடம் பயிற்சி பெறுகின்றனர் என்ற குற்றச்சாட்டை மாவோயிஸ்டுகள் மறுத்துள்ளனர்.

உத்தரகாண்ட் சட்டீஸ்காரில் உள்ள இந்திய இராணுவ முகாம்களில் நேபாள மாவோயிஸ்ட்டுகளுக்கு பயிற்சி அளிக்கப்படுவதாக அந்நாட்டு முன்னாள் இராணுவச் செயலர் பிவேக்ஷா எழுதியுள்ள புத்தகத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் காத்மண்டுவில் நேற்று முன்தினம் செய்தியாளர்களைச் சந்தித்த மாவோயிஸ்ட்டு செயலர் சி.பி.கஜுரி இந்திய இராணுவத்திடம் நேபாள மாவோயிஸ்ட்டுகள் பயிற்சி பெறுகிறார்கள் என்று கூறுவது மிகப்பெரிய தவறு. அடிப்படை ஆதாரமற்றது.

மாவோயிஸ்ட்டுகள் பல விடயங்களில் இந்தியாவுக்கு எதிரான நிலையில்தான் உள்ளனர் என்றார். மாவோயிஸ்ட்டுகள் இந்தியாவில் பயிற்சி பெறுவதாக பிவேக்ஷாவின் புத்தகத்தில் இடம் பெற்றுள்ளதை நகைச்சுவையாகத்தான் அனைவரும் எடுத்துக் கொள்வார்கள் என மாவோயிஸ்ட்டு செய்தித் தொடர்பாளர் தீனநாத் சர்மா கூறியுள்ளார்.

நேபாளத்தில் மன்னராட்சிக்கு எதிராகப் போராடி வந்த மாவோயிஸ்ட்டுகள் மன்னராட்சி முடிந்தபின் அரசியல் பாதைக்கு திரும்பினர். இப்போது நாட்டின் முக்கிய எதிர்க்கட்சியாக நேபாள மாவோயிஸ்ட்டு கட்சி உள்ளது. (ஸ்ரீ-2)



பாலியல் பலாத்காரம் செய்ததாக எழுந்த புகாரின் பேரில் இஸ்ரேலின் முன்னாள் ஜனாதிபதி மௌசிக் கட்சோவ் (நடுவில்) டெல் அபிப் மாவட்ட நீதிமன்றத்தில் நடந்த வழக்கு விசாரணைக்காக ஆஜராகியிருந்தார். இதில் அவர் குற்றவாளி என நிரூபிக்கப்பட்டுள்ளது.

# இணையத்தள பயன்பாட்டில் பேஸ்புக்கிற்கு முதலிடம்

(நியூயோர்க்)

அமெரிக்காவில் அதிகமானோர் பார்வையிட்ட இணையத்தளங்கள் பட்டியலில் பேஸ்புக் 8.9 சதவீதத்துடன் முதலிடம் பிடித்துள்ளதாக ஆய்வு தெரிவித்துள்ளது.

அமெரிக்காவில் கடந்த ஜனவரி, நவம்பர் ஆகிய மாதங்களில் அதிகமானோர் பார்வையிட்ட இணையத்தளம் குறித்து ஆய்வு நடந்தது. தொடங்கப்பட்ட குறுகிய காலத்திலேயே சமூக இணையத்தளமான பேஸ்புக் உலகம் முழுவதும் மக்களிடையே அதிக வரவேற்பை பெற்றது.

அதன் எதிரொலியாக கடந்த ஆண்டில் அமெரிக்கர்கள் இணையத்தளங்களைப் பார்வையிட்டதில் 8.9 சதவீதத்துடன் பேஸ்புக் முதலிடம் பிடித்தது. அடுத்ததாக 7.2 சதவீதத்துடன் கூகுள் 2 ஆம் இடம் பிடித்தது.

ஆனால் கூகுளின் துணை நிறுவனங்களான யூடியூப், ஈமெயில், ஜிமெயில் ஆகியவற்றை சேர்த்தால் அதிகமானோர் பார்வையிட்டதில் 9.9 சதவீதத்துடன் கூகுள் குழுமம் முதலிடம் பிடித்துள்ளது.

தொடர்ந்து பேஸ்புக் 8.9 சதவீதம், யாகூ 8.1 சதவீதத்துடன் அடுத்தடுத்த இடத்தை பிடித்ததாக ஆய்வில் தெரியவந்துள்ளது. (ஸ்ரீ-2)




# விஜய்க்கு வருது கோபம்

காவலன் வருதோ இல்லையோ இப்படியே இருந்தால் வேலைக்கு ஆகாது என்று நினைத்து அடுத்த படத்தில் இறங்கிவிட்டார் விஜய். காவலன் ஷூட்டிங் முடிந்ததும் "வேலாயுதம்" படத்தில் நடிப்பதாக இருந்த விஜய் காவலன் களேபரத்தில் "வேலாயுதம்" படத்தை தள்ளி வைத்தார். "வேலாயுதம்" படத்தை முடித்துவிட்டால் சீமானின் "கோபம்" படத்தில் நடிக்கச் சரியாக இருக்கும் என யோசித்து வந்தார்.

ஆனால் இப்போது சீமானும் சிறையில் இருந்து வெளியே வந்து விட்டார். விஜய்க்கு சீமானின் கதை பிடித்துவிட்டது. சீமானும் இந்தக் கதைக்கு விஜய்தான் சரியாக இருக்கும் என நினைக்கிறார். படத்தை தயாரிக்க தாணுவும் தயாராக உள்ளார். இன்னும் என்னவேண்டும் படத்தை தொடங்க வேண்டியதுதான். இந்த நேரத்தில் சீமானுக்கு நிறையக் கோபங்கள் இருக்கிறது, காவலன் விடயத்தில் விஜய்க்கும் நிறையக் கோபம். இதுதான் இணையச் சரியானநேரம் என்று இருவரும் நினைக்கிறார்கள்.

விஜய் ராகுலை சென்று சந்தித்தார். பின் அசின் விவகாரம் என விஜய் மீது உலகத் தமிழர்களுக்கு கோபம் இருக்கிறது. இப்போது நீங்கள் விஜயோடு இணைவது சரியாக இருக்குமா என்று சீமானிடம் கேட்டதற்கு, விஜய் ராகுலை சந்தித்தார் அவ்வளவுதான். மற்றப்படி உலகத் தமிழர்களுக்கு எதிராகவோ ஈழத்துக்கு எதிராகவோ தம்பி விஜய் ஏதும் செயற்படவில்லை என்று நான் நினைக்கிறேன். அப்படி செயற்பட்டால் அவர் மீது எனக்கும் கோபம் வரும் என்று அவர் தெரிவித்திருந்தார்.


விஜயின் கோபம் சினிமாவில் மட்டுமில்லை அரசியலாகவும் வெடிக்க இருக்கிற நிலையில் திருச்சியில் தன் மக்கள் இயக்கத்தின் முதல் மாநாட்டை நடத்த இருக்கிறார் விஜய். பொங்கல் கழித்து நடக்க இருக்கும் இந்த மாநாட்டில் தன் அரசியல் பிரவேசத்தைப் பற்றி வெளிப்படையாகப் பேச இருக்கிறார் எனவும் சொல்லப்படுகிறது. இதற்காக ஒவ்வொரு மாவட்டத்தின் ரசிகர் மன்றத் தலைவர்களை தனித்தனியாக சந்தித்து வருகிறார் விஜய்.

இப்போதைக்கு சீமானுடன் சேர்ந்து திரையில் கோபப்பட இருக்கிறார் விஜய். அதைத் தொடர்ந்து அமீரும் விஜயுடன் சேர்ந்து படம் எடுக்க இருக்கிறார். இது தான் விஜய் பிளான். ஆனால் அதற்குள்ளாக என்ன நடக்குமோ? நல்லது நடந்தா சரி...,

# காதலர்களுக்காக சிம்பு கண்டிசன்!

இப்போதைக்கு இளசுகளின் காதை குத்தகைக்கு எடுத்து இருக்கிறது சிம்பு எழுதி அவருடன் யுவன்ஷங்கர் ராஜா பாடிய பாட்டு. எவன்டி உன்னப் பெத்தான்! அவன் கையில் கிடைச்சா செத்தான்! நடு நடுவில் கடாக் முடாக் என்று கடித்துத் துப்பும் கசமுசா வார்த்தைகளோடு செல்போன்களில் சிணுங்கிக் கொண்டிருக்கிறது வானம் படத்தின் பாடல். வானம் படத்தின் எல்லாப்பாடல்களும் இன்னும் வெளியாகவில்லை. இணையத்தளத்தில் இந்த ஒரு பாடல் மட்டும் எப்படியோ கசிந்துவிட்டதால் இந்தப் பாடலை தனியாக வெளியிட்டார்கள்.

புதுவருடத்தின்ஆரம்பத்திலேயே மூன்று ரீமேக் படங்கள் வெளிவர இருக்கின்றன. தெலுங்கு ரீமேக்குகளான சிறுத்தை, வானம், மலையாளம் ரீமேக்கான காவலன். இதில் வானம் பெப்ரவரி மாதம் 14 ஆம் திகதி காதலர்கள் தினத்தன்று வெளிவர இருக்கிறதாம்.



வானம், முழுக்க முழுக்க காதல் கதை இல்லை என்றாலும் இதில் காதலும் இருக்கிறது. காதலர்களுக்காக வானம் படத்தை காதலர் தினத்தன்று வெளியிட வேண்டும் என வானம் தயாரிப்பாளரிடம் கூறியிருக்கிறாராம் சிம்பு.

விரைவில் இசை வெளியீட்டையும் திட்டமிட்டு வருகிறார்கள். சிம்பு, பரத், அனுஷ்கா, வேகா, சிநேகா உல்லால், பிரகாஷ்ராஜ், சோனியா அகர்வால் என பெரிய லிஸ்ட் போடுகிற அளவிற்கு இதில் முக்கியமான கதாபாத்திரங்கள் இருக்கிறார்கள்.


அனுஷ்கா, சிம்பு போட்டிருக்கிற குத்தாட்டம் இந்தவருடத்தின் டொப் லிஸ்டில் இருக்கப் போகிறது என சொல்கிறார்கள் படக்குழுவினர்.

யுவன் ஷங்கர் ராஜாவின் ஒற்றைப் பாடலுக்கே இவ்வளவு வரவேற்பு என்றால் இன்னும் மொத்தமாக வந்தால்... மன்மதன், வல்லவன் மாதிரி வானமும் பாடல்களில் சக்கைபோடு போடப் போகிறது. அவன் இவன், மங்காத்தா, வானம் என அடுத்தடுத்து இந்த வருடத்தில் யுவனின் இசை கலக்க இருக்கிறது...

# 16லிருந்து 25 வயது வரையிலான காதல்



16 என்று பெயர் வைத்திருக்கும் சிவாவின் படத்தை சபாபதி தட்சிணா மூர்த்தி இயக்கியுள்ளார். இசை யுவன் ஷங்கர் ராஜா. படத்தில் 16லிருந்து 25 வயது வரையிலான காதலை சொல்லியிருக்கிறார்களாம். சமீபத்தில் இதன் பாடல்கள் வெளியீட்டு விழா நடந்தது. தயாரிப்பாளர் தாணு, லிங்குசாமி உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர். எல்லோரும் விரும்பக்கூடிய காதல் கதை என்பதால் இந்தப் படம் நிச்சயம் வெற்றிபெறும் என நம்பிக்கை தெரிவித்துள்ளார் சிவா.




# 2011 இல் பில்லா 2

"சர்வம்" படத்துக்கு பின் நீண்ட இடைவெளி விட்டிருக்கிறார் இயக்குநர் விஸ்ணுவர்த்தனன். இதில் சில கதைகளை எழுதியிருக்கிறார். அடுத்து சரித்திர படத்தை இயக்கும் முயற்சியில் இருந்தாலும் "பில்லா 2" கதையும் உருவாக்கி வைத்துள்ளாராம். ஏற்கனவே "பில்லா 2" இயக்கப் பேச்சு நடந்தது. அதன்பின் அப்படம் உருவாகுமா ஏன்பது முடிவாகவில்லை. அஜித் மேல எனக்கு தனி மரியாதை இருக்கு. 'பில்லா 2' இயக்க அவர் எப்போகூப்பிட்டாலும் ரெடியா இருப்பேன் என்றார் விஷ்ணு.

பில்லா 2 படத்தை தொடங்க அஜித்தும் தற்போது ஒப்புதல் வழங்கியுள்ளாராம். மங்காத்தா முடிந்த பின்னர் அஜித் பில்லா 2 இல் நடிக்கிறார். இதுதான் அவரது 51 ஆவது படம் என்பது ஏறக்குறைய முடிவாகிவிட்டது. பில்லாவில் பணிபுரிந்த தொழில்நுட்பக் கலைஞர்கள்தான் பில்லா இரண்டாவது பாகத்திலும் பணிபுரிகிறார்கள்.




இசைக்கு யுவன், கமராவுக்கு நீரவ்ஷா. முந்தைய பாகத்தைப் போலவே இதற்கும் காஸ்ட்யூமுக்கு கணிசமான தொகை செலவு செய்ய முடிவெடுத்துள்ளார்கள்.

# தல பிறந்தநாளில் 'மங்காத்தா' ரிலீஸ்!



அல்டிமேட் ஸ்டார் அஜித் வெங்கட் பிரபு இயக்கத்தில் மங்காத்தா படத்தில் நடித்து வருகிறார். இதன் அடுத்தகட்ட படப்பிடிப்பு படுவேகமாக நடந்து வருகிறது. தற்போது ஐதராபாத்தில் ஷூட்டிங் முடிந்த பின்னர் மீண்டும் சென்னையில் ஷூட்டிங் நடக்கும் என படக்குழு தெரிவித்துள்ளது. இதனையடுத்து இயக்குநர் வெங்கட் பிரபுவும், தயாரிப்பாளர் தயாநிதி அழகிரியும் மங்காத்தா படத்தை தல பிறந்தநாள் அன்று வெளியிட முடிவு செய்துள்ளதாக தகவல்கள் தெரிவிக் கின்றன. அதேபோல் தல அஜித்தின் ரசிகனாக இருக்கும் யங் சூப்பர் ஸ்டார் சிம்பு நடிக்கும் "வானம்" திரைப்படத்தை அதன் இயக்குநர் க்ரிஷ் சிம்பு பிறந்தநாள் (பெப்ரவரி 3ஆம் திகதி) அன்று ரிலீஸ் செய்ய முடிவு செய்துள்ளார்.

# நான்கு இலட்சமும் வடிவேலு டார்ச்சரும்

கோடி, கோடியாக சம்பாதித்தாலும் காசு விடயத்தில் மிகவும் கறாராக இருக்கிறார் வடிவேலு. சில மாதங்களுக்கு முன்பு நடந்த இந்தச் சம்பவம், இப்போதுதான் வெளிச்சத்திற்கு வந்துள்ளது.

வடிவேலு தன் மகன் சுப்பிரமணியை எப்படியாவது நடிக்க வைத்து முன்னணி ஹீரோவாக ஆக்கத் துடிக்கிறார். ஆனால் மகனுக்கோ நடிப்பு சுத்தமாக வரவில்லை. இதனையடுத்து தமது மகனை கூத்துப்பட்டறை ஒன்றில் சேர்த்துள்ளார். இதற்காக நான்கு இலட்ச ரூபாவை மொத்தமாக கட்டியுள்ளார். ஆனால் மகனோ நான்கு நாள் கூட ஒழுங்காக பயிற்சிக்கு போகவில்லை. அப்பா என்னால் முடியாது என்று வடிவேலுவிடம் கூறிவிட்டாராம்.

இதனையடுத்து அந்தப் பயிற்சி நிறுவனத்துக்கு போன் செய்த வடிவேலு, என் மகன் நான்கு நாள் கூடப் பயிற்சிக்கு வரவில்லை. ஆகையால் நான் கட்டிய நான்கு இலட்ச ரூபாவை திருப்பித் தாருங்கள் என்று கேட்டுள்ளார். அந்தப் பயிற்சி நிறுவனமோ அப்படியெல்லாம் பணத்தை தர முடியாது. வேண்டுமானால் உங்கள் மகனை மீண்டும் பயிற்சிக்கு வரச் சொல்லுங்கள் என்று கூறிவிட்டனர். ஆனால் வடிவேலு தொடர்ந்து அந்த நிறுவனத்திடம் பணத்தை தரச் சொல்லி நச்சரித்துக் கொண்டு இருக்கிறாராம்.



# 2010 ஆம் ஆண்டில் முதல் 10 படங்கள்


























# இணையம் ஊடாக வெளிவாரிப்பட்ட கற்கை நெறிகளை நடத்த தீர்மானம்

இணையம் ஊடாக வெளிவாரிப்பட்டக் கற்கைநெறிகளை நடத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்கள் மற்றும் வெளிநாட்டுப் பிரஜைகள் இந்த வெளிவாரிப்பட்டக் கற்கை நெறிகளினால் நன்மை அடைவார்கள் எனக் குறிப்பிட்டுள்ளது.

நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி சிறந்த கல்விச் சேவையை வழங்குவதே பிரதான இலக்கு என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் காமினி சமரநாயக்க தெரிவித்துள்ளார்.

இணையம் ஊடாக வெளிவாரிப்பட்டக் கற்கைநெறிகள் அறிமுகப்படுத்தப்பட்டதன் பின்னர் கல்வித்துறையில் பாரிய மாற்றங்களை எதிர்பார்க்க முடியும் என நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

வெளிவாரிப்பட்டக் கற்கை நெறிகளுக்கு மாணவர்களை சேர்ப்பது தொடர்பில் அண்மையில் தற்காலிகமாக தடைவிதிக்கப்பட்டிருந்ததாகவும் தற்போது அந்தத் தடை நீக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

மாணவர் அனுமதி நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்தும் நோக்கில் இவ்வாறு தற்காலிகத் தடை விதிக்கப்பட்டதாகவும் மீளவும் மாணவர்களை இணைத்துக் கொள்வதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

நாடு முழுவதிலும் 11 பல்கலைக்கழங்களினால் நடத்தப்படும் வெளிவாரிப்பட்டக் கற்கை நெறிகளில் 2 இலட்சத்து 40 ஆயிரம் மாணவ, மாணவியர் கல்வி கற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2)

# டெங்கு நோயாளிகளுக்கு தகுந்த சிகிச்சை வழங்கப்படாமையால் பலர் உயிரிழப்பு

டெங்கு நோயினால் பீடிக்கப்பட்டவர்களுக்கு சரியான முறையில் சிகிச்சை அளிக்கப்படாமையினால் உயிரிழப்பு சம்பவங்கள் அதிகளவில் இடம்பெற்றுள்ளதாக ஆய்வுகளின் மூலம் தெரியவந்துள்ளது.

சுகாதார அமைச்சின் தொற்றுப் பிரிவு நிபுணத்துவ வைத்தியர்களான டாக்டர் கோலித செல்ஹேறவா மற்றும் சிறுவர் நல மருத்துவர் ஜயந்த வீரமன் ஆகியோர் இந்தத் தகவல்களை வெளியிட்டுள்ளனர்.

டெங்கு நோயாளிகளை தீவிர சிகிச்சை பிரிவில் வைத்து சிகிச்சை அளிக்கப்பட வேண்டிய அவசியமில்லை எனவும் சில வைத்தியசாலைகளின் மருத்துவர்கள் இவ்வாறு நோயாளிகளுக்கு சிகிச்சை அளித்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்றுக் கொள்ளப்பட்ட அளவில் பரசிட்டமோல் மற்றும் சேலைன் ஆகிய மருந்துப் பொருட்கள் மட்டுமே நோயாளிகளுக்கு வழங்கப்பட வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது.

2009 ஆம் ஆண்டில் இலங்கையில் சம்பவித்த டெங்கு மரணங்களில் பல பொருத்தமற்ற சிகிச்சைகளினால் ஏற்பட்டவை என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

டெங்கு நோயினால் கடந்த ஆண்டில் இதுவரையில் 235 பேர் உயிரிழந்துள்ளதுடன் 33 ஆயிரத்து 843 பேர் நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

டெங்கு நோயாளிகளுக்கு சிகிச்சை அளிப்பது தொடர்பில் விசேட வழிகாட்டல்களை தொற்று நோய்ப் பிரிவு வைத்தியர்கள் அறிமுகப்படுத்தியுள்ளனர். (ஸ்ரீ-2)

# இவ்வாண்டின் முதலாவது சுற்றுலாப்பயணி விமான நிலையத்தில் வைத்து வரவேற்பு

(கொழும்பு)

இவ்வாண்டில் முதலாவதாக இலங்கைக்கு வந்த வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் இருவர் நேற்று விசேடமாக வரவேற்கப்பட்டனர்.

ஸ்கொட்லாந்து நாட்டைச் சேர்ந்த மைக் ஜேமன் தம்பதியர் இவ்வாண்டின் முதல் சுற்றுலாப்பயணிகளாக சிங்கப்பூரில் இருந்து அதிகாலை 12.10 மணிக்கு பண்டார நாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

இவர்களை சுற்றுலாத்துறை அமைச்சின் அதிகாரிகள் வரவேற்றனர். (ஸ்ரீ-2)

# பொருளாதார நன்மைகள் சகலருக்கும் சமமாக பங்கிடப்பட வேண்டும்

## புத்தாண்டுச் செய்தியில் ஜனாதிபதி தெரிவிப்பு

பொருளாதார நன்மைகள் அனைவருக்கும் சமாகப் பங்கீடு செய்யப்பட வேண்டுமென ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

புத்தாண்டை முன்னிட்டு வெளியிட்டுள்ள விசேட வாழ்த்துச் செய்தியில் அவர் இதைனைக் குறிப்பிட்டள்ளார்.

பரஸ்பர புரிந்துணர்வு,நம்பிக்கை ஆகியவற்றின் அடிப்படையில் நாட்டின் சகல மக்களும் அபிவிருத்திை'. இலக்காகக் கொண்டு அர்ப்பணிப்புடன் பாுபட வேண்டுமெனஅவர் வலியுறுத்தியுள்ளார்.நாட்டில்சுபீட்சத்தை உருவாக்குவதற்கான சகல சந்தர்ப்பங்களையும் பயன்படுத்திக் கொள்வதே அரசாங்கத்தின் நோக்கம் என அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டில் சுதந்திரமும்,சமாதானமும் நிலைநாட்டப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார். நாட்டை அபிவிருத்தி செய்வதற்கும் ஒருமைப் பாட்டை ஏற்படுத்துவதற்கும் தேசிய நல்லிணக்கம் மிகவும் அவசியமானது என அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# ஐ.நா.குழுவிற்காக தகவல்களை திரட்டிய 15 பேர் குறித்து விசாரணை

## சிங்கள ஊடகம் தெரிவிப்பு

ஐக்கிய நாடுகளின் ஆலோசனை குழுவிற்காக தகவல்களைத் திரட்டிய 15 பேர் தொடர்பில் பாதுகாப்புத் தரப்பினர் விசாரணைகளை அரம்பித்துள்ளதாக திவயின பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

மன்னார், வவுனியா போன்ற பிரதேசங்களில் இலங்கை இராணுவத்தினருக்கு எதிராக இந்தத் தகவல்கள் திரட்டப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய நாடுகளின் ஆலோசனைக் குழுவிற்கு தகவல்களை வழங்கும் நோக்கில் குறித்த குழுவினர் செயற்பட்டுள்ளதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

டிபென்டர்ஸ் என தம்மை அடையாளப் படுத்திக்கொண்ட குறித்த கும்பலின் தகவல்களைக் புலானாய்வுப் பிரிவினர் திரட்டியுள்ளனர். வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனமொன்று இந்தக் குழுவிற்கு அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய நாடுகள் அமைப்பிற்காக தகவல்களைத் திரட்டுவதாக வவுனியா தமிழ் மக்களிடம் குறித்த குழுவினர் குறிப்பிட்டுள்ளதாக செய்தியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவனம் யாழ்ப்பாணத்தில்

(கொழும்பு)

தேசிய வியாபார முகாமைத்துவ நிறு வனத்தின் கிளை நிறுவனம் ஒன்றை யாழ்ப் பாணத்தில் அமைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று இளைஞர் விவகார மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சர் டலஸ் அழகப் பெரும தெரிவித்தார்.

இளைஞர் விவகார மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சின் ஊடாக வட மாகாணத்தில் மேற்கொள்ளப்படவுள்ள வேலைத் திட்டங்கள் தொடர்பில் விபரிக்கையிலேயே அமைச்சர் இந்த விடயங்களைக் குறிப்பிட்டார்.

இந்த விடயம் தொடர்பில் அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போதைய நிலைமையில் தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவனத்தின் கிளைகள் கொழும்பு, கண்டி , குருணா கல், காலி ஆகிய இடங்களில் மட்டுமே உள்ளன. அவற்றை நாட்டின் ஏனைய பகுதிகளுக்கும் கொண்டு செல்ல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

அந்த வகையில் தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவனம் முதற் தடவையாக வட மாகாணத்துக்கு செல்லவுள்ளது.

அதன்படி கிளை நிறுவனத்தை யாழ்ப்பாணத்தில் அமைப்பதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கட்டடங்களை அமைக்கும் வேலைத் திட்டங்கள் முடிந்து விட்டன. இம் மாதத்தில் இந்த கல்வி நிறுவனத்தின் கிளை யாழ்ப்பாணத்தில் திறக்கப்படும்.

இதேவேளை யாழ்ப்பாண மாவட்டத்தில் இம் மாத்ததிற்குள் தொழில் நுட்பவியல் கல்லூரி ஒன்றை அமைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இவ்வாறான் தொழில் நுட்பவியல் கல்லூரிகளை மேற்கத்தேய நாடுகளில் சிறிய பல்கலைக்கழகங்கள் என்று கூறுவார்கள்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் செயற்றிட்டமான ஒரு மாகாணத்துக்கு ஒரு தொழில் நுட்பவியல் கல்லூரி என்ற திட்டத்தின் கீழ் வட மாகாணத்துக்கான கல்லூரி யாழ்ப்பாணத்தில் அமைக்கப்படும். (ஸ்ரீ-2)



வடக்கு மாகாண கல்வி அமைச்சினால் யாழ். கல்வி வலயத்தில் புதிதாக ஆசிரிய ஆலோசகர்களாக நியமனம் பெற்றவர்களுக்கான ஆலோசனைக் கலந்துரையாடல் நேற்று யாழ். வலயக் கல்விப் பணிமனையில் நடைபெற்றதைப் படத்தில் காணலாம். (படம்:-என்.குமார்)

Hatton National Bank

அடகுப் பொருட்கள் ஏலவிற்பனைக்கான அறிவித்தல்

ஹற்றன் நஷனல் வங்கி யாழ்ப்பாணம், சுன்னாகம், நெல்லியடி, ஸ்ரான்லி வீதி, மானிப்பாய் ஆகிய கிளைகளில் 31/10/2009 இற்கு முன்னர் அடகு வைத்து இதுவரை மீட்கப்படாத, காலாவதித் திகதியை நீடிக்க ஆவன செய்யாத வாடிக்கையாளரின் அடகு நகைகள் 08/01/2011 சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு இல.212, 214, ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள யாழ். கிளையில் ஏலத்தில் விடப்படும் என்பதை அறியத் தருகின்றோம்.

உங்களின் பெறுமதிமிக்க பொருட்களை உடனே மீட்க முடியாவிட்டால்...

☞ கடனுக்குரிய வட்டியையும் கடனின் ஒரு பகுதியையும் (ரூபா.500)செலுத்தி

*அல்லது*

☞ தற்போதைய சந்தைப் பெறுமதிக்கும் அதிகரித்த கடன் தொகைக்கும் ஏற்ப உங்கள் அடகுப் பொருட்களை மீள அடகு வைத்து காலாவதித் திகதியை நீடித்துக் கொள்ளலாம்.

ஏல விற்பனைத் திகதியினை பிற்போடும் மற்றும் ஏலத்தினை இரத்துச் செய்யும் உரிமை வங்கிக்கு உண்டு.

**ஹற்றன் நஷனல் வங்கி.** (சி/2026)

துணிச்சலாக நேர் வழியில் வாழ்ந்தால் பிரச்சினை களும் கவலைகளும் மட்டுமல்ல எதிரிகளும் அமைதியாகி விடுவார்கள். – நேருஜி

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# பொறுப்பானவர்களுக்கு ஒரு பகிரங்க மடல்

2011ஆம் ஆண்டின் நடவடிக்கைகளுக்குத் தயாராகி இருக்கின்ற உங்களோடு சிலவற்றைப் பகிர்ந்து கொள்ள வேண்டுமென விரும்பி இம் மடலை எழுதுகின்றோம்.

யாழ்ப்பாணத்தில் பலரதும் பகைமைக்கு ஆளான துறையாகப் பத்திரிகைகள் இருக்கின்றன என்பதை இவ்விடத்தில் முதலில் கூறியாக வேண்டும்.

தமக்குச் சாதகமாகச் செய்தி வெளிவரும் போது பத்திரிகைகள் சரியாக இயங்குகின்றன எனக் கூறுவோர், உண்மையைக் கூற முற்படும் போது பல கோணங்களில் நின்று விமர்சிக்கத் தொடங்கி விடுவர். இந்நிலைமை அரச நிர்வாகத்திலும், அரசியல் புலத்திலும் தாராளமாக உண்டு.

இந்தக் குறை அளப்பிற்குப் பத்திரிகையின் பொறுப்பை அவர்கள் அறியாமல் இருப்பதும் பத்திரிகைகளை வாசிக்காமல் விடுவதுமே காரணம் எனலாம்.

பொறுப்பான பதவிகளில் உள்ளவர்கள் (இது அரச நிர்வாகம் சார்ந்ததாகவோ அல்லது அரசியல் சார்ந்ததாகவோ இருக்கலாம்) கட்டாயமாகப் பத்திரிகைகளை வாசிக்க வேண்டும். தொடர்ச்சியாகவும் வாசிக்க வேண்டும்.

பத்திரிகைகளை வாசிக்காமல் விட்டுவிட்டு மூன்றாம் நபர் கூறுவதைக் கேட்டு உணர்ச்சி வசப்படுவதோ உண்மையை அறியாமல் துள்ளிக் குதிப்பதோ அறிவார் தொழிலன்று.

மெய்ப்பொருள் காண்பவர்களே அறிவுடையவர்கள் என்பது வள்ளுவரின் முடிபு. அந்த முடிபில் இருந்து விடுபட்டு அறிவுடைமைக்குப் புதியதோர் வரைவிலக்கணம் தேடும் முயற்சியும் அறிவிலித்தனமாக இருக்கும் என்பதால், வள்ளுவரின் முடிபோடு நின்றால், எங்களில் பலர் பத்திரிகைகளைப் பயனுறுதிமிக்க வகையில் பயன்படுத்த இல்லையென்றே கூற வேண்டும்.

பத்திரிகைகள்தான் மக்களின் பல்கலைக் கழகமென ஓர் அறிஞன் கூறிய கருத்தைச் சிந்திக்க வேண்டும். அந்தச் சிந்தனையில் பத்திரிகைகள் மூலம் மக்கள் மத்தியில் அறிவியலையும் ஆன்மீகத்தையும் ஒழுக்கமுடைமையையும் விரைவாக ஏற்படுத்த முடியும்.

எனினும் எங்கள் யாழ்.பிராந்தியத்தில் பத்திரிகைகளைப் பகைமை உணர்வோடு பார்க்கும் பரிதாப நிலையே உண்டு.

இதற்கு மேலாகப் பத்திரிகைகளுக்குத் தகவல்களை வழங்குவது வெறுப்புக்குரிய விடயமாகக் கருதப்படுகின்றது.

குறிப்பாக யாழ்.போதனா வைத்தியசாலை மற்றும் இங்குள்ள பொலிஸ் நிலையங்கள் தகவல்களை மூடி மறைப்பதில் மிகவும் மும்முரமாகச் செயற்படுகின்றன. மறைக்க வேண்டிய செய்திகளை மறைப்பது அறத்தின் பாற்பட்டது. அதேநேரம் செய்திகளை அறியும் உரிமை வாசகர்களுக்குண்டு என்பதையும் நாம் மறந்து விடக் கூடாது.

எனவே எதற்கெடுத்தாலும் சீறிச் சினக்கும் இயல்பால் நாம் எதனையும் சாதிக்க முடியாது. அதுதான் இயல்பென்றால் அதற்குச் சிகிச்சையும் உண்டு. எனவே அன்பார்ந்தவர்களே! 2011ஆம் ஆண்டில் உங்கள் வலம்புரி மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை இவ்விடத்தில் ஆராயவுள்ளது. இது தொடர்பில் தயவுசெய்து நடவடிக்கை எடுங்கள் அல்லது உங்கள் விளக்கங்களை மக்களுக்குத் தெளிவுபடுத்துங்கள். தேவையற்ற விமர்சனங்கள் பயனற்றவை.

பல வழிகளிலும் நொந்து போயுள்ள எங்கள் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண அனைவரும் பாடுபடுவோம்.

# இராணுவத்திலிருந்து 60 ஆயிரம் பேரை இடைநிறுத்த அரசாங்கம் முடிவு!

இராணுவத்தில் பணியாற்றி வரும் சுமார் 60 ஆயிரம் பேரை உடனடியாகப் பணிகளிலிருந்து நீக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

முன்னர் செய்த தவறுகளைக் கவனத்தில் கொண்டு ஒழுக்கச் சீர்கேடு என்ற குற்றச்சாட்டின் கீழ் இவர்கள் பணி நீக்கம் செய்யப்படவுள்ளதாகவும் சாதாரண சிப்பாய் முதல் உயரதிகாரிகள் வரை இவ்வாறு பணி நீக்கம் செய்யப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

பணியிலிருந்து நீக்கப்பட வேண்டியவர்களின் பட்டியலை இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜகத் ஜயசூரிய நியமித்துள்ள குழுவொன்று தயாரித்து வருவதாகவும் இந்தக் குழுவின் தலைவராக மேஜர் ஜெனரல் தயா ரத்நாயக்க பணியாற்றி வருவதாகவும் பணி நீக்கம் செய்யப்படவுள்ள இராணுவத் தினரில் பலர் கடந்த காலங் களில் போர் முனைகளில் பணியாற்றியவர்கள் என தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் பல வருடங்களுக்கு முன்னர் முன்னறிவித்தலின்றி விடுமுறையில் இருந்தவர்களும் உள்ளனர். அத்துடன் எவ்வித குற்றமும் செய்யாத அதிகாரிகளும் சிப்பாய்களும் இவர்களில் அடங்குகின்றர். பணியிலிருந்து நீக்கப்படவுள்ளவர்களுக்கு ஓய்வூதியமோ, ஏனைய கொடுப்பனவுகளோ வழங்கப் படமாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் அரசாங்கத்தினால் அவர்களுக்குச் சம்பளத்தை வழங்க முடியாமல் இருப்பதே இந்த 60 ஆயிரம் இராணுவத்தினரும் பணியிலிருந்து நீக்கப்படுவதற்கான காரணம் என அரசு கூறுகிறது.

# பன்றிக் காய்ச்சல் தடுப்பூசி மருந்தை உடனடியாக அனுப்பி வைக்க கோரிக்கை

பன்றிக் காய்ச்சலுக்கான தடுப்பூசி மருந்தின் கையிருப்பு தீர்ந்துவிட்டதாகத் தெரிவித்து இந்தத் தடுப்பூசி மருந்து ஏற்றுவதை வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக அதிகாரிகள் நேற்று முன்தினம் இடை நடுவில் நிறுத்தியுள்ளார்கள்.

இதனால் தடுப்பூசி போடுவதற்காகச் சென்றிருந்த பெரும் எண்ணிக்கையான மக்கள் ஏமாற்றதுடன் வீடு திரும்ப நேரிட்டுள்ளது.

எனவே இந்தத் தட்டுப்பாட்டை நீக்குவதற்காகப் போதிய அளவு மருந்தினை வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிப் பாளருக்கு அனுப்பிவைக்குமாறு வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சுகாதார அமைச்சரிடம் கோரியுள்ளார்.

இது தொடர்பாக அவர் கடிதம் ஒன்றினை சுகாதார அமைச்சருக்கு அனுப்பி வைத்துள்ளார்.

அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பன்றிக்காய்ச்சல் ஏற்படாமல் தடுப்பதற்காக அதற்குரிய தடுப்பூசியை வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் வந்து போட்டுக்கொள்ளுமாறு ஒலிபெருக்கிகள் மூலமாகக் கிராமப்புறங்களில் மக்களுக்கு அறிவிக்கப்பட் டது.

இதனையடுத்து பெரும் எண்ணிக்கையான மக்கள் நேற்றும் இந்த அலுவலகத்திற்கு வருகை தந்திருந்தார்கள்.

ஆனால் தடுப்பூசி மருந்து முடிபடைந்து விட்டதாகக் கூறி நேற்று முன்தினம் நண்பகலுடன் தடுப்பூசி ஏற்றுவது நிறுத்தப்பட்டது.

இதனால் தடுப்பூசி மருந்தைப் பெற்றுக் கொள்வதற்காக மழையென்றும் பாராமல் தொலைவிடங்களில் உள்ள கிராமங்களில் இருந்து வந்திருந்த பெரும் எண்ணிக்கையான மக்கள் திருப்பி அனுப்பப்பட்டுள்ளார்கள்.

நாடெங்கிலும் பரவியுள்ள பன்றிக் காய்ச்சலினால் 400 க்கும் அதிகமானவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். 23 பேர் உயிரிழந்துள்ளார்கள். வவுனியாவில் 4 பேரும் மன்னாரில் 57 பேரும் இந்த நோயினால் பீடிக்கப்பட்டு வைத்திய சாலைகளில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றனர்.

நாட்டில் நிலவுகின்ற மாரிகாலச் சூழல் காரணமாகத் தொற்றுநோய்கள் பரவக் கூடிய அபாயம் நிலவுகின்றது.

ஆகவே வவுனியா மாவட்ட மக்களுக்குத் தற்போது அவசரமாகத் தேவைப்படுகின்ற பன்றிக் காய்ச்சலைத் தடுப்பதற்கான எச் 1 என் 1 தடுப்பூசி மருந்தினை உடனடியாக இங்குள்ள சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

## வேம்படி பாடசாலை 10 ஆம் திகதி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

க.பொ.த (சாதாரண) பரீட்சை மதிப்பீட்டுப் பணிகள் இடம்பெறுவதால் யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை எதிர்வரும்10 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகுமென பாடசாலை அதிபர் அறிவித்துள்ளார்.

ஏற்கெனவே அறிவிக்கப்பட்டதன் பிரகாரம் நாளை திங்கட்கிழமை ஆரம்பிக்கப்படமாட்டாது எனவும் அன்றைய தினம் சகல ஆசிரியர்களையும் சமுகமளிக்குமாறும் அவர் கேட்டுள்ளார்.

## தரம் -5 மாணவர்களுக்கான இலவச வகுப்பு


(யாழ்ப்பாணம்)

ஜேர்மனியின் வெற்றிமணிப் பத்திரிகையின் ஆதரவுடன் 2011 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் வசதி குறைந்த மாணவர்களுக்கான இலவச வகுப்பு நாளை காலை 8 மணிக்கு ஏழாலை வடக்கு அ.மி.த.க. பாடசாலையில் ஆரம்பமாகவுள்ளது.

இவ்வகுப்புகள் தொடர்ந்து சனி, ஞாயிறு தினங்களில் காலை 9 மணி தொடக்கம் 12 மணிவரை இப்பாடசாலையில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-9-54)

# ஞானிகள் வருகை

## பரமபிதா காட்டிய பாதை



இன்றைய நாளில் ஆண்டவரின் திருக்காட்சி பெருவிழாவை திருச்சபை கொண்டாடுகின்றது. எனவே, இன்றைய நற்செய்தியில் ஞானிகளின் வருகை பற்றி கூறப்படுகிறது. அவற்றை நோக்கினால்,

ஏரோது அரசன் காலத்தில் யூதேயாவிலுள்ள பெத்லகேமில் இயேசு பிறந்தார். அப்போது கிழக்கிலிருந்து ஞானிகள் எருசலேமுக்கு வந்து "யூதர்களின் அரசராகப் பிறந்திருக்கிறவர் எங்கே? அவரது விண்மீன் எழக் கண்டோம். அவரை வணங்க வந்திருக்கிறோம்" என்றார்கள்.

இதைக் கேட்டதும் ஏரோது அரசன் கலங்கினான். அவனோடு எருசலேம் முழுவதும் கலங்கிற்று. அவன் எல்லாத் தலைமைக் குருக்களையும் மக்களிடையே இருந்த மறைநூல் அறிஞர்களையும் ஒன்றுகூட்டி, மெசியா எங்கே பிறப்பார் என்று அவர்களிடம் விசாரித்தான்.

அவர்கள் அவனிடம், "யூதேயாவிலுள்ள பெத்லகேமில் அவன் பிறக்க வேண்டும் ஏனெனில்,

"யூதா நாட்டுப் பெத்லகேமே யூதாவின் ஆட்சி மையங்களில் நீ சிறியதே இல்லை; ஏனெனில், என் மக்களாகிய இஸ்ரயேலை ஆயரென ஆள்பவர் ஒருவர் உன்னி லிருந்தே தோன்றுவார்" என்று இறைவாக்கினார் எழுதியுள்ளார் என்றார்கள். பின்பு ஏரோது யாருக்கும் தெரியாமல் ஞானிகளை அழைத்துக் கொண்டுபோய் விண்மீன் தோன்றிய காலத்தைப் பற்றி விசா ரித்து உறுதி செய்து கொண்டான். மேலும் அவர்களிடம் "நீங்கள் சென்று குழந்தையைக் குறித்து திட்டவட்டமாய்க் கேட்டு எனக்கு அறிவியுங்கள். அப்பொழுது நானும்; சென்று அக்குழந்தையை வணங்குவேன்" என்று கூறி அவர்களைப் பெத்லகேமுக்கு அனுப்பி வைத்தான்.

ஆசான் சொன்னதைக் கேட்டு அவர்கள் புறப்பட்டுப் போனார்கள். இதோ! முன்பு எழுந்த விண்மீன் தோன்றி குழந்தை இருந்த இடத்திற்கு மேல் வந்து நிற்கும் வரை அவர்களுக்கு முன்னேசென்று கொண்டிருந்தது. அங்கே நின்ற விண்மீனைக் கண்டதும் அவர்கள் மட்டில்லாப் பெருமகிழ்ச்சி அடைந் தார்கள்.

வீடிற்குள் அவர்கள் போய்க் குழந்தையை அதன் தாய் மரியா வைத்திருப்பதைக் கண்டார்கள்; நெடுஞ்சாண் கிடையாய் விழுந்து குழந்தையை வணங்கினார்கள்; தங்கள் பேழைகளைத் திறந்து பொன்னும் சாம்பிராணியும் வெள்ளைப் போளமும் காணிக்கையாகக் கொடுத்தார்கள். ஏரோதிடம் திரும்பிப் போக வேண்டாம் என்று கனவில் அவர்கள் எச்சரிக்கப் பட்டதால் வேறுவழியாகத் தங்கள் நாடு திரும்பினார்கள்.

# சைக்கிளை பறித்துச் செல்ல முயன்ற சம்பவம் முறியடிப்பு

(கரவெட்டி)

வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரிக்கு முன்பாக உள்ள வீதியில் வைத்து தனியார் கல்வி நிலையத்திற்கு சென்று கொண்டிருந்த மாணவி ஒருவரின் துவிச்சக்கர வண்டியை வலுக்கட்டாயமாக பறித்துக் கொண்டு செல்லமுற்பட்ட சம்பவமொன்று அண்மையில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் குறித்து தெரியவருகையில்,

சம்பவதினம் பிற்பகல் 3.30 மணிக்கு குறித்த மாணவி தனியார் வகுப்பிற்குச் சென்று கொண்டிருந்த வேளை திருடன் ஒருவன் குறுக்கிட்டு இம்மாணவியின் துவிச்சக்கரவண்டியை பயமுறுத்தி அபகரித்துள்ளார்.

அபகரிக்கப்பட்ட துவிச்சக்கர வண்டியை குறித்த திருடன் கொண்டு செல்லமுற்பட்ட வேளை இவ்வீதியால் மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞர்கள் இதனை அவதானித்து திருடனை விரட்டிச் சென்றுள்ளனர்.

அத்திருடன் வீதியில் துவிச்சக்கரவண்டியை போட்டுவிட்டு அங்குள்ள பற்றை வழியூடாக மறைந்துவிட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதுபோன்ற சம்பவங்கள் வடமராட்சிப் பகுதியில் ஆங்காங்கே நடைபெற்று வருவதனால் இவ்வாறான சம்பவங்கள் நடைபெறாமல் தவிர்ப்பதற்கு மக்கள் விழிப்புடன் இருக்கவேண்டுமென கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (ஸ்ரீ-4-24)


# அதிபர் பதவி வெற்றிடம்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கல்வி வலயத்திற்குட்பட்ட யா/ பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரிக்கு அதிபர் பதவி வெற்றிடமாகவுள்ளது.

இவ்வெற்றிடத்திற்கு வலிகாமம் கல்வி வலயத்தைச் சேர்ந்த இலங்கை அதிபர் சேவை தரம் 1,2-I ஐச் சேர்ந்தவர்கள் விண்ணப்பிக்க முடியும்.

இதற்கமைய மாதிரி விண்ணப்பப் படிவத்தை வலயக் கல்வி அலுவலகத்தில் பார்வையிட்டு அதன்படி சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் உரிய முறைப்படி வலயக் கல்வி அலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ஆ.ராஜேந்திரன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-4)



திருவாதிரையை முன்னிட்டு நல்லூர் சிவன் கோயில் தேர்த்திருவிழாவின் போது பக்தர்கள் புடைசூழ சுவாமி தேரில் உலாவருவதைப் படத்தில் காணலாம். (படம்:-என்.குமார்)

# தமிழக அகதி முகாம்களில் கண்காணிப்பு பணிகள் தீவிரம்

(இராமநாதபுரம்)

தமிழகத்திலுள்ள அகதிகள் வெளிநாடு செல்வது மற்றும் தடைசெய்யப்பட்ட பகுதிகளில் சர்வ சாதாரணமாக நுழைவது போன்ற சம்பவங்கள் அதிகரித்து வருவதை தொடர்ந்து பாதுகாப்பை பலப்படுத்தும் முயற்சியின் முதற்கட்டமாக அகதிகள் முகாம்களின் கண்காணிக்கும் பணி தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த சில மாதங்களாக தமிழக கடலோர பகுதிகளில் அத்துமீறல் அதிகரித்து வருகின்றன.

மீனவர்கள் மற்றும் அகதிகள் போர்வையில் சிலர் ஊடுருவுவதும் சிலர் இலங்கை, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளுக்கு சர்வ சாதாரணமாக செல்வதுமாக உள்ளனர்.

கடல் அட்டை கடத்தலும் சர்வசாதாரணமாக நடந்து வருகிறது. தடை செய்யப்பட்ட தீவுப் பகுதிகளுக்கு செல்வோரை கண்காணிப்பதிலும் தொய்வு ஏற்பட்டது.

தீவுக்கு செல்வோர் சுற்றுலா பயணிகளா, கடத்தலில் ஈடுபடுபவர்களா என தெரியாத நிலை ஏற்பட்டது.

இந்நிலை நீடித்தபோதுதான் தீவுக்கு சுற்றுலா சென்ற படகு கவிழ்ந்து 15 க்கும் மேற்பட்டோர் பலியாகினர். இதன்பின்தான் தீவுகளுக்கு பலர் சர்வசாதாரணமாக செல்வது தெரியவந்துள்ளது.

கடத்தல், ஊடுருவல், பாதுகாக்கப்பட்ட பகுதி களில் தடையின்றி சென்று வருதல் போன்ற அத்துமீறல் அதிகரித்துள்ளதை தொடர்ந்து பாதுகாப்பை பலப்படுத்த அந்தந்த பிரிவு அதிகாரிகளிடத்திலிருந்து உத்தரவு வந்துள்ளது.

இதை தொடர்ந்து முதற்கட்டமாக வெளிநாடுகளுக்கு ஆட்களை அழைத்து செல்லும் முகவர்களை பிடிக்க அகதிகள் முகாமை கண்காணிக்கும் பணியில் கியூபிரிவு பொலிசார் ஈடுபட்டுள்ளனர். (ஸ்ரீ-2)

# வடமாகாண உத்தியோகத்தர்கள் நியமனம்



வடமாகாண சபையின் கீழான உத்தியோகத் தர்களுக்கான நியமனங்களை வழங்கும் வைபவம் நேற்று கொழும்பிலுள்ள வடமாகாண ஆளுநரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுகைத் தொழில் அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

இதன் பிரகாரம் நேற்றைய தினம் உள்ளூராட்சி சபைகளுக்கான செயலாளர்கள் 10 பேருக்கும், விளையாட்டுத்துறை உத்தியோகத்தர்கள் 17 பேருக்கும், விளையாட்டுத்துறை பயிற்சியாளர்கள் 3 பேருக்கும், காணி உத்தி யோகத்தர்கள் 11 பேருக்கும் உரிய நியமனங்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி ஆகியோரால் வழங்கப்பட்டது.

நியமனங்களைப் பெற்றுக் கொண்ட உத்தியோகத்தர்கள் மத்தியில் கருத்துத் தெரிவித்த அமைச்சர், இந்த நியமனங்களை வெறுமனே பணியாக மாத்திரம் மேற்கொள்ளாமல் சமூக அக்கறையுடன் சமூகக் கடமையாகவும் மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

எப்போது என்ன நடக்குமோ என்ற பதற்றத்துடன் கூடிய ஒரு காலம் கடந்து இப்போது சமூக மாற்றமொரு சூழ்நிலை நாட்டில் உருவாகியுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# ஏமாந்த திருடன்

(கொழும்புத்துறை)

சுன்னாகம் சந்தைக்கு சென்ற வயோதிபப் பெண் ஒருவரை தள்ளிவிழுத்தி விட்டு கழுத்தில் இருந்த சங்கிலியை அறுத்த சம்பவமொன்று நேற்றுமுன்தினம் குறித்த சந்தைப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது ,

கறுப்புக் கண்ணாடி அணிந்து மோட்டார் சைக்கிளில் வந்த இரண்டு இளைஞர்கள் சுன்னாகம் சந்தையில் மரக்கறி வாங்கிக் கொண்டிருந்த வயோதிபப் பெண் ஒருவரை தள்ளிவிழுத்திவிட்டு சங்கிலியை அறுத்துச் சென்றுள்ளனர்.

அறுக்கப்பட்ட சங்கிலி கவரிங் என்பதை இத் திருடர்கள் அறிந்திருக்கவில்லை என்பது நகைச்சுவையான விடயம். (ஸ்ரீ-4-51)

# தண்ணீரில் ஓடும் காரை தயாரிக்க டாடா நிறுவனம் முடிவு

இந்தியாவில் கார் வாங்கும் நடுத்தர வருமானம் மக்களின் எண்ணிக்கை அதி கரித்துள்ளது. அவர்களைக் குறி வைத்து டாடா நிறுவனம் ஒரு இலட்சம் ரூபாய்க்கு நனோ வகை கார்களை தயாரித்து அறிமுகம் செய்தது.

அடுத்த கட்டமாக தண்ணீரில் ஓடும் காரை தயாரிக்க டாடா நிறுவன தலைவர் ரத்தன் டாடா முடிவு செய்துள்ளார்.

இதற்காக அவர் முதல் கட்டமாக 75 கோடி ரூபாவை முதலீடு செய்துள்ளார்.

தண்ணீரில் ஓடும் காரை வெற்றிகரமாக தயாரிக்க அமெரிக்கா தொழில் நுட்பம் ஒன்றை டாடா நிறுவனம் பெற்றுள்ளது.

அதன் படி எத்தகைய தண்ணீரிலும் கார் இயங்கும் வகையில் உருவாக்கப்படுகிறது.

தண்ணீரில் ஓடும் காரின் விலை எவ்வளவு என்று இன்னும் நிர்ணயிக்கப்படவில்லை. என்றாலும் சர்வதேச கார் நிறுவனங்களின் போட்டிகளை சமாளிக்கும் வகையில் விலை இருக்கும் என்று கூறப்படுகிறது.

இவ்வாண்டை சர்வதேச வேதியியல் ஆண்டாக ஐ.நா. நிறுவனம் அறிவித்துள்ளது. எனவே டாடா நிறுவனத்தின் தண்ணீரில் ஓடும் கார் தயாரிப்புக்கு உலக அளவில் ஒத்துழைப்பு கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ஸ்ரீ-2)



காஷ்மீரில் கடும் பனிப்பொழிவு காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. ஸ்ரீநகர் -ஜம்மு இடையே போக்குவரத்து பேரூந்துகள் நிறுத்தப்பட்டதால் ஸ்ரீநகர் பேரூந்து நிலையத்தில் நிறுத்தப்பட்டுள்ள பேரூந்துகள் மீது வெள்ளை கம்பளம் விரித்தது போல் பனி உறைந்துள்ளது.

# ஐ.பி.எல். ஏலத்தில் முதற் பிரிவில் கங்குலி

(புதுடில்லி)

நான்காவது ஐ.பி.எல் தொடருக்கான ஏலத்தில் கங்குலி, லக்ஸ்மன் ஆகியோர் தங்களது அடிப்படை விலையை உயர்த்திக் கொண்டுள்ளனர். இருவரும் முதற் பிரிவில் இடம்பிடித்துள்ளனர்.

இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பி.எல்) சார்பில் 2008ம் ஆண்டு முதல் 8 அணிகள் பங்கேற்ற இருபது-20 கிரிக்கெட் தொடர் நடந்தது. இதில் பங்கேற்ற வீரர்களின் ஒப்பந்த காலம் முடிபடைந்ததையடுத்து நான்காவது தொடரில் வீரர்களுக்கான புதிய ஏலம் ஜனவரி 8 மற்றும் 9ஆம் திகதிகளில் பெங்களூரில் நடக்கிறது. இம்முறை 10 அணிகள் பங்கேற்கும் இத் தொடருக்கான ஏலத்தில் மொத்தம் 350 வீரர்கள் உள்ளனர். வீரர்கள் பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பிரிவுக்கும் ஏற்ப ஏலத் தொகை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

இதன்படி இந்தியாவின் யுவராஜ், மேற்கிந்தியத் தீவுகள் அணியின் ஹயில், லாரா, இங்கிலாந்தின் பிரோட், அன்டர்சன், சுவான், பீற்றர்சன், இலங்கையின் டில்சான், ஜெயவர்த்தன ஆகியோருக்கு அதிகபட்சமாக ரூபாய் 1.84 கோடி நிர்ணயம் செய்யப்பட்டது.

முதல் மற்றும் மூன்றாவது தொடர்களில் கொல்கத்தா அணியில் அதிக ஓட்டங்கள் குவித்த நட்சத்திர வீரர் கங்குலி மூன்றாவது பிரிவுக்கு (ரூ. 91 இலட்சம்) தள்ளப்பட்டு இருந்தார். ஐ.பி.எல் விதிப்படி ஒரு வீரர் வேண்டுமானால் தனது தரத்தை (பிரிவு) உயர்த்திக் கொள்ளலாம். இதன்படி ஏற்கனவே கும்ளே, டிராவிட் ஆகியோர் தங்களை முதற் பிரிவில் இணைத்துக் கொண்டனர்.

இந்த வரிசையில் கங்குலி, லக்ஸ்மன் ஆகியோரும் தங்களை முதற் பிரிவில் சேர்த்துள்ளன்ர். இதனால் இந்த வீரர்களை ஏலத்தில் எடுக்க விரும்புபவர்கள் குறைந்தது ரூபாய் 1.84 கோடி ரூபாய் தர வேண்டும்.

இது குறித்து ஐ.பி.எல் அணி ஒன்றின் மூத்த நிர்வாகி ஒருவர் கூறுகையில்,

"பொதுவாகவே இருபது-20 கிரிக்கெட் வித்தியாசமானது. அதேநேரம் கங்குலி, லக்ஸ்மன் ஆகியோர் சாதனை வீரர்கள். அதனால் தான் மூன்றாவது பிரிவில் இடம்பெற்றிருப்பதை அவர்களால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

இதனால் ஐ.பி.எல் விதிப்படி தங்களது பிரிவை உயர்த்திக் கொண்டுள்ளனர். இவர்களுக்கு என்ன தரம் என்பதை அணி உரிமையாளர்கள்தான் முடிபு செய்ய வேண்டும்" என்றார்.

# போதையில் நடுவர் ஐ.சி.சி. விளக்கம்

(டர்பன்)

நடுவர் ஸ்டீவ் டேவிஸ் குடிபோதையில் இருந்ததாகத் தென்னாபிரிக்கா தரப்பில் புகார் எதுவும் அளிக்கப்படவில்லை என ஐ.சி.சி தெரிவித்துள்ளது.

டர்பனில் இந்தியா - தென்னாபிரிக்கா அணிகள் மோதிய இரண்டாவது டெஸ்ட் போட்டி நடைபெற்றது. இதில் இந்திய அணி 87 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இப்போட்டியில் நடுவராகச் செயற்பட்ட ஸ்டீவ் டேவிஸ் (அவுஸ்திரேலியா) சர்ச்சைக்குரிய முறையில் தீர்ப்பளித்தார். தென்னாபிரிக்காவின் டிவில்லியர்ஸ், பௌச்சருக்குத் தவறாக எல்.பி.டபிள்யு கொடுத்தார். தவிர ஸ்ரையன் பந்தில் சகிர்கானுக்கு எல்.பி.டபிள்யு கொடுக்க மறுத்தார்.

இதனால் ஆத்திரமடைந்த சில தென்னாபிரிக்க வீரர்கள் நடுவர் ஸ்டீவ் டேவிஸ் மீது புகார் கூறினர். இவர் டர்பன் போட்டியின் போது மது அருந்தியிருந்ததாகக் குற்றம் சாட்டினர். இதுபற்றி வீரர்கள் சார்பில் சர்வதேச கிரிக்கெட் சபையிடம் (ஐ.சி.சி) புகார் கொடுக்கவிருப்பதாகத் தென்னாபிரிக்காவிலிருந்து வெளியாகும் பீல்ட் பத்திரிகை செய்தி வெளியிட்டது.

இதனை ஐ.சி.சி மறுத்துள்ளது. இது குறித்து ஐ.சி.சி செய்தித் தொடர்பாளர் கோலின் கிப்சன் கூறுகையில்,

"ஸ்டீவ் டேவிஸ் மீது எந்தப் புகாரும் அளிக்கப்படவில்லை. தென்னாபிரிக்கக் கிரிக்கெட் சபையும் ஐ.சி.சியிடம் எதுவும் கூறவில்லை. இது தொடர்பான செய்திகள் எல்லாம் முட்டாள்தனமாக உள்ளது" என்றார்.

ஐ.சி.சியிடம் எவ்விதப் புகாரும் அளிக்கவில்லை என்பதைத் தென்னாபிரிக்கக் கிரிக்கெட் சபையின் ஊடக அதிகாரி மைக்கல் ஓவனும் உறுதி செய்தார்.

# மட்டக்களப்பில்...

தெரிவித்துள்ளது.

இம்மாவட்டத்தில் 579 குடும்பங்களைச் சேர்ந்த 17 ஆயிரத்து 477 பேர் இடம்பெயர்ந்து 65 முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அதேவேளை உறவினர், நண்பர்களின் வீடுகளில் 15 ஆயிரத்து 809 குடும்பங்களைச் சேர்ந்த 65 ஆயிரத்து 84 பேர் இடம்பெயர்ந்து தங்கியுள்ளதாகவும் மட்டக்களப்பு மாவட்டச் செயலகம் தெரிவித்துள்ளது.

இதனிடையே நேற்றுப் பிற்பகல் அனர்த்த முகாமைத்துவ பிரதியமைச்சர் துலிப் விபேசேகர மட்டக்களப்பு மாவட்டத்திற்கு விஜயம் செய்துள்ளார்.

இதேவேளை எதிர்வரும் சில தினங்களுக்கு வடக்கு, கிழக்கு, வடமத்திய மற்றும் ஊவா மாகாணங்களில் அதிக மழை பெய்யுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-5)

# வரலாறு படைக்குமா இந்திய அணி?

## மூன்றாவது டெஸ்ட் இன்று ஆரம்பம்

இந்தியா, தென்னாபிரிக்க அணிகள் மோதும் 3வது டெஸ்ட் இன்று ஆரம்பமாகிறது. இப்போட்டியில் வெற்றி பெற்று தென்னாபிரிக்க மண்ணில் முதல் முறையாக டெஸ்ட் தொடரைக் கைப்பற்ற இந்திய அணி காத்திருக்கிறது.

தென்னாபிரிக்காவிற்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணி 3 டெஸ்ட், ஒரு இருபது-20 மற்றும் 5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்கிறது. முதல் போட்டியில் தென்னாபிரிக்கா வென்றிருந்தது. இரண்டாவது போட்டியில் இந்தியா வெற்றி பெற தொடர் 1:1 எனச் சமநிலையை எட்டியது.

இத்தொடரின் வெற்றியாளரை முடிபு செய்யும் தீர்க்கமான 3வதும் மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி இன்று கேப்டவுன் நியூலாண்ட்ஸ் மைதானத்தில் ஆரம்பமாகிறது.

டர்பன் டெஸ்டில் இந்திய அணியின் துடுப்பாட்டம் சொல்லிக் கொள்ளும்படி அமையவில்லை. சேவாக்குடன் இணைந்து களமிறங்கக் கிடைத்த வாய்ப்பை முரளி விஜய் இரண்டு இன்னிங்ஸிலும் (28 ஓட்டங்கள்) வீணடித்தார். இதனால் காயம் குணம் அடைந்துள்ள காம்பீர் மீண்டும் களமிறங்குவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நடுத்தர வரிசையில் நான்கு இன்னிங்ஸில் 84 ஓட்டங்கள் மட்டும் எடுத்த டிராவிட், சச்சினுடன் சேர்ந்து அணிக்குக் கைகொடுக்க வேண்டிய கட்டாயத்திலுள்ளார். ரெய்னாவுக்குப் பதில் இடம்பெற்ற புஜாரா (19,10) அதிக ஓட்டங்கள் எடுக்கவில்லை. எனினும் இவரது வாய்ப்புத் தொடருமெனத் தெரிகிறது.

கடந்த முறை 96 ஓட்டங்கள் எடுத்து அணியைக் காப்பாற்றிய லக்ஸ்மன், தோனி ஆகியோர் துடுப்பாட்டத்திற்குச் சாதகமான ஆடுகளத்தில் சாதிக்க முயற்சித்தால் வலுவான ஓட்டத்தைப் பதிவு செய்யலாம்.

# குடாநாட்டில்...

சட்டத்திற்கமைய தண்டிக்கப்படுவார்கள் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

புதிய ஆண்டின் ஆரம்பத்திலிருந்து இந்த நடைமுறை இறுக்கமாக கடைப்பிடிக்கப்படும் என கடற்தொழில் திணைக்களத்தின் யாழ் உதவிப் பணிப்பாளர் தர்மலிங்கம் தெரிவிக்கின்றார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

மீன்வளத்தையும் கடல்வளத்தையும் பாதுகாக்கத்தக்க வகையிலான மீன்பிடி முறைகள் நாடளாவிய ரீதியில் மீனவர்களினால் கைக்கொள்ளப்பட வேண்டும் என்று ஏற்கெனவே அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும் போர்க்காலச் சூழல் காரணமாகப் பாதுகாப்புக் காரணங்களுக்காக கடல்வலயத் தடைச் சட்டம் அமுலில் இருந்ததனால் வடபகுதியில் மீனவர்கள் இரவு நேரத்தில் மீன்பிடிப்பதற்குச் செல்ல முடியாமல் இருந்தது.

பகல் வேளையில் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே அவர்கள் மீன்பிடி தொழிலில் ஈடுபட்டிருந்தார்கள். அத்துடன் மீனவர்களிடம் மீன்பிடி தொழிலுக்குத் தேவையான வலைகள், உபகரணங்கள் என்பன இல்லாமல் இருந்ததனால் மீன்பிடிப்பது தொடர்பான சட்ட விதிகளில் நெகிழ்ச்சிப் போக்குக் கடைப்பிடிக்கப்பட்டிருந்தது.

இப்போது கடல் வலயத் தடைச்சட்டம் நீக்கப்பட்டு மீனவர்கள் தடையின்றி மீன் பிடிப்பதற்குச் செல்வதனால் மீன் வளத்தை பாதுகாக்கின்ற முறையிலான மீன்பிடி முறைமைகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.

டைனமைட் பயன்படுத்துவது, மீன்களை மயக்கமடையச் செய்யும் மருந்துகளைப் பயன்படுத்தி மீன்பிடிப்பது, தடை செய்யப்பட்ட வலைகளைப் பயன்படுத்துவது, அழிந்து செல்கின்ற மீன் இனங்களாகிய டொல்பின், கடலட்டை போன்ற கடல்வாழ் உயிரினங்களை விற்பனைக்காகவும் நுகர்வுக்காகவும் பிடிப்பது, முறையாகப் பதிவு செய்யப்படாத கடற்கலன்கள் மீன்பிடிப்பதற்காகப் பயன்படுத்துவது என்பன தடை செய்யப்பட்டுள்ளதாக யாழ்.மீன்பிடி நீர்வழங்கல் திணைக்களப் பணிப்பாளர் தெரிவித்தார். (ந-5)

# ஆணைக்குழுவின்...

ஆணைக்குழுவின் ஊடகப்பேச்சாளர் லக்ஷ்மன் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இதனிடையே நல்லிணக்க ஆணைக்குழு எதிர்வரும் 7ஆம் திகதி புத்தளம் மாவட்டத்திலும் 8ஆம் 9ஆம் திகதிகளில் மன்னார் மாவட்டத்திலும் சாட்சிகளைப் பதிவு செய்யவுள்ளது.

இந்த நிலையில் ஐக்கிய நாடுகள் செயலாளரின் ஆலோசனைக்குழு மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு ஆகியவற்றின் செயற்பாடுகள் தொடர்பாக ஊடகப்பேச்சாளர் லக்ஸ்மன் விக்கிரம சிங்காவிடம் வினைவிய போது அந்த ஆலோசனைக் குழு இலங்கைக்கு வர அரசாங்கம் அனுமதி வழங்கும் பட்சத்தில் அதன்படி சாட்சியங்களை பதிவு செய்ய உள்ளதாகக் குறிப்பிட்டார். (ந-5)


## கண்ணீர் அஞ்சலி

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி
அன்னதான சபையின் ஆரம்பகால நிறுவுனர்
திலகங்களில் ஒருவரும், முன்னாள் தலைவரும்,
நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய அறங்காவலர்
சபை முன்னாள் உறுப்பினரும், பிரபல வர்த்தகரும்,
சிறந்த சமய, சமூக சேவையாளருமாகிய

### ஸ்ரீமான் V.K.T தம்பிமுத்து

அவர்களின் மறைவையொட்டி எமது
கண்ணீர்த் துளிகளைக் காணிக்கையாக்குகின்றோம்.
அமரரின் ஆத்மா சாந்தியடைய ஸ்ரீ நாகபூஷணி
அம்மனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி!

பிரதான சாலை,
நயினாதீவு-02
தொலைபேசி: 0213213575

நிர்வாகம்
நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி
அமுதசுரபி அன்னதான சபை

(கி-2034)



## ஆத்ம சாந்திப் பிரார்த்தனை

எமது பாடசாலை ஆசிரியை
திருமதி மீ.யோகரட்ணம்
அவர்களின் அன்பு மாமியார்
திருமதி தம்பிப்பிள்ளை இராசம்மா
அவர்களது ஆத்மா சாந்திக்காக
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/திருநெல்வேலி இ.த.க.பாடசாலை

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்

(இ)

**வேலைவாய்ப்பு**

கனடாவை தலைமையகமாகக் கொண்ட 120 நாடுகளில் வலையமைப்பைக் கொண்டு இயங்கும் சர்வதேச நிறுவனத்தில் பல வேலைவாய்ப்புகள் உள்ளன. G.C.E.O/L,A/L சித்தியடைந்த 18 வயதுக்கு மேற்பட்டவர்கள் விண்ணப்பிக்க முடியும். ஆண் பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். யாழ். தவிர்ந்த ஏனைய மாவட்டத்தினருக்கு தங்குமிட வசதிகள் செய்துதரப்படும்.

தொடர்புகளுக்கு: 0214900001, 0776404163 (3339)

புதிய பாடத்திட்டத்திற்கமைய.... 2013 2012 2011 A/L

பொருளியல்- நான்காவது புதிய வெளியீடு

**உயர்தரப் பொருளியல்**

1500 பல்தேர்வு வினாக்கள் ,கட்டுரை ,கட்டமைப்பு வினாக்கள்

JANUARY 08 — DMI — ஊடாக பெறலாம் விலை 1000/=

(சி-2030)

**By : S. S. சிறி B.Com**

நீங்களும் தகவல்தொழில்நுட்ப, வணிக துறையில் சாதனை படைக்கலாம்.

Closing Date 05.01.2011

A/L ? Pass / Fail

BIT University of Colombo | CompTIA A+ Oracle Campus-Java Government Scholarship. | CIMA-UK 1800/= Per Module

USA, UK பல்கலைக்கழகங்களில் Master Degree



Free : BCS-UK, IELTS, Hardware, ICDL

SMS your name & course to 772 395 895 & Get Schol.

MCS Supported By UNDP/JRRP

புலமைப் பரிசிலுக்கும் மேலதிக விபரங்களுக்கும் நேரில்,

324, Palaly Road,Campus Junction,Jaffna.

**WANTED RESIDENTIAL BUILDING FOR RENT**

"A CORPORATE OFFICE NEEDS A DECENT RESIDENTIAL BUILDING ON RENT FOR ITS HEAD IN CENTRAL JAFFNA WITH FOUR BED ROOMS, LARGE LIVING/ GUEST AREA SPACIOUS LAWNS IN FRONT AND BACK OF THE HOUSE WITH CLEAR TITLE ON A MAIN ROAD.INTERESTED PARTIES MAY SEND THEIR OFFERS IMMEDIATELY IN CONFIDENCE C/O 89, BROWN ROAD,JAFFNA".

(C-2016)

## இலங்கை...

பயணிப்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கைக் கடற்படையினர் ஆயிரக்கணக்கான கடல் மைலுக்குச் சென்று செயற்படக் கூடிய இயலுமை இருப்பதாக சர்வதேசக் கடல் படை ஏற்றுக் கொண்டிருப்பதால் வரலாற்றில் முதல் முறையாக இந்த கடல் மார்க்கங்களை பாதுகாக்கும் கூட்டு நடவடிக்கையில் இந்திய மற்றும் இலங்கை கடல்படையினர் ஈடுபடவுள்ளனர்.

இதுதொடர்பான இணக்கப்பாடுஅண்மையில்இடம்பெற்ற இந்தியமற்றும்இலங்கைப் பாதுகாப்பு செயலாளர்களுக்கிடையிலானபேச்சுவார்த்தையின் போதுஎட்டப்பட்டது.

சோமாலிய கடற் கொள்ளையர்கள் படிப்படியாக இந்து சமுத்திரத்திற்குள்பிரவேசித்து வருவது குறித்தும் இதன் போது கவனம் செலுத்தப்பட்டது.

இந்தநிலையில்கூட்டுகூற்படை நடவடிக்கைகள் தொடர்பான விடயங்கள் இம்மாதம்நடுப்பகுதியில் புதுடில்லியில்நடைபெறும் இலங்கை -இந்தியப்பாதுகாப்பு மா நாட்டில் தீர்மானிக்கப்படவுள்ளது. (ந-5)

## அல்வாயில் பெண் கடத்...

வில் வெள்ளைவானில் வந்த இனந்தெரியாத நபர்களினால் தனது தாய் கடத்தப்பட்டதாகவும் இது குறித்து விசாரித்து தம்மை அவர்கள் ஆயுதங்களைக்காட்டி அச்சுறுத்தியதாகவும் அவர் தனது முறைப்பாட்டில்தெரிவித்துள்ளார்.

இதேவேளை தந்தை இறந்த பின்னர் தனது தாய் கடையொன்றை நடத்திவருவதாகவும்எவருடனும்பகையைக்கொண்டிருக்கவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ந-24)

சிகரம் | Dan தமிழ் ஒளி | WWW.JAFFNATODAY.COM

ஆகிய ஊடகங்களில் நேரடி செய்முறைப் பயிற்சியுடன்

யாழ் மண்ணில் சர்வதேச அங்கீகாரம் பெற்ற

**ஊடகக் கற்கைநெறிகள்**

3ம் அணி பதிவுகள் ஆரம்பம்

அச்சு ஊடகவியல்

செய்தி சேகரிப்பு, எழுதுதல், நேர்காணல், சித்திரிப்பு

தொலைக்காட்சி ஊடகவியல்

வீடியோ படப்பிடிப்பு, நிகழ்ச்சித் தயாரிப்பு, எழுத்துருவாக்கம்,Editing

வானொலி ஊடகவியல்

அறிவிப்புக்கலை, எழுத்துருவாக்கம் நிகழ்ச்சித் தயாரிப்பு, Editing



கணினி, இணையப் பயிற்சி

Microsoft Office, Internet, Email, Social Media etc.

ஒளிப்படக்கலை (Photography)

SLR, Digital Camera Techniques Photo Editing, Studio Lab Training

சந்தைப்படுத்தல் (Marketing)

தொடர்பாடல் திறன் விருத்தி, விற்பனை நுட்பங்கள், விளம்பரக்கலை

Graphic Designing

பக்க / விளம்பர வடிவமைப்பு, மடல்கள், வரைகலை [PAGE MAKER, PHOTOSHOP, INDESIGN]

தொடர்பாடலுக்கான ஆங்கிலம்

சொற்களஞ்சிய விருத்தி, வாசிப்பு, வசன அமைப்பு, பேச்சுத்திறன், எழுத்து

10 வருட அச்சு, வானொலி, தொலைக்காட்சி, இணைய ஊடக அனுபவத்துடன், சர்வதேச அங்கீகாரம் பெற்ற ஒரே ஊடகப் பயிற்றுவிப்பாளர் கோ.றுஷாங்கன் தலைமையிலான அனுபவமிக்க ஆசிரியர் குழாம்

3மாத கற்கைநெறி + 3மாத பணியிடப் பயிற்சி
பயிற்சிநெறி முடிவில் தொழில் உத்தரவாதம்

சுயவிபரக்கோவை, தொடர்பு இலக்கத்துடன் விண்ணப்பங்களை அனுப்பி வையுங்கள்

கற்கைநெறி விளக்கக் கருத்தரங்கு 09/01/2011 ஞாயிறு காலை 10 மணிக்கு

Computer Lab, Library Audio - Video Studio

**சிகரம் ஊடக இல்லம்**

இல.22L, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம், தொ.பே.: 021 300 80 60, நேரடி: 077 77 33 931, மின்னஞ்சல்: SikaramMedia@gmail.com

**CONSULATE GENERAL OF INDIA, JAFFNA**

"WANTED LIBRARIAN FOR CONSULATE GENERAL OF INDIA, JAFFNA. EXPERIENCED PERSONS WITH BACHELOR'S DEGREE IN LIBRARY SCIENCE, FLUENCY IN ENGLISH AND TAMIL WITH WORKING KNOWLEDGE OF SINHALA MAY IMMEDIATELY APPLY IN CONFIDENCE TO

THE CONSULATE GENERAL OF INDIA,
280, PALALY ROAD, JAFFNA"

(C-2015)

BRITISH COUNCIL

**British College of English**

**IELTS**



IELTS Registration Centre for British Council

நீங்கள் எங்கு IELTS படித்திருந்தாலும் எமது நிலையத்தில் வந்து பதிவு செய்து பரீட்சை எடுக்கமுடியும்.

We Provide
* A Placement test which determines to which level to which level of English you belong.
* Updated course modules.
* Materials approved by British Council Which are quite new incliding Cambridge 7
* 20 Practice test .
* Frees IELTS pack & Mock Exams .

கடந்த August 2010 இல் நடைபெற்ற IELTS பரீட்சைகளில் எமது கல்லூரியில் படித்துப் பரீட்சை எழுதிய மாணவர்களில் ஒருவர் Band - 8 இருவர் 7.5 நால்வர் 6.5 எடுத்து சாதனைபுரிந்துள்ளார்கள் என்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

| Course Schedule | Sat & Sun |
|---|---|
| Duration | 10 Weeks |
| Time | 8.30 to 11.30<br>2.00 to 5.00 p.m |
| Commencement | 08.01.2011 |

எமது கல்லூரிக்கு யாழ்ப்பாணத்தில் வேறு கிளைகள் இல்லை.

**வகுப்புக்கள் 08.01.2011இல் ஆரம்பமாகும்.**

**BRITISH COLLEGE OF ENGLISH**

f43,Adiyapatham Road , Thirunelvely.

(திருநெல்வேலிச் சந்திக்கும் கல்வியங்காட்டுச் சந்திக்கும் இடையில்)

T.P - 0213216027 - 0778803887

**CHEMISTRY COURT**

80, ARASADY ROAD, JAFFNA.

இரசாயனவியல் - 2013 A/L

English Medium Classes

MON, WED, FRI (3.30-4.30) P.M

தமிழ் மொழி மூல வகுப்புகள்

MON, WED (4.30-5.30) P.M

By: RAJAH ( B.Sc (Chemi.Spl))

(3336)

**A/L CHEMISTRY**

மீள் பரீட்சார்த்திகளுக்குரியது

1. Physical (Theory) Sat,Sun 3.45-5.00 PM
2. Inorganic (Theory) Sat,Sun 5.00-6.00 PM
3. Organic (Theory) Tue,Thur 12.00-1.15 PM
4. General, Basic Past Paper Tue, Thur 1.15-2.15 PM
5. மாதிரி வினாவிடை Fri 12.00 -1.15 PM

(3330)

க.சிவத்திரன் B.Sc (Hons)

**NEW SCIENCE HALL**

[2013 ⇨05-01.2011]

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.01.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.